# கலைமன்றம்





புத்திக் கூர்மை மிக்க பாப்பா சக்திக்கு மீறிய படிப்பா உனக்கு?

ஆர். எஸ். சுப்பையா சென்னை

# கலைமன்றம்



PUBLIC LIBRARY ... MADRAS

மலர் 2 — மே 21 — இதழ் 21

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| கார்ட்டூன் | | 2 |
| எங்கள் பணி | (தலையங்கம்) | 3 |
| காதலும், கண்ணீரும் | | 5 |
| மக்கள் செல்வம் | | 12 |
| வானம்பாடி | | 13 |
| தயக்கம் ஏன்? | (கவிதை) | 16 |
| தொடரும் | | 17 |
| குறளின்பம் | | 25 |
| ஏனோ நின்றேன் | (கவிதை) | 30 |
| எங்கே? | | 31 |
| இரஷ்ய நாடக இலக்கியம் | | 38 |
| மங்கியதோர் நிலவினிலே | | 46 |
| ஏன்......? | | 53 |
| இன்பக் கண்ணீர் | | 55 |
| ஆசை அத்தான் | | 59 |
| காதல் உள்ளம் | | 68 |
| புகைப் படக் கலைப்பகுதி | | 73 |
| உலகைச் சுற்றி | | 75 |
| திரை உலகம் | | 78 |
| கேளுங்கள், கொடுக்கப்படும் | | 80 |

இதில் வரும் கதை, கவிதை, நாடகம்
யாவும் கற்பனையே.



ஊட்டியில் நடந்த வெள்ளைக்கார நாய்களின் கண்காட்சியில் வெள்ளைக்காரியின் நாய்க்குப் பரிசு வழங்கும்போது கவர்னர் பிரகாசா தமிழ்நாட்டு நாய்களும், போட்டியில் கலந்து கொள்ளவேண்டுமென்றார். கவர்னரின் கவலை எப்படி?




அமெரிக்கக் கோஷ்டிநாடுகள் ராஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பாவில் படைதிரட்ட—எதிராக ரஷ்யக் கோஷ்டிநாடுகள் படைதிரட்ட—இடையே உலகம் அழுகிறது. புல்கானின் வார்ஷாவுக்கு போயிருக்கிறார். வல்லரசுகளின் கவலை எப்படி?

விருப்புடன் வருக என வாழ்த்துபவர் வாழ்த்தட்டும்.
வெறுப்புடன் வேண்டாமென்போர் விருந்துண்டு வாழட்டும்.

# கலைமன்றம்

சென்னை | 21—5—55 | சனி

# எங்கள் பணி!

நீண்டுகிடக்கும் நிலப்பாப்பை நெருக்கி—பரந்துபரவி வாழும் மனித இனத்தின் பிளவைக் குறுக்கி—எல்லோரும், எவற்றையும், எளிதில் உணர்ந்து ஒருவரை யொருவர் உடனுக்குடன் புரிந்து கொண்டு உலகை இயக்கும் இணையற்ற—அன்ருடப் பணிக்கு உறு துணையாக உழைப்பவை பத்திரிகைகள் தாம.

நாடெங்கும் நாளொருவண்ணம் வெளி வந்துகொண்டே யிருக்கும் பத்திரிகைகளின் எண்ணிக்கைகளோ—கூடுதலான பக்கங்களோ, மக்களின் வாழ்வை, மொழியை, கலையை, இலக்கியப் பண்பாட்டை உயர்த்திவிட முடியாது.

எண்ணிக்கையல்ல முக்கியம், தரம். கூடுதலான பக்கங்களை 'நிரப்பு'வதல்ல முக்கியம், திறம். அத்தகு தரமும், திறமும் தலை சிறந்து திகழுமாயின், அப் பத்திரிகை மக்களின் வாழ்வை உயர்த்தும்—மொழியைப் பாதுகாக்கும்—முன்னோர் கலையைப் பேணிப் போற்றும்—இலக்கியப் பண்பாட்டை வளர்க்கும்—என்பது அனுபவ உண்மையாகும்.

இவ்வாறுன மதிப்புக்குரியப் பணி தாம் பத்திரிகை நடத்தும் பெரும் பணி. இதுவொரு தொழிலுமல்ல, வாணிபமுமல்ல தன்னலங் கருதா நிலையில் நின்று ஆற்றும் பொதுப்பணியே. இம்மாசு மறு

வற்றப் பணியினல் மக்களின் வாழ்வு வளம் பெறுமென்பது எங்கள் ஆழ்ந்த விருப்பம்—ஆணித்தரமான அபிப்பிராயம்—அசைக்க முடியாத நம்பிக்கை.

ஆயினும்; இரவு பகலென்று பாராமல் எழுத்துக்குவியலுக் கிடையே புதைந்து, எழுந்து, தேர்வு செய்து உழைப்பாளிகளின் உதிரமெல்லாம் வியர்வையாகக் கொட்டி, அச்சுருவாக்கிக் கட்டுக் கோப்புடன் ஒரு பத்திரிகையைக் கச்சிதமாக வாசகர்களின் அன்புக் கரங்களிலே ஒப்படைக்க எத்துணை உழைப்பு—எவ்வளவு பொருட்செலவு.

இத்தனை சிரமங்களையும் சித்தம் குலையாமல் ஏற்று, கடந்த ஓராண்டிற்கும் மேலாக வாரந்தோறும் 'கலைமன்றம்' இதழை வழங்கி வந்தோம். அதற்குரிய மூலகாரணமென்னவெனில் எடுத்த தொண்டினை இடையருது புரிந்து வெற்றி வழியில் விரைந்து செல்லும் பண்புதான் எங்கள் வரலாற்றின் முக்கியமான படலம். அதுவே முன்னுரையுங்கூட.

அம்மகத்தான வெற்றியின் எழுச்சியாக—வளர்ச்சியின் மறு மலர்ச்சியாக—இவ் விதழ் முதற்கொண்டு மேலும் 'கலைமன்றம்' புதுமை பெற்றுப் பொன்னுன பொலிவோடு வெளிவரப் போகின்றது. பொங்கிப் பாயும் காவிரிபோல்—பொதிகை மலை அள்ளித் தரும் மெல்லிய தென்றல் போல்--கலங்கரைவிளக்கம் போல்—வாசகர்கள் காட்டும் வழியிலே வடிவழகு சொரியும் அமைப்புடன் அருமையான கருத்துக் களஞ்சியமாக 'கலைமன்றம்' பவனி வரும். எப்போதும் புது மணங் கமழும்—பொன்னேடாக மின்னி ஒளிரும்.

வாசகர்களின் உண்மைக் குரல்தாம் எங்கள் குரல். விரிந்த உலகெங்கும் வாழும் நம் தாயகத்தாரின் வாழ்வு தாம் எங்கள் வாழ்வு. கூரிய வேலான தமிழ் தாம் எங்கள் அறிவாயுதம்.

இனிக்கும் பாலான பண்பாடுதாம் எங்கள் பண்பாடு. தாழ்ந்துகெட்ட இனத்தின் குமுறும் உள்ளம்தாம் எங்கள் உள்ளம்.

வீழ்ந்துபோன கலை உலகின் புதுமலர்ச்சி தாம் எங்கள் உயிர்மூச்சு.

தமிழர்களின் குடியெல்லாம் எங்கட்கு உறவு. வாசகர்கள் அனை வரும் எங்களின் உற்ருர், உறவினர்.

வளரும் கலைன்மறத்தில் மலரும் புதுமையை ஏற்று மகிழுங்கள். உங்கள் இதய மகிழ்ச்சியே எங்கள் குறிக்கோள் என்று அறுதி யிட்டுத் தருகிருேம் உறுதிமொழி.

அத்தனைபேருடைய ஆதரவையும் அன்புடன் வேண்டுகிருேம்.

# காதலும் கண்ணீரும்

ஆசைத்தம்பி





## 1

நடக்குமா—நடக்காதா என ஆருடம் பார்த்துக்கொண்டிருந்த என் அக்காவின் கல்யாணம், கடைசியில் நடக்கத்தான் செய்தது. அதுவும் எல்லோரும் பாராட்டும் வகையில் அமைந்து விட்டதுதான் ஆச்சர்யம். விரலுக்குத் தகுந்த வீக்கம்தான் தேவை என்று சொன்னவர்கள் அதையே திரும்பத்திரும்ப சொல்லிக்கொண்டிருக்கத்தான் செய்தார்கள்' அப்பா அதையெல்லாம் கவனிக்கவில்லை. மூத்த மகளின் கல்யாணம் சிறப்பாக நடக்கவேண்டும் என்று அவர் திட்டமிட்டார். அதற்காக அவள் வேண்டுமென்கிற பணத்தை கடன் வாங்கவும் தயங்கவில்லை....

கல்யாணம் இன்றுதான் முடிவடைந்தது. ஆனல், அதனல் உண்டாக்கப்பட்ட அமளி இன்னும் ஒயவில்லை. அதற்குள் "பெண்ணை நாங்கள் கூட்டிக் கொண்டு போகிறோம்" என்றனர்

மாப்பிள்ளை வீட்டார். வேலை முடிந்தது. இனிப் பெண்ணுக்கு இங்கென்ன வேலை என்ற அபிப்பிராயம் போலிருக்கிறது. அது தான் அப்படிக் கேட்டார்கள்.

"அதெற்கென்ன கூட்டிப்போங்கள் எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை!" என்று சொல்லிவிட்டார். அப்படி எங்களை விட்டுப் பிரியும்போது... அக்காவின் கண்களில் நீர் துளிர்த்தது.

தனது லட்சியம் நிறைவேறி விட்டது என்றதனால் உண்டான ஆனந்தக் கண்ணீரா...... இல்லை உண்மையாகவே எங்களது பிரிவால் உண்டாகிய வேதனைக் கண்ணீரா?

ஆம்! இப்போது அதை என்னால் புரிந்துகொள்ள முடியாதுதான்.

சந்தடி ஓய்ந்தது.

வீட்டில் அம்மா, அப்பா, நான் மூவர்தான். அப்பாவுக்கு ஏதோ ஒரு பெரிய பாரத்தைத் தலைமேலிருந்து கீழிறக்கி வைத்தது போலிருந்தது அதனால்தான் அடிக்கடி...

"பெரிய வேலையொன்று முடிந்தது—இன்னும் கொஞ்ச நாட்களுக்குக் கவலையற்றிருப்பேன்" என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

நான் ஒருத்தி இருக்கிறேன் அல்லவா? அதனால்தான் புத்திசாலித்தனமாக 'இன்னும் கொஞ்ச நாளைக்கு' என்று சொல்லுகிறார் என நான் நினைத்தேன்.

வீட்டில் என்னைத் தனிமை வாட்டி எடுத்தது.

நானும் அக்காவும் சேர்ந்து வசித்த அறையில் நான் மட்டும் இனி வசிக்க வேண்டியிருந்தது. எனக்கு இதுவரை தனியாய் இருந்து பழக்கமில்லை. எதற்கும் அக்காதான் எனக்கு வழிகாட்டி. அவள் இல்லாமல் நான் எந்த காரியத்தையும் செய்ததில்லை. நாங்கள் இருவரும் சேர்ந்தே காணப்படுவது கண்டு, பலர் ஆச்சர்யப்பட்டுத் தான் போனார்கள்.

'உடன் பிறந்தவர்கள் என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்' என்று எங்கள் வீட்டுக்கு வரும் விருந்தினர்கள் சொல்லாமல் எங்கள் வீட்டைவிட்டுப் போவதில்லை. நாங்கள் அப்படி வளர்ந்தோம்.

இப்போது அவள் போய்விட்டாள்!

அவளுக்கு இந்தப் பிரிவின் வேதனை தெரியாதபடி ஆறுதல் கூற அவள் கணவர் இருக்கிறார்!

எனக்கு?

அப்பா, அம்மா தேற்றுவார்கள் என்பது நடக்காதகாரியம். எல்லோரும் போய்விட்ட அன்று மாலை மணி ஏழு இருக்கும். நான் என் அறையில் வந்து உட்கார்ந்தேன். ஒரு வாரமாகத் தொடாத புத்தகங்கள், எப்படியிருக்கிறதென்று எடுத்துப் பார்க்கவேண்டாமா? பரிட்சை ஒருபக்கம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. பரிட்சையில் பாஸ் செய்யாவிட்டால், அப்பா பெண் என்றும் பாராமல் உதைத்து விடுவார். கஷ்டப்பட்டுப் பணம் சம்பாதித்துக் கொடுப்பவராயிற்றே, பின் கேட்கமாட்டாரா? பள்ளிப் படிப்பு முடிந்ததும் அக்கா கல்லூரிக்குப் படிக்கப் போனாள். ஒரு வருடம்கூடப் படித்திருக்கமாட்டாள் அதற்குள் அவளுக்கு கல்யாணம் நடந்துவிட்டது.

* * *

விளக்கேற்றினேன்.

புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு மனதின் கவனத்தை அதில் பதியவைக்க முயற்சித்தேன் ஆனல் முடியவில்லை. மேஜையின் மேலிருந்த அக்காவின் போட்டோ என்னைப்பார்த்துச் சிரிப்பதுபோலி ருந்தது. தினமும் இந்த நேரத் திற்கு நாங்கள் இருவரும் சேர்ந்து தான் மேஜையின் அருகில் படிக்க உட்காருவோம். ஆனல் அம்மா சாப்பிடக் கூப்பிடும்வரை அன்று கல்லூரியில் நடந்த விஷயங்களைப் பற்றிதான் அக்கா சொல்லிக் கொண்டிருப்பாள். சுவாரஸ்யமான அவ்விஷயங்களைக் கேட்பதில் எனக்குப் பொழுதுபோவது தெரியாது. இப்படி நாங்கள் போய்க் கொண்டிருந்தபோதுதான் அக்காவின் வாழ்வில் காதல் உண்டானது.

## 2

அக்கா ரமணி கல்லூரியில் சேரும்பொழுது அவளுக்கு வயது பத்தொன்பது. எனக்கு வயது பதினேழு. நான் பத்தாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். ரமணி படிப்பில் மிகவும் கெட்டிக்காரியாய் இருந்தது ஒரு காரணம் —அவளுக்குத் தகுந்த மாப்பிள்ளை கிடைக்காதது இரண்டாவது காரணம். இதனல்தான் அவள் கல்லூரியில் படிக்கநேர்ந்தது.ரமணி நல்ல அழகி. சிவந்த உடல், களையான முகம், கருநாகம்போல் நீண்டு வளர்ந்திருந்த கூந்தல், இவையெல்லாம் அவளை அழகி என்றுதான் பறைசாற்றின. ஆனல், பணம் இல்லாத காரணந்தான், அவள் உடனே விலைபோகவில்லை. அழகு இருந்து என்ன பயன்?

கல்லூரியில் சேர்ந்த முதல் தினம் அக்கா ரமணி என்னிடம் சொன்னள்:

“ஆண்களுக்கு நடுவில்போய் உட்காருவதென்னவோ எனக்குப் பிடிக்கவில்லை காந்தா! (என் பெயர்) இருந்தாலும் உட்கார்ந்து படித்துத்தானே ஆகவேண்டும்? நாங்கள் நின்ருல் சப்தம்—திரும்பினல் சப்தம்...... இது மாணவர்களுக்குப் பிடித்தமான ஒரு விளையாட்டு போலிருக்கிறது. லெக்சரர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.”

ஒவ்வொருதினமும் அவள் ஏதாவது விஷயம் கொண்டுவருவாள். சில தினங்களில் ஒன்றுமே சொல்ல இருக்காது. இருந்தாலும் நான் கேட்டுவிடுவது--“என்னக்கா இன்றைக்கு ஒன்றுமே நடக்கவில்லையா?” என்பேன். “இருந்தால் சொல்வேனே?” என்பாள்.

இது பழக்கமாகிப் போய்விட்டது.

ஒருநாள் அக்கா கல்லூரியிலிருந்து வர நேரமாகியது. அம்மாவுக்கு கவலை. என்னவோ ஏதோ என்றுதான். பெண்பிள்ளையல்லவா? அப்பாவும் ஆபிஸிலிருந்து வரவில்லை.

அக்கா வரும்வரை எங்களுக்கு நிலைகொள்ளவில்லை. அவளைத்தேட நான்தான் போகவேண்டும்! அதற்கு அம்மா சம்மதிக்கவில்லை.

கடைசியில் ஏழு மணிக்கு அக்கா வந்தாள்.

“என்னடி இவ்வளவு நேரம்?” என்று அம்மாதான் கேட்டாள்.

“கல்லூரியில் டேபிள் டென்னிஸ் மாட்ச்—அதைப் பார்த்துக்

கொண்டு இருந்துவிட்டேன்" என்ருள்.

அம்மாவுக்கு சமாதானம் சொல்லி அனுப்பி ஆகிவிட்டது.

என்னிடம் விவரம் பூராவையும் சொல்லி ஆகவேண்டுமே!

அக்கா சொன்ன விஷயம் இது தான்.

"கல்லூரி விட்டதும் நான் வீட்டுக்குத்தான் புறப்பட்டேன். ஆனுல், என் தோழி சுமதி என்னை வர-விடவில்லை. இன்றைக்கு காலேஜ் சேம்பியன் வடிவேலு டேபிள் டென்னிஸ் விளையாடுகிருர்—அதைப் பார்க்காமலா வீட்டுக்குப்போவது? வீட்டுக்குப் போய்தான் என்ன செய்யப்போகிருய்?!' என்றவுடன் பதில் பேசாமல் நானும் அவளுடன் போனேன்

"பெண்களுக்கென்று தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இடத்



தில் நாங்கள் போய் உட்கார்ந்தோம். ஆட்டம் ஆரம்பமாகியது."

'யார் யாரோ விளையாடினார்கள்!'

'கடைசியில் சுமதிசொன்ன வடிவேலு வந்தார்—அடேயப்பா என்ன கம்பூரமான தோற்றம்!'

"அவரிடம் ஏதோ ஒரு கவர்ச்சி இருந்தது. இல்லையென்றால் நான் ஏன் அவரை அப்படிப் பார்க்க வேண்டும்?"

"ஆடிக்கொண்டிருக்கும்போதே அவர் என்னைக் கவனித்தார்."

"அப்போது என் முகம் சிவந்து விட்டது."

"அவர் ஆடவந்தாரா? இல்லை உன்னைப் பார்க்கவந்தாரா?" என்று சுமதி கிண்டல் செய்தாள்.

'ஆட்டம் முடிந்தது.'

"இவ்வளவு சீக்கிரம் முடிந்து விட்டதா?" என்றேன்.



"உனக்கு அப்படித்தான் இருக்கும்" என்று சொல்லிவிட்டாள் சுமதி.

'வடிவேலு யார்?'

'எந்த வகுப்பில் படிக்கிறார்?'

"இதையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென நான் துடித்தேன்."

"என் துடிப்புக்கு காரணமாயிருந்தது, என் உள்ளத்தில் ஏற்பட்ட ஒருவகையான இன்ப உணர்ச்சி. வாழ்க்கையில் எனக்கு இதுதான் முதல் அனுபவம். நான் கேட்காமலேயே பேச்சுவாக்கில் வடிவேலைப் பற்றிய விஷயங்களைச் சொல்லிவிட்டாள். அவரும் என் வகுப்பில் படிக்கிறாராம், டவுனில் உள்ள பிரபல வக்கீல் ஒருவரின் மகனும்!"

"நேரமாகிவிடவே நான் வீட்டுக்கு புறப்பட்டுவிட்டேன்...பாக்கி விஷயங்கள் நாளைத் தொடரும்" என்று முடித்தாள் ரமணி!

"கல்லூரி வாழ்க்கை பெண் உள்ளத்தில் ஒரு மாறுதலைத் தான் செய்கிறது" என்றேன் நான்.

"வாஸ்தவந்தான் சாந்தா!" என்றாளவள்.

அம்மா சாப்பாட்டுக்குக் கூப்பிடவே நாங்கள் போனோம்!

ரமணியின் வாழ்வில் இது ஒரு புதுத் திருப்பம். அதற்குப்பிறகு தினமும் அவள் முக்கியமாக வடிவேலுவைப்பற்றிய செய்திகளைக் கொண்டுவரலானாள்.

வடிவேலுவுக்கும் அவளுக்கும் கொஞ்சம் பழக்கம் ஏற்பட்டுவிட்டது அதற்குள். மேல் கேட்கவா வேண்டும்?

விஞ்ஞானக் குறிப்புகள் எவ்வளவோபேர் எழுதிவைத்திருப்பார்கள்—யாராவது கேட்டால் கொடுக்கமாட்டார்களா?

வடிவேலு ரமணியிடம்தான் வந்துகேட்டான்!

பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டாமா?

ரமணியும் அதைத்தான் எதிர்பார்த்தாளாம். ஆரம்பித்த அறிமுகம் அதற்கு மேலும்தொடர்ச்சியாக வளர்ந்து கொண்டிருந்தது.

வடிவேலு இதைச் சொன்னார், வடிவேலு அதைச் சொன்னார் என்று தினமும் என்னிடம் செய்திகள் சொல்லிக்கொண்டிருப்பாள்.

வடிவேலுவைப் பற்றி அவள் வர்ணிக்கவே எனக்குக்கூட அவரைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது.

"ஒருநாள் அவரை நம் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வாயேன்" என்று அக்காவுக்கு யோசனை சொன்னேன்.

"அப்பாவும், அம்மாவும் ஏதாவது சொன்னால்...!" என்று முதலில் பயந்தாள்.

"உம்... ஒன்றும் சொல்லமாட்டார்கள். கல்லூரி சிநேகிதர் என்று சொல்லிவிட்டால் போகிறது" என்று சொன்னேன்.

கூப்பிட்டால் வரமாட்டேன் என்றா சொல்வார் அவர்?

**வடிவேலு வந்தே விட்டார்**

(வளரும்)

# அடுத்துவரும் இதழிலே...

★

❁ கருத்து வேற்றுமையை இரு சாராரும் பரிமாறிக் கொண்டு விளக்கம் பெறுவதுதான் ஜனநாயகப் பண்பு—அதன் உயரிய வளர்ச்சி. ஒரு சாராரின் கருத்து—இன்னொரு சாராருக்குப் பிடிக்காமல் இருப்பது இயல்பு. ஆகவே கலைமன்றத்தின் வாயிலாகப் பொதுவாக ஒரு பொருளை எடுத்து மறுத்தும், ஆதரித்தும் விவாதித்து விளக்கம் பெறுவதற்காக **'விவாத அரங்கம்'** என்றொரு புதிய பகுதி அடுத்த **இதழில்** இடம் பெறுகிறது.

❁ கலைமன்றத்தைப் பற்றிய மக்கள் அபிப்பிராயம் என்ன? ஆலோசனைகள் எவை? இன்னும் என்னென்ன பகுதிகள் இடம் பெறுதல் அவசியமென விரும்புகிறார்கள் என்பதை அறிய விரும்புகின்றோம். அதற்காக **'கலைமன்றம் பார்லிமெண்ட்'** என்னும் பகுதியை வரும் இதழில் ஆரம்பிக்கின்றோம். அப்பகுதி மூலம் நேயர்கள் தங்களின் எண்ணங்களை (ஒரு போஸ்டு கார்டு அளவில் எழுதி) தெரிவிக்கலாம்.

❁ **"பாரதிதாசன் கவிதை அரங்கம்"** என்னும் பகுதியொன்றும் துவங்குகிறது அடுத்த இதழில். புரட்சிக் கவிஞரின் பாதையிலே கவிதைகள் புனைவோர் ஆயிரமாயிரம். அவர்கள் அத்தனை பேரையும் கவிதைகள் எழுதியனுப்பத் தூண்டுகிறோம்.

❁ சுவையான செய்திகள், சிந்தனைக்குரிய சிறந்த நிகழ்ச்சிகள் **"கண்ணோட்டம்"** என்ற பகுதியில் இடம் பெறும்.

❁ மற்றும் **'வெட்டும் ஒட்டும்'**, **'எரிமலை'** என்ற இரு புதுமையான பக்கங்களும் பிரசுரமாகும்.

❁ இவ் விதழில் இடம் பெற்றுள்ள இதரப் பகுதிகளும் வழக்கம்போல் இடம் பெறுகின்றன.

❁ இத்தனை பொன்னான கருத்துக் குவியலுடன் வாரந்தோறும் வெளிவரும் ஒரே பத்திரிகை **'கலைமன்றம்'** ஒன்றுதான்.

**தனிப் பிரதி விலை 4 அணா.**

**கலைமன்றம், சென்னை—1.**

# மக்கள் செல்வம்

தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவுதல் வேண்டுமென்று ஆவல் கொண்டார் பாரதியார். அதுமட்டுமல்ல, உலகெங்கும் பரப்புங்கள் என்றும் தூண்டினர் தமிழ் மக்களை. தமிழின் தொன்மை—தன்மை—இனிமை—ஆகியவற்றைத் தமிழகத்தார் மட்டும் உணர்ந்தால் போதாது. அவனிவாழ் மக்கள் அத்தனை பேர்களும் உணர்தல் வேண்டும்.

**'உரிமை'** என்னும் பெயரால் தமிழகத்தின் இலக்கியச் செல்வங்களில் எண்ணற்றவை ஒரு சிலரால் முடக்கி வைக்கப்பட்டன. இதன் காரணமாக உயர்ந்த இலக்கியங்கள் பிற நாடுகளுக் கெல்லாம் எட்ட முடியா நிலை இருந்து வருகிறது. இனி இலக்கியச் செல்வங்கள் யாவும் மக்கள் செல்வங்களாக மாற்றப்பட்டால் உலகெங்கணும் பரவும் என்பதற்கு எடுத்துக் காட்டாக **'பாரதியார் கவிதைகள்'** வெளியிடும் **'உரிமை'**யைத் தங்களுக்கே உரித்தானதாக வைத்திருந்த சென்னை அரசாங்கத்தார் **'பாரதியார் கவிதைகளை'** **'மக்கள் செல்வ'**மாக உலவ அனுமதித்து விட்டனர்.

இவ் இனிக்கும் செய்தி கேட்ட தமிழரின் சிந்தையெலாம் மகிழ்ந்தது. நாமும் அம் மகிழ்ச்சியிலே பங்கு பெற்று சென்னை அரசாங்கத்தாரின் நல்லெண்ணத்தைப் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம்.

**—ஆசிரியர்.**

---

# முகப்பின் அழகு

திரு. ஆசைத்தம்பி எழுதும் 'காதலும் கண்ணீரும்' என்ற தொடர் கதையின் கதா உறுப்பினர்கள் இவ்வார முகப்பின் அழகு ஓவியங்களாகக் காட்சி யளிக்கிறார்கள். நடு நாயகமாய்—நயனங்களில் நளினம் விளையாட விளங்குபவள்தான் கதாநாயகி சாந்தா.

* வானகத்தே எதேச்சையாகப் பறந்து திரியும் இசைவாணி...
* குரலினிமையால் கவிஞர்களின் கற்பனை ஏடுகளிலே நிகரற்ற இடத்தைத் தேடிக் கொண்ட சின்னஞ் சிறு ஜீவன்......
* அந்த ஜீவன் ஷெல்லியின் கவிதையூற்றிலே பண்ணிசைக்கும் வசன காவியமே இது......



# வானம்பாடி

மூலம் : ஷெல்லி

தமிழ் : இரா. மதனகோபால்

மகிழ்வுடனிருக்கும் வானம் பாடியே! உனக்கு எனது அன்பு வணக்கங்கள். வானத்திலே வட்டமிட்டவாறு வானம் பாடியே நீ கேட்டோர் மயங்கும் இசையை எழுப்புகிறாய். கட்டுப்பாடின்றி நீ உனது இனிய இசையை விட்டு விட்டு இசைக்கிறாய்.

பூமியை விட்டு நீ நெடுந்தொலைவில்—ஆகாயத்தில் பறக்கிறாய். மேலே மேலே பறந்து கொண்டிருக்கிறாய். புகை மேலே எழுவதுபோல் நீ மேலே பறக்கிறாய். நீல வானத்திலேயே நீ நின்று நின்று பறக்கிறாய். இன்பமான இசையை நீ எழுப்பிக் கொண்டே பறக்கிறாய். பறந்து கொண்டே இன்பமான இசையை எழுப்புகிறாய்.

ஆதவன் மறையும் தருணத்திலே உண்டாகும் பொன்னிற ஒளி மேகக் கூட்டங்களின் மேல் பட்டு அவையெல்லாம் பொன் மயமாகத் தோன்றும் தருணத்திலே நீ பறக்கிறாய். அடக்க முடியாத ஆனந்தத்தால் ஆகாயத்திலே அதி வேகமுடன் ஆனந்தம் அணைக்கப் பறக்கிறாய்.

ஒளியற்ற மாலை வேளை நீ பறந்து செல்லுகையில் உன்னுடனே மறைந்து விடுகிறது. ஆதவன் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கையில் விண் மீன் இருந்தும் அதன் காட்சி தெரிவதில்லை.

அதைப் போன்று நீ இருக்கிறாய். இருந்தாலும் நானுனது அருமையான இன்னிசையை மெதுவாக வானாலும் கேட்கிறேன்.

வானத்திலே வட்டமிடும் வானம்பாடி அதிக தொலைவிலிருந்தாலும் அது இருப்பதை அறிய முடிகிறது அதன் இன்னிசையை நாம் கேட்கும் காரணத்தினால். வானம் பாடியே உனது இசையை வருணிக்க வார்த்தைகளே வருவதில்லையே.

உலகமெங்கும் உன்னுடைய இசைதான் கேட்கிறது. இது எப்படி இருக்கிறதென்றால் இருளாக இருக்கும் வான வீதியில் நீந்தி மேலேறி எட்டிப் பார்த்து வெட்ட வெளியெல்லாம் நிலவொளி சொட்ட சொட்ட வருகிறதே வைரக்கட்டி எனும் வெண்ணிலா- அப்படி இருக்கிறது. இருளை விழுங்கி விட்ட ஒளியை உமிழ்கிறது உன்னத நிலா.

நீ எப்படி இவ்வளவு நன்றாகப் பாடுகிறாய் என்று எனக்கு ஐயம் எழுகிறது. உன்னைப் போல் பாடுவதற்கு என்ன செய்யவேண்டும் என்று விழைகிறேன். உன்னுடைய இன்பமான இன்னிசை ஊடாக வானத்திலே இருந்து கொண்டு வையகத்தில் வாழ்வோரை கவரும் வானவில்லின் வர்ண ஜாலங்களைக் கூட ஒப்பிட முடியவில்லை. மழை பொழியும் மேகங்கள் நீ பொழியும் இன்னிசை மழையைக் கண்டு வெட்கப் பட வேண்டும்.

தன்னுடைய விருப்பம் போன்று யாருடைய கட்டளையுமின்றித் தன்னிச்சையாகப் பாடும் பெரும் புலவனொருவனைப் போன்று; மாட்சிமை தங்கிய மன்னரின் மகளொருத்தி காதலால் கட்டுண்ட தன் இதயத்திற்கு ஆறுதல் கூறும் வகையில் காதலனைப் பற்றிக் கருத்துள்ள கவிதைகளை இசைத்துக் கொண்டிருப்பது போன்று; மணம் பரப்பும் மலர்களினூடே இருள் இருக்கும் இரவினிலே தன்னொளி பரப்பி பறக்கும் மின்மினிப் பூச்சு போன்று; நின்று மலர்ந்த அழகு மலர் ரோஜாவைப் போன்று; வானம் பாடியே நீ இருக்கிறாய்.

மலர்களின் மேலும், புற்றரையின் மீதும் பனித் துளி விழுவதால் எழும் மெல்லிய ஓசைகூட உனது இன்னிசை முன் ஒன்றுமில்லை. உன்னுடைய இனிய எண்ணங்களை எங்களுக்குக் கற்பிக்க மாட்டாயா?

மணவறையிலே இசைக்கப்படும் இசைகூட உன் இசைக்கெதிரே தலை குனியத்தான் வேண்டும்.




## சினிமா கொட்டகை முன் மறியல்

பால்டிமோரில் ஏப் 30ம் நாள் நீக்ரோக்களை அனுமதிக்க மறுக்கும் கொள்கையை ஆட்சேபித்து புறநகர் சினிமா ஒன்றின் அருகில் சுமார் 180 பேர் சாத்வீகசட்டமறுப்புப் போராட்டம்நடத்தினர். 5 போலீஸார் ஸ்தலத்துக்கு வந்தனர். ஆனால் யாரும்கைது செய்யப் படவில்லை. பலாத்காரம் ஏதுமில்லை.

நீ இவ்வளவு மகிழ்வாக இருப்பதற்குரிய உண்மையான காரணத்தைக் கூறு.

உன்னுடைய இசையினிலே சோகம் படிந்ததில்லே. தொல்லே என்பது உனக்கு வந்ததே இல்லேயா?

இல்லாததை நினேத்து நாங்கள் இங்கே வாக்குவாதம் செய்கிறோம். வீணுக நேரம் கழிக்கிறோம்.

உலகத்திலே துன்பம் என்னும் வார்த்தை தூக்கி எறியப்பட்டு இன்பம் என்னும் வார்த்தையை இழுத்தணேத்துக் கொள்ள மாட்டாத நாங்களும் உன்னேப் போன்றல்லவா இருப்போம் கவலேயேதுமின்றி.

இனிய இசை கலந்த எந்தப் பாடலும், புத்தகங்களிலே காணக் கிடைக்கும் அறிவுக் கருவூலங்கள் எல்லாம் உன் இசைக்கு எதிரே ஒன்றுமேயில்லே. தேர்ந்த சிற்பி போன்று சிறந்த இசையைச் செதுக்கித் தருகிறுய்.

நீ அடையும் இன்பத்தில் அரைப் பங்கு நானடைய அன்பு வானம் பாடியே வழிவகை சொல்லித் தரமாட்டாயா. உன் இசையைக் கேட்டால் மனதைப் பறிகொடுத்துப் பைத்தியம் பிடித்தவன் போன்று நடக்கத் தோன்றுகிறதே.

வானம் பாடியே நீ பறக்கிறுய்.
உன் இசை எனக்குக்
கேட்கிறது.
உலகமே உன்னிசையை
உன்னிப்புடன் கேட்கிறது.


# வெளிவந்துவிட்டது!

மாணவர்களின் ஆங்கில—தமிழ் பொக்கிஷம்!

சிறந்த தொரு படைப்பு!!

## ஸ்ரீமகள் பாக்கெட் இங்கிலீஸ்—தமிழ் அகராதி

**ENGLISH—ENGLISH—TAMIL DICTIONARY**

20000 மேற்பட்ட ஆங்கில வார்த்தைகளுக்கு விளக்கம் நிறைந்த ஆங்கிலப் பதங்களும்—அதற்கேற்ற தமிழ்ப் பொருளும் இதில் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. இது உயர்நிலேப் பள்ளி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் தொகுக்கப்பெற்ற ஆங்கில அகராதியாகும். விலே ரூபாய் 2—8—0

ஸ்ரீமகள் கம்பெனி, த. பெ. எண்—275
சென்னே—1

# தயக்கம் ஏன்?

[த. வே. சீனிவாசன்]

கட்டி அணைத்திடவே பெண்ணே—பெருங்
காதல் மிகுந்ததடி கண்ணே!
அட்டி உரைத்திடலும் நன்றோ?—என்
ஆசைநிறை வேறுவதும் என்றோ?

கொத்திப் பறித்துவிட்டாய் நெஞ்சை—உன்முன்
குலைந்து விழுந்தேனடி பஞ்சை!
செத்து மடிவதுவோ உள்ளம்?—அணை
சிதையப் பெருகுவதோ வெள்ளம்?

நினைவு மறப்பதுண்டோ உன்னை!—தென்றல்
நேசம் விடுப்பதுண்டோ தென்னை?
தினவெடுத்த கையுமிரு தோளும்—வாளைத்
தீண்டல் விடுத்திடுமோ நாளும்?

கட்டுப் படுத்தலினி ஆமோ?—நம்
காதல் புயலடித்துப் போமோ?
எட்டிப் பிடித்திடுவோம் வாழ்க்கை—நம்
ஏக்கம் தவிர்க்குமந்தச் சேர்க்கை!

உள்ளத் தெழுந்தடிக்கும் சூறை—அது
ஓயஒரு நல்வழிசொல் வாரை
எள்ளும் உலகத்தெங்கும் தேடி—நான்
ஏமாந்து வந்தேனுனை நாடி!

தோல்வியெனும் பாறையது மோதி—இந்தத்
தோணி உடைவதுவோ நீதி?
ஆல்விழுந்து போகவி டாதே—என்
ஆசை வளர்த்ததமிழ் மாதே!

வெள்ளம் பெருகிற்றடி இங்கு—புயல்
வீசக் குலையுதடி தெங்கு!
உள்ளம் குடிபுகுந்த பின்பு—நீ
ஊட்டத் தயங்குவதேன் அன்பு?

- காதல் வேண்டும்—கண்ணைக் கவரும் கோமளவல்லி வேண்டும்—ஆடிப் பாட நந்தவனமும் இருக்க வேண்டும்-கதையிலே என்று கருதுவோருக்கு…
- காதலில்லாக் கதையைப் படிக்க விருப்பமின்றி உதறித் தள்ளும் ஒரு சிலருக்கு………
- இதோ வொரு சாம்பிள், சரக்கு உயர்ந்தது என்றால் அங்கே காதல் என்ற 'கருப்பட்டி' தேவையில்லை.




தாங்கமுடியாத குளிர்! அழகிய நிலவு! பூமி நனைந்து ஊறிப் போயிருக்கிறது. செடி கொடிகள் ஈரத் துணியை உடுத்தியிருப்பது போல நடுங்குகின்றன. அந்த ரெயில் தண்டவாளங்கள் சக்கரங்கள் உருண்டுருண்டு வெள்ளி நட்சத்திரங்களைப்போல் 'பளிச் பளிச்' என மின்னுகின்றன! — அழிவில்லாத நட்சத்திரங்கள்! அந்த ரெயில் பாதைகளில் பனித்துளிகள் தூறிக்கிடக்கின்றன; இரும்பு உப்பிக் கிடப்பதைப் போலத் தோன்றியது.

அது ஒரு நடுத்தர ரெயில்வே ஸ்டேஷன். மூன்று வித ரெயில்கள் இருக்கின்றன. முதலாவது மெயின் லைன், ஸ்டேஷன் கட்டடமும், பிரயாணிகள் ஏறி இறங்குகின்ற 'பிளாட் பாரமு'ம் அதன் பக்கம் சேர்ந்திருக்கின்றன. மற்றவை இரண்டாவதும், மூன்ருவதும் லைன்களாகும். 'கூட்ஸ் ஷெட்'டோடு சேர்ந்திருக்கிற மூன்ருவது லைனில் வாகன்கள் வரிசையாக நிற்கின்றன. அங்கும் ஒரு சிறிய பிளாட்பாரம் இருக்கிறது. ஸ்டேஷனுக்கு வடகிழக்கில், மெயின்லைனின் கீழ்பக்கம் ஓரத்தில் சாய்ந்து கிடக்கும் புல் திடல் ஏறத்தாழ ஒரு மைதானத்தைப் போன்றுள்ளது.

மைதானத்தில் சில சமயங்களில் ஆட்கள் வந்து தங்குவார்கள்—ஊர் சுற்றித்திரிகிற ஒரு கூட்டம். அவர்களை காபூலிவாலாக்கள் என்று அழைப்பர். இரண்டு மூன்று நாட்கள் கூடாரம்போட்டு அவர்கள் தங்குவார்கள். ரெயில்வே காம்பவுண்டுக்குள் அப்படி எல்லாரும் வந்து தங்கக்கூடாது. ஆனால், இந்த காபூலிகளைத் தடுத்து நிறுத்துவது முடியாத காரியம். அவர்கள் 'டிக்கெட்'

இல்லாமல் பிரயாணம் செய்வார் கள்—தொல்லைகள் தருவார்கள். அந்தக் குறும்புத் தனம் பிடித்த குரங்குக் கூட்டத்துடன் போராட யாருக்குமே பயம்தான்.

மரங்களின் நிழலால் மைதானம் இருள் மூடிக்கிடந்தது. சட் டென்று 'டார்ச்'சின் வெளிச்சம் அங்கு ஒளிவீசிப் பாய்ந்தது. அதன் வெளிச்சம் வரிசையாக நீங்கியது — எதையோ தேடுகிற பாவனையில். இறுதியில் ஒரு கூடாரத்தினருகில் சென்று வீழ்ந் தது. அந்தக் கூடாரம் நல்ல தூக்கத்திலிருக்கிறது. வெளிச்சம் அணைந்தது.

"நேத்து ராத்திரி எல்லாத்தை யும் அடித்துத் துரத்தினேன். இருந்தும் ஒரு கூட்டம் பாக்கி யாய்க் கிடக்கிறது......"

ரெயிலுக்கருகில் நின்று ஒரு காக்கி வேஷக்காரன் முணுமுணுத் தான். சிறிது நேரம் அவன் அந்த இடத்திலேயே நின்றான், பின்னும் எதையோ தேடிக் கொண்டு.

நிலவு வடக்கில் சிறிது தாழ்ந் தது—பிறகு வெளுத்தது. இர வின் முடிவைக் குறித்துவைத்துக் கொண்டு ஸ்டேஷனருகில் எங்கோ இருந்து ஒரு கோழி கூவியது. பறவைகள் சிறகடித்தன. உலகம் விழித்துக்கொண்டது.

தூக்கம் போயும் போகாமலும் மயங்கிக்கிடக்கிற சுற்று வட்டாரத் தைத் தட்டி எழுப்பியது, 'கிண் கிணி' என்ற மணியின் சத்தம்.

ஒரு வண்டி 'பிளாக்'காய் விட் டிருக்கிறது. அதுவரை அந்த ஸ்டேஷன் தூங்குகிற மாதிரி கிடந்திருந்தது. பிளாட்பாரத்தி லுள்ள விளக்குகள் ஒளி வீசின. பிரயாணிகள் பதறி எழுந்து நின் றனர். சிலர் குளிரால் கூனிக் குறுகி உட்கார்ந்திருந்தனர். இடை யிடையே குளிர்காற்று சுரீரென்று வீசிக்கொண்டிருந்தது. குளிர் உடலைத் துளைத்துக்கொண்டு ஏறு கிறது. கிடு கிடு வென்ற நடுக் கம்......

'வாச் அண்டு வார்டு' சிப்பாய் சின்னான் இந்தப் பிரயாணிகளுக் கிடையில் நடந்து வந்தான். பல்லையும், உதட்டையும் இறுகக் கடித்து, கூனிக்குறுகி கைகளிரண் டும் பின்னால் கட்டி அந்தக் குளிரி லிருந்தும் தப்பித்து ஓடுவதுபோல அவன் ஸ்டேஷன் வராந்தாவில் ஏறி நின்றான். குழி வீழ்ந்த காக் கித் தொப்பியால் காதை மூடிக் கீழே அதன் ஓரத்தால் அழுத்தி வைத்திருந்தான். ஒரு 'கம்பளி ஸ்வெட்டர்' காக்கிச் சட்டைக்கு மேல் கெட்டியாகச் சுற்றிக்கிடக் கிறது. உதட்டில் ஒரு பீடியும்.

சின்னான் சிந்தனையில் மூழ்கி அப்படியே நின்றான். அங்கே தான் தனியாளாய் விட்டதுபோல அவனுக்குத் தோன்றியது. வண்டி யின் வரவை எதிர்பார்த்து ஆசை கள் நிறைந்த இதயத்துடன் பிர யாணிகள் நிற்கின்றனர். பாயின்ட்ஸ் மேனும், போர்ட்டர் மாரும், கிளார்க்குமாரும், ஸ்டே ஷன் மாஸ்டரும் அவர்களுடைய வேலையில் மூழ்கியிருக்கின்றனர். சின்னானுக்கு அதெல்லாம் ஒரு கனவுபோலத் தோன்றியது. தூக் கத்தால் கனத்துத் தொங்குகிற கண் இமைகளைச் சிரமப்பட்டுத் திறந்துவைத்தும், இடையிடையே கொட்டாவி விட்டும், அப்படி அதிகநேரம் நிற்க அவனுக்கு முடியவில்லை. பிரயாணிகளின்



மத்தியில் அவன் மீண்டும் சுற்றி நடக்கத் தொடங்கினான்.

"இன்னும் இரண்டுமணி நேரமிருக்கிறது"—சின்னான் தனக்குள் சொல்லிக் கொண்டான். அவனுக்கு 'டூட்டி' ஆறுமணி வரை இருக்கிறது. இரவு முழுவதும் அவன் அந்த ரெயில்வே காம்பவுண்டுக்குள் சுற்றி அலைந்து கொண்டிருந்தான். காவல் காக்கும் வேலை. பிளாட்பாரத்திலும், கூட்ஸ் ஷெட்டின் வெளியிலும் அங்குமிங்குமாகச் சேர்த்து வைத்திருக்கிற சாமான்களுக்குக் கணக்கேயில்லை. மரத்துண்டுகள், ஜிங்ஷீட்டுகள், ஓடுகள், இரும்பு, மீன்கட்டுகள், எண்ணெய் டின்கள் அப்படி பலவகை — ரெயில்களுக்கிடையிலும் குட்டாகச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கேயெல்லாம் சின்னானுடைய பார்வை செல்ல வேண்டும். ஒன்றுக்கும் குறைவோ, நட்டமோ கெடுதலோ ஏற்படக்கூடாது. ஏதாவது வந்தால் அவன் பதில் சொல்லியாக வேண்டும். அதனால் சின்னானுக்கு ஒரு வினாடியும், ஒரு இடத்திலும் உட்கார முடியவில்லை. மூன்றாவது லைனில் வரிசையாக நீண்டு கிடக்கிற வாகன்கள் நிறையக் குண்டுகள் தான். அவைகளுடைய 'சீலை' பத்திரமாகக் கவனிக்கவேண்டும். வாகன்களைக் குத்தித் திறந்து சாமான்களைத் திருடிக்கொண்டு போவதாக எத்தனையோ செய்தி

களைக் கேள்விப்படுகிற காலம் இது.

சின்னனுக்கு அந்த பிளாட் பாரத்திலேயே நிலைத்து நிற்கத் தைரியம் வரவில்லை. ஒழுங்கில்லாமல் சிதறிக்கிடக்கிற சாமான்களில் அவனுடைய மனம் அலைந்துகொண்டிருந்தது. ஏதாவதொன்றை, யாராவது திருடிக் கொண்டு போய்விட்டால்?— சின்னன் பயப்பட்டான். அரிசி வாகன்கள் வந்து இறங்கியிருக்கின்றன. அவைகளுடைய அடியிலுள்ள துவாரங்களின் வழியாக அரிசி சிதறி வீழ்வதை சின்னன் பகலிலேயே பார்த்திருக்கிறன். அதைப் பொறுக்கி எடுக்க அந்தப் பட்டணத்தில் அலையும் பிச்சைக்காரர்களும், காலிகளும் ஓடி வந்தனர்—அவர்களையெல்லாம் அவன் அடித்து விரட்டிவிட்டான். அவர்கள் அந்த வாகன்களுக்கிடையில் அபாயத்தில் சிக்கிச் சிதைந்து செத்தால்? ஆனல், இந்தக் கும்பல் சாகத் தயாராய்ப் புறப்பட்டிருக்கிறது. பட்டினியால் துடித்துக்கொண் டிருப்பதைக் காட்டிலும் சுகம்தானே. திடீரென்று சாவது?

சின்னன் நினைப்பது போல் அல்ல. அந்தப் பிச்சைக்காரர்களும், காலிகளும் அபாயத்தை மிகவும் சாமர்த்தியத்துடன் தாங்கியும், தடுத்து நிறுத்தியும் வாழ்வதற்குள்ள வழியைத் தேடுகிறுர்கள். அவர்கள் அபாயத்தில் சிக்கிச் சாகமாட்டார்கள். இந்த நாசமாய்ப்போன கூட்டம் எங்குமிருக்கிறது. எவ்வளவு அடித்து விரட்டினலும் போவதில்லை. எவ்வளவு பெரிய தொல்லை......

சின்னனின் மண்டை மூளை குழம்பியது. இந்தக் காலிகளால் தான் சின்னன் அலையவேண்டியிருக்கிறது. இவர்கள் இல்லாத ஸ்டேஷன்களும் இருக்கின்றனவா? குறைவுதான். உலகில் ஒரேயொரு பிச்சைக்காரன் மீதியாகிருன் என்று வைத்தால், ஒரு ரெயில்வே ஸ்டேஷனைகத்தானிருக்கும் அவனுடைய இருப்பிடம், வேறு எங்காவது எவ்வளவு நல்ல இடம் இருந்தாலும்.

"பிச்சைக்காரர்களை விரட்டவும்"—மேலிடத்திலிருந்து அடிக்கடி வந்துகொண்டிருந்த உத்தரவுகளைப்பற்றி சின்னன் நினைவு கூர்ந்தான்.

"கையில் ஒரு தடியும் தந்து பிச்சைக்காரர்களை விரட்டும்படி உத்தரவு போட்டால் போதுமா? வண்டியில் பிரயாணிகளைவிடப் பிச்சைக்காரர்கள்தான் அதிகம்......" சின்னன் வலது கையின் மணிக்கட்டில் தொங்கிக் கிடந்த 'லத்தி'யை வெறுப்புடன் நோக்கினன். செம்மண் நிறத்திலுள்ள அந்த மூங்கில் தடியை வீசியெறிய வேண்டுமெனத் தோன்றியது. அந்த விநடியில் அவனுடைய உள்ளத்தில் என்னவெல்லாமோ சிந்தனைகள் மீண்டும் சீறிப்பாய்ந்தன—பிடித்து நிறுத்த முடியாத, தெளிவற்ற, சிந்தனைகள்.

சின்னன் ரெயிலைத் தாண்டி கூட்ஸ் ஷெட்டுக்கு நேராகச் சென்றுன். சுற்றிலும் பெரிய அகலமான வெளிச்சம் வீசுக்கொண்டு ஒரு 'எலக்டிரிக் லைட்' அந்த பிளாட்பாரத்தில் உயர்ந்து நிற்கிறது. சின்னன் அதனருகில் சென்று நாலுபக்கமும் கண்ணேட்டமிட்டான். அந்த வெளிச்

சத்தில் மூழ்கிக் குளித்து நிற்க அவனுக்கு நல்ல இன்பம் தோன்றியது. இந்த வெளிச்சத்தில் திருடர்கள் கூட அந்தப் பக்கம் பார்க்கத் தைரியங் கொள்ளமாட்டார்கள். முந்தின நாள் இரவு சார்ஜ் எடுத்தபோது இருந்த மாதிரியே எல்லாம் இருக்கின்றன. மீண்டும் ஒரு முறை நம்பிக்கை ஏற்படுத்த வாகன்களுடைய அருகில் சென்றான். 'சீல் கார்டு'கள் ஒவ்வொன்றுகப் பரிசோதித்தான். டார்ச் அடித்து அவைகளின் முத்திரைகளுக்கு ஏதாவது கெடுதல் ஏற்பட்டிருக்கிறதா வெனப் பார்த்தான். இல்லை.......ஒன்றுமில்லை... எல்லாம் பத்திரம்.

கடந்துபோனது ஏழாவது இரவுதான். சின்னன் நீண்ட பெருமூச்சுவிட்டான்! அவனுக்கு 'டூட்டி' முடியப்போகிறது. கடந்த ஏழு இரவுகளிலும் அவன் கண்ணை மூடவில்லை. வேலையின் போது தூங்கக்கூடாது. தண்டனை கிடைக்கும். உலகம் முழுவதும் நல்ல தூக்கத்தில் மூழ்கிக் கிடக்கும்போது அவன் தூங்காமலிருந்தான்.

சின்னன் அந்த ஸ்டேஷனுக்குப் புதிதாக வந்தவன்தான். அங்கே நிரந்தரமாக இரண்டு சிப்பாய்கள் இருக்கின்றனர். அவர்களில் ஒரு ஆள் ஏழு நாட்களில் ஓய்வில் போயிருக்கிறன். அவனுக்குப் பதில்தான் சின்னன். மற்றொரு ஆளுக்கு பகல் 'டூட்டி'. ஒவ்வொரு வாரமும் விட்டுவிட்டு அவர்கள் இரவும், பகலும் வேலைபார்க்க வேண்டும்.

ஏழுநாட்களுக்கு முன் ஒரு மாலையில்தான் சின்னன் அந்த ஸ்டேஷனில் வண்டியிலிருந்து இறங்கினன். அன்று இரவே சார்ஜும் எடுக்கவேண்டி வந்தது. ஸ்டேஷனைப்பற்றிச் சின்னனுக்கு ஒரு தெளிவும் இருக்கவில்லை. பகல் மங்கலாயிருந்தது. ஸ்டேஷனுடைய முடிவு எங்கே? சாமான்கள் எங்கெல்லாம் கிடக்கின்றன? ஒரு தெளிவும் இல்லாமல் அவன் வேலையில் புகுந்தான்.

ஆனல், அந்தக் குழப்பமும், பயமும் எல்லாம் காலக்கிரமத்தில் சின்னனை விட்டுப் போயின. இரண்டு மூன்று நாட்களுக்குள் அந்த சுற்றுப்புற சூழ்நிலைகளுடன் அவன் கலந்துவிட்டான். ஒரு புதிய சுகம் ஏற்பட்டது.


## முக்கிய அறிவிப்பு

பத்திரிகை சம்பந்தமாகக் கடிதத் தொடர்பு கொள்வோர்:

**ஆசிரியர்**

**கலைமன்றம், சென்னை—1.**

என்ற முகவரியிட்டே எழுதுதல் அவசியமாகும்.

சந்தா— ஏஜென்ஸி சம்பந்தமான கடிதங்கள், கணக்கு விபரங்கள் மணியார்டர்கள், முதலியவைகளையும் மற்ற, சர்குலேஷன் சார்புள்ள சகல தொடர்புகளையும்......

**மானேஜர்**

**கலைமன்றம், சென்னை—1.**

என்ற முகவரிக்கே எழுதுதல் வேண்டும்.

—உரிமையாளர்.

இந்த சுகம் முடியப்போகிற தென்று சின்னனுக்கு அடுத்த வினடியே நினைவுக்கு வந்தது. நீண்ட காலம் ஒரு இடத்தில் தனியாக வேலே செய்யும்போது வெறுப்படைவதனுல் அல்ல. சின்னன் பதில் ஆள்தான். ஒரு புதிய இடத்தில் ஒன்றிப் பழகும் போது, அவன் தூரத்தில் ஏதாவது ஸ்டேஷனுக்கு வீசியெறியப் படுகிருன்! அதனுல் ஒரு இடத்தில் பத்து நாட்கள்கூட நிலேத்து நிற்க அவனுக்கு முடிவதில்லே. ஓடியாடி அலேந்தான். சரியான ஓய்வில்லே. உணவில்லே. கையில் காசில்லாததால் அவனுக்குப் பட்டினி கிடக்கவேண்டியும் நேரிட்டிருக்கிறது. இரண்டு மூன்று நாட்களுக்காக வேலேக்கு வருகிறவனே நம்பி யாராவது கடன் கொடுப்பார்களா? உணவு விடுதியில் கடன் கொடுப்பார்களா? வழியில்லாதபோது சின்னன் லீவு எடுத்து வீட்டுக்குப் போய் விடுவான். சம்பளம் கிடைக்கும் வரை அங்கு இருப்பான். அங்கும் பட்டினிதான். அம்மா, அப்பா, மனேவி, இரண்டு குழந்தைகள் இவ்வளவு பேர்க ளிருக்கிருர்கள் சின்னனுடைய வீட்டில். சின்னனுடைய சம்பளத்தைக் கொண்டு எப்படியோ வாழ்ந்து வருகிருர்கள்.

இந்த 'ரிலீவிங் டூட்டி' இன்னும் எத்தனே நாட்கள் இருக்கும்? நான்கு ஆண்டுகள் முடிந்தும்கூட ஓட்டம் நிற்பதாகத் தெரியவில்லே. நிரந்தரமான காலி எங்கும் ஏற்படுவதில்லே. குடும்பத்துடன் ஒரு இடத்தில் வாழவேண்டுமென்று சின்னனுக்கு மிகவும் ஆசையாய் இருந்தது. அவரைவிட அவருடைய மனேவியும், குழந்தைகளும் இரட்டிப்பு ஆசைப்பட்டனர். ஒரு சிறிய பட்டிக்காட்டில் தான் அவர்கள் வாழ்கின்றனர். அடைத்துப் பூட்டிவைக்கப்பட்டுள்ள ஓர் உலகம். வெளியுலகில் வர அவர்கள் ஆசையுடன் காத்திருக்கின்றனர். அது நிறைவேற்றப்படாதா? இந்த அலேச்சலுக்கு ஒரு முடிவே கிடைக்காதா? நிராசை சின்னனுடைய மண்டை மூளேயை மரத்துப் போகும்படி செய்தது. ஒரு விநாடி அவன் மவுனமாக நின்றுவிட்டான். ஆறு ஆண்டுகள் பட்டாளத்தில்......... மின்னலேப்போல் பழைய நினைவுகள் அவனேக் கொதிப்படையச் செய்தன. அந்தக் காலம் முழுவதும் அவன் ஆயிரமாயிரம் மைலுகளுக்கப்பால் காட்டு மிருகங்களேப் போல காடும், மலேயும் ஏறி இறங்கிக் கொண்டிருந்தான். ஆறு ஆண்டுக்குள் இரண்டு தடவை மட்டும் அவன் வீட்டைப் பார்த்திருக்கிருன். பட்டாளத்தில் ஒரு சிப்பாயின் வாழ்க்கை—ஓ, அதென்ன வாழ்க்கை! கூடாரத்துக்குள் கிடந்து சாவதுதான். ஆனுல், அந்த வாழ்க்கையிலும் ஒரு சுயதிருப்தி இருந்தது. வீட்டில் அம்மாவும், அப்பாவும், மற்றவர்களும் வயிறு நிறைய உணவு உட்கொண்டு நல்ல ஆடைகள் அணிந்து முழு மனிதர்களாகவே வாழ்ந்தனர் அன்று. இன்றே?

யுத்தம் முடிந்தது. பட்டாளத்திலிருந்து திரும்பி வந்தவர்களுக்காக ஒதுக்கிவைத்திருந்த வேலேகளில் ஒன்று சின்னனுக்குக் கிடைத்தது.

அந்த உடம்பு மீண்டும் காக்கி உடைக்குள் புகுந்தது. ஆனுல் முன்பிருந்த நெருக்கம் இப்போது

இல்லை. ஒரு எளிய வாழ்க்கை, அரைப்பட்டினியும்! யுத்தகளத்திலிருந்து ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்தபோது வாழ்க்கையின் கனம் குறைந்துவிட்ட மாதிரித் தோன்றியது.

தூரத்தில், மரக்கூட்டங்களின் மறைவிலிருந்து வெளிச்சத்தின் சுவை சுவையான காற்சிலம்பொலி மெல்லக் மெல்லக்கேட்கத்தொடங்கியது!

புகைவண்டியின் பயங்கர இரைச்சல் சின்னுனின் கவனத்தைப் பிடித்திழுத்தது. விழித்துக்கொண்டிருந்த உலகம் திடுக்கிட்டு எழுந்து நின்றது. வெளியில் விசில் ஒலி—காதைத் துளைக்கிற விசில் ஒலி—கேட்கிறது.

வடக்கே செல்லும் பாசன்ஜர். இது போகவேண்டிய வழி.......... சின்னுனின் மனதில் வீட்டைப் பற்றிய சிந்தனை எழுந்தது. மனைவியையும், குழந்தைகளையும் பார்த்து எவ்வளவு நாட்களாய் விட்டன? வீட்டிலிருந்து கடிதங்கள் அடிக்கடி வருகின்றன. அவர்கள், அவனைப் பார்க்க ஆவலோடிருக்கின்றனர். ஆனால்........... வெறுங்கையுடன் எப்படிப் போவது? சம்பளம் கிடைக்கும் போது ஓய்வு கிடைக்காது. ஓய்வு கிடைக்கும்போது கையில் காசிருக்காது. இரண்டும் ஒத்து வருவது அபூர்வம்தான். ஆசைகள் மரத்துப் போகின்றன. நிராசையாலும், வெறுப்பாலும் வாழ்க்கை தானாகவே எரிந்துவிடுகிறது.

சின்னுனின் கண்கள் அந்தப் புகைவண்டியை விட்டு அகலவேயில்லை. அவனுடைய மனம் அதில் ஏறி உட்கார்ந்துவிட்டது. ஓய்வில் போயிருக்கிற சிப்பாய் இன்று வருவான். சின்னுனுக்கு விடுதலை கிடைத்துவிடும். அதற்குள் அவனுக்கு வேறு ஏதாவது இடத்திற்கு உத்தரவு வந்தாலும் வரலாம். கிடைக்கவில்லை யென்றால் 'ஹெட் குவாட்டர்ஸ்' ஸ்டேஷனில் சென்று ரிப்போர்ட் செய்யவேண்டும். பிறகு மறு உத்


# திராவிடரியக்கச் செம்மல்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள்

| | | |
|---|---|---|
| அறிஞர் அண்ணுதுரை | ... | 0 8 |
| தலைவர் பெரியார் | ... | 0 8 |
| புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் | ... | 0 8 |
| கடமை வீரர் கருணுநிதி | ... | 0 8 |
| அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி | ... | 0 8 |
| பன்னீர் செல்வம், பாண்டியனுர் | ... | 0 8 |
| நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன் | ... | 0 8 |
| சம்பத், நீலமேகம் | ... | 0 8 |
| ஆசைத்தம்பி, சிற்றரசு | ... | 0 8 |
| பூங்கோதை, அருண்மொழி, ராமாமிர்தம் | ... | 0 8 |

ஸ்ரீமகள் கம்பெனி,
சென்னை-1

தரவு கிடைக்கும் வரை அங்கு காத்துக் கிடக்கவேண்டும். நாற்றைம்பது மைல் தூரத்திலுள்ள ஒரு ஸ்டேஷன்தான் சின்னுனின் ஹெட்குவாட்டர்ஸ். அங்கு போகிற வழியில்தான் அவனுடைய வீடும் இருக்கிறது. அப்படியானல் வீட்டுக்குப் போகலாம். அதற்கு பிரத்தியேக லீவொன்றும் தேவையில்லை. இடையில் ஒரு நாள் ஓய்விருக்கிறது — வாரவிடுமுறை. ஓய்வு நாள் முடிந்து ஹெட்குவாட்டர்ஸ் சேர்ந்தால் போதும். எட்டேகால் மணிக்கு வண்டியிருக்கிறது. அது நேராகச் செல்லும். ஒன்றரைமணிக்கு வீட்டை அடையலாம். அரைப் பகலும், ஒரு இரவும் வீட்டில் இருந்துவிட்டு மறுநாள் காலையில் புறப்படலாம். முதல் தரமான ப்ளான்! சின்னுன் தன்னையறியாமல் தலையைக்குலுக்கிக் கையைச் சொடுக்கிவிட்டான். உள்ளே மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.

வினடிகள் நகர்ந்தன.........ஒரு நீண்ட விசில் சத்தம்......

அந்த வண்டி நகருகிறது. போகட்டும் — வேகவேகமாக நீங்கிப் போகட்டும். சின்னுன் வெறுப்புடன் நினைத்தான். அவனுடைய மனமும் அதிலிருந்து கீழே இறங்கிக்கொண்டது. அவனுடைய வண்டி இனித்தான் வரப்போகிறது. இதல்ல—அதற்கு நேரமிருக்கிறது. அவசரப்படுவதிற்கில்லை. ஆனல், அவனல் அவசரப்படாமலிருக்க முடியவில்லை. மனம் குதித்தோடுகிறது......பிடிகிடைப்பதில்லை......எவ்வளவு வேகம்!

நேரம் விடிந்தது. மணி ஆறு முடிந்தது. சின்னுன் காத்து நின்றுன். அவனுடைய இதயம் ஆனந்தத்தால் நிறைந்திருந்தது. கண்கள் சுற்றியலேகின்றன. சார்ஜ் எடுப்பதற்கு இன்னமும் ஆள் வந்து சேரவில்லை. நேரமாகிறது. லீவில்போன ஆள் வராமலிருப்பானு? பகல் டூட்டிக்காரனவது வர வேண்டாமா? சின்னுனுக்கு நிற்கமுடியவில்லை. புனுகு பூனையைப் போல அவன் பிளாட்பாரத்தில் நடக்கத் தொடங்கினன். இடையிடையே 'கிளாக்'கைப் போய்ப் பார்த்தான். மணி ஏழு... ஏழரை.........எட்டே காலாகப் போகிறது. வண்டி வருவதற்காயிற்று—சின்னுனுக்குப் போவதற்குள்ள வண்டி. அவன் பொறுமை முழுவதும் இழந்தான். இனியும் காத்து நிற்க முடியாது. ஒரு ஆளேயும் காணவில்லை. அவன் ஆத்திரப்பட்டான். வேறு வழியில்லை — விவரத்தை ஸ்டேஷன் மாஸ்டரிடம் தெரியப்படுத்த வேண்டும். களைப்பும், கோபமும் அதற்குள் சின்னுனை மிகவும் தளர்த்தி விட்டிருந்தன. அவன் ஸ்டேஷன் மாஸ்டரை நெருங்கினன்.

"மாதவன் பத்து நாட்களுக்கு லீவை 'எக்ஸ்டென்ட்' செய்திருக்கிருன். காதர் 'ஸிக்-ரிப்போர்ட்'டும் பண்ணியிருக்கிருன். நீயே 'டூட்டி'யைத் தொடர்ந்து செய்ய வேண்டும்......"

சின்னுனிடம் ஸ்டேஷன் மாஸ்டர் சொன்னர்!

.....................

[மலையாளக் கதையொன்றைத் தழுவி எழுதப்பட்டது.]




## 5

மாலை வேளையிலே சாலை வழியிலே கைகோர்த்துக் களிப்போடு செல்லும் காதலர்களைப் பார்த்து அவள் மனம் பொறாமை கொள்ளுமாம். அவர்களைப்போலத் தானும் ஒரு காதலனைப் பெறவில்லையே, நம்மால் அப்படியெல்லாம் போக முடியவில்லையே, அடைபட்ட கிளி போல் கூண்டெனும் இல்லமேயன்றி வேறு வழியற்றுக் கிடக்கிறோமே, இளமைப் பருவம்—வானவில்லைப்போல வரும் வாலிபம் பாழ்படுகிறதே—நல்லவனாக காதலன் ஒருவனைப் பெற்றுக் களிப்போடு இருக்கும் நாள் எந்நாளோ? அந்நாள் விரைவில் வாராதோ! வந்து இன்பம் தாராதோ! என்று காதலனைப் பெறுமுன் அவள் மனம் பெறவில்லையே என்று ஏங்குமாம். பெற்றுவிட்டால், தான் பெற்ற காதலன் எங்காவது போக வேண்டி வந்து அவளைப் பிரிந்து போய்விட்டால் அதையும் தாள மாட்டாளாம். அந்தப் பிரிவை நோக்கி மீண்டும் வாடுவாளாம். அய்யோ! காதலால் ஒன்று பட்ட நாங்கள் காதல் பாதையிலே கடுகளவும் முன்னேறவில்லையே; அதற்குள் பிரிந்து விட்டாரே! இனி எப்பொழுது வருவாரோ! இன்னல் தீர்ப்பாரோ! இனிமை தருவாரோ! என்று பெற்றபின் காதலனின் பிரிவை நோக்கி அவள்மனம் நொந்து கொள்ளுமாம். இப்படி இருவகைப்பட்ட குணமுடைய பெண்களும் சிலர் உண்டு என்பதைக் கீழ்க்காணும் பாடலின் மூலம் உணர்த்துகிறார்.

"பெறாஅமை அஞ்சும் பெறின்
பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு"

* * *

ஊடலைப்பற்றி முன்பே சொல்லிய பெருந்தகையார் மீண்டும் ஞாபகப் படுத்துகிறார். வாழ்விலே கூடலோடு ஊடலும் வேண்டும். அதுவும் அளவோடு வேண்டும். அளவு மீறிவிட்டால் ஆபத்துத் தான் என்பதை, எங்கே அளவு மீறி ஆபத்துக்குள்ளாகப் போகிறார்களோ என்று பயந்து நம்மீது அவ்வளவு அக்கரை காட்டி மீண்டும் ஒருமுறை எச்சரிக்கிறார்.

வாழ்வின் கூடலிலே ஊடல் அவசியம் வேண்டும். அதுவும் அளவோடு. எப்படி உணவில் உப்பு அளவோடு அமையவேண்டுமோ அதுபோல ஊடலும் அளவோடு அமைய வேண்டுமென்றும் அந்த உப்பு உணவிலே சிறிது—ஒரு கல் அளவு அதிகப் பட்டாலும் அந்த உணவு சுவைக் முடியாமல்

போய்விடுகிறதோ அதுபோல ஏற்படுகின்ற ஊடலிலே ஒரு சிறிது அதிகப்பட்டாலும் சுவைக்கமுடியாத உணவைப்போன்று ஆகிவிடும் என்பதை மீண்டும் வன்மையாக

"உப்பமைந்த ற்ருல் புலவி அது
சிறிது
மிக்கற்ருல் நீள விடல்."

என்னும், இக்குறள் மூலம் வலியுறுத்துகிருர். ஆகவேஉங்களுடைய கூடலிலே நீங்கள் செய்யும் ஊடலும் உப்பை அளவோடு கூடிய சுவையுள்ள உணவைப் போன்றே இருக்கச் செய்து கொள்ளுங்கள்.

* * *

என்னதான் பெண்களோடு அன்பாக இருந்தாலும் எப்போதும் ஆண்களை அவர்கள் எளிதில் நம்புவதில்லை. வேலையின் காரணமாக வெளியே சென்ற ஆண்மகன் குறித்த நேரத்திற்கு வீட்டிற்கு வராவிட்டால் எங்கே போனுனே, என்னவோ, யார்யாரை யெல்லாம் பார்த்தானே, என்று அவன் மீது சந்தேகப்பட ஆரம்பித்து விடுவாளாம் அந்தப் பெண்பால்.

இதுதான் இப்படி யென்ருல் அவனேடு எங்காவது கடற்கரைக்கோ, அல்லது பொழுது போக்கத் திரைப் படங்கள் பார்க்கவோ, அவள் சென்ருல் வழியில் அவன் யாரையும் பார்த்துவிடக் கூடாது. பார்த்துவிட்டால் வந்தது மோசம், உடனே அவனைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டு விடுவாளாம். இது வன்னியில் அவள் இருக்கும்போதே யாராவது அறிமுகப்பட்டவர்களோடு அவன் பேசிக்கொண்டிருந்து விட்டால் போச்சு. நான்கு நாட்களுக்கு அவனேடு சரியாகவே பேசமாட்டாளாம். இது நிற்க அவள் இருக்கும் போது அவளுக்குக் காண்பிக்காமலேயே யாராவது நண்பர்களுக்கு அவன் கடிதம் எழுதினுலும் அவனைச் சந்தேகிக்க ஆரம்பித்து விடுவாளாம். எவ்வளவோ பெருமையாகவும், உயர்வாகவும் கூறிவந்த பெண் குலத்திற்கு இம்மாதிரி சில வேண்டாத—கூடாத கெட்ட பழக்கங்களும் இருக்கின்றன என்பதைக் கீழ்க்காணும் குறளிலே காட்டுகிருர்.

"தும்முச் செறுப்ப அழுதாள்
நுமர் உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று."

மஞ்சள் வெய்யில்—மாலை நேரம் புள்ளினம் தம்மிடம் சேரும்காலம் மாக்களினம் தம்முறவு காணும் வேளை. தென்றலோ தேன் கலந்து வீசுகிறது. அதன் மென்மையைத் தாங்கமுடியாத மரக்கொம்புகள் வளைந்து வளைந்து ஊஞ்சலாடிக் கொண்டிருக்கின்றன. தேன் மதுரத் தென்றல் வீச சில்லிட்ட அந்த வீட்டுக்கதவுகள் சிறிது ஓசை எழுப்பிச் சுவற்றிலே மோதிக் கொண்டிருக்கின்றன. வேலைக் களைப்பின் மிகுதியால் தலைவன் வருகிருன். வழிமேல் விழிவைத்து அவன் வருகைக்குக் காத்திருந்த அவள், இருகைவிரித்து, இன் மொழி பேசி வரவேற்கிருள். வேண்டியன செய்கிருள். அவர்களிடையே பொங்கிய இன்ப ஊற்ருல் இல்லமெலாம் தெப்பமாகிறது அவளின் வரவேற்பிலே ஈடுபட்டு மெய்மறந்து விடுகிருன் தலைவன். ஏதோ காரணம், ஏனே தெரியவில்லை. பாவம் தலைவன் தும்மி விடுகிருன். அவனுடைய தும்மலைக் கண்டதும் நூருண்டு வாழ்வீராக என வாழ்த்துகிருள் தலைவி.

உடனே அவளுக்கு என்ன எண்ணம் தோன்றியதோ தெரியவில்லை முகத்தை 'மூனே முக்கால்' டிகிரியில் கோணவைத்துக்கொண்டு திரும்பி இருந்துகொண்டு யாரை நினைத்ததால் தும்மினீர்களோ? ம்... என்னழகு போதுமா? அவள் எப்படியோ! ரம்பையே, ஊர்வசியோ தெரியவில்லை என்கிறாள். இதைக்கண்ட தலைவன் அவளுடைய அந்தச் சிறு ஊடலை மாற்றுவதற்காகத் தும்மலை மறைக்கிறான். அதையும் தெரிந்துகொண்டு, அவளைப்பற்றி நீங்கள் நினைப்பதுஎனக்குத் தெரியக்கூடாது என்றுதானே தும்மலை மறைக்கிறீர்கள் என்று மீண்டும் அவள் ஊடலைப் புகுத்துகிறாள். பாவம் அந்தத் தலைவன் என்னசெய்வான்.

இப்படியே சில தேவையில்லாத காரியங்களில் பெண்கள் ஈடுபடவும் செய்கிறார்கள் என்பதை மிகவும். மனம்நொந்து வள்ளுவனார் மேலே காட்டிய குறள்மூலம் கூறுகிறார்.

* * *

வசந்தகாலம் தன் குளிர்ந்த தென்றலைவீசிக்கொண்டிருக்கிறது. பகலவனோ தன் பொற் கிரணங்களை வீசியவாறே தங்கநிறைகுடம் போல, தான் துயிலப்போகும் காட்சியைக் காண்பித்து நிற்கிறான். புள்ளினம் தம் தம் இருப்பிடம் சேர அங்குமிங்குமாக ஓடிக்கொண்டும், பறந்துகொண்டும் இருக்கின்றன. ஒரே ஆரவாரம் எங்கு பார்த்தாலும் பலவித ஓசை. பகலெல்லாம் தம் சேய்களை மறந்து மனிதரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு இரைமேய்ந்த ஆவினம் வீட்டை நோக்கி விரைந்து செல்கின்றது' அவற்றை அடக்கியாளும் சர்வாதிகாரிகளான ஆயர்குல ஆரணங்குகளும், ஆணழகர்களும் அவற்றைப் பின் தொடர்ந்து குழலோசை எழுப்பியவண்ணம் செல்கின்றனர்.

அரை வயிறு கழுவ ஒருநாள் பாடுபடும் ஏழைப் பாட்டாளி மக்கள் ஓய்ந்து அலுத்துப்போய் வீட்டை நோக்குகிறார்கள். நடையிலே தெம்பில்லை. இருந்தும் மனைவி மக்களைக் காணவேண்டும் அவர்களோடு சிறிது நேரமாவது கூடிக்குலாவி இருக்கவேண்டும் என்ற எண்ணம். அதனால் நடை கொஞ்சம் சுறுசுறுப்பும் பெறுகிறது.

பள்ளிச் சிறார்கள் பட்டம் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். தென்றல் தன் சக்தியையெல்லாம் கொண்டு அவர்களோடு விளையாடுகிறது.



## சைகிள் ரிக்ஷா ஓட்டும் பெண்கள்

ஜீவனம் நடத்துவதற்கு இரவுகளில் ஹைதராபாத்தில் பெண்கள் ஸைகிள் ரிக்ஷாக்கள் ஓட்டுகின்றனர். சென்ற சில நாட்களாக சினிமா தியேட்டரிலிருந்து பெண்கள் பிரயாணிகளை சைகிள் ரிக்ஷாவில் வைத்து இரு பெண்கள் அதை ஓட்டிச் சென்றனர்.

சில மாதங்களுக்கு முன் ஆண் உடையில் பெண் ஒருத்தி ரிக்ஷா ஓட்டியதைக் கண்டு பிடித்து அவளிடமிருந்த லைசென்ஸை போலீஸார் பறிமுதல் செய்திருக்கின்றனர்.

ஆற்றிலே புது வெள்ளப் போக்கால் நீர் கரைபுரண்டோடுகிறது. ஆற்றின் கரையிலே குளிர்ந்த மணற்பரப்பு. தலைவன் அமர்ந்திருக்கிறன்—எதையோ நினைத்த வண்ணம் நீண்ட நேரமாக ஆற்றை நோக்கியவண்ணம் இருக்கிறன். தலைவி பின் நின்று வருகிறள்—ஓசையில்லாமல். ஓசையில்லாமலேயே வந்த அவள் தலைவனின் கண்ணையும் மூடுகிறள்

"யாரது?" இது தலைவனின் குரல்.

"தெரியவில்லையா" இது தலைவியின் குரல்.

"ஓ...! சிங்காரப் பண்பாடுத சித்திரப் பாவையா! வருக! ஆடாம் பொற்சிலையே! வண்ணப் பிழம்பே! வார்த்தெடுத்த திரு உருவே! கொஞ்சுமொழி மாதே! பிஞ்சு மொழி அஞ்சுகமே! வா! என் இதயக் கோவிலில் அணையா விளக்கு வைத்த ஆரணங்கே வா! ஏனே இவ்வளவு தாமதம்?"

"ஆமாம் நீங்கள் சுலபமாகச் சொல்லிவிடுவீர்கள். ஆண்கள் தானே!"

"ஏன் நீங்கள் பெண்கள்......"

"ஆமாம், அதிலேயே சந்தேகமா?"

"வேறு என்ன?"

"எவ்வளவு சிரமம் தெரியுமா?"

"ஏன், எதற்கு?"

"வீட்டை விட்டுக் கிளம்புவதென்றல் என்னென்ன இடையூறுகள். அப்பப்பா!"

"அய்யோ என் செல்வமே அத்தனையும் கடந்தா வந்தாய்."

"உங்கள் அன்பு கிடைக்க வேண்டுமென்றல் இதென்ன இன்னும் எத்துணை கட்டங்கள் இருந்தாலும் அத்தனையும் கடந்து வந்து விடுவேன் கண்ணளா!"

"ஆகா நீயல்லவோ பெண்மையின் இருப்பிடத்திலே நிற்கிறய். கட்டிக்கரும்பே! கட்டாணிமுத்தே! கடைந்தெடுத்த வார்ப்படமே! நான் இனி உனக்குத் தொல்லை தரவில்லை. உன் நிலையறியாது கூறி விட்டேன் அன்பே!"

"அத்தான்!"

இப்படியாகத் தொடங்கிய அவர்கள் காதல் பேச்சு மோன நிலையையும் அடைகிறது. இருவரும் இன்பத்திலே திளைத்து விடுகிறர்கள்.

பளிச்சென மின்னல் மின்ன 'தடா'லென இடிவிழ பொல பொலவென்று மழை பெய்தது போல அவர்களிடையே சிறு குழப்பம். ஏதோ சிறு ஊடல். இருவரும் இரு முனைகளாகிறர்கள். வானம் கருக்கிறது, மேகக் கூட்டங்கள் ஒன்றையொன்று தழுவிக் கொள்கின்றன. இந்நிலையிலே மழை வேறு. தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் பிரிகிறர்கள். வந்த நிலை என்னவோ பிரிந்த நிலை அதற்கு முற்றும் மாறகவே ஆகி விடுகிறது.

காலமும் ஓடி மறைகிறது. என்னதான் ஊடலாக இருந்தாலும் மனமார ஒருவரை யொருவர் காதலித்தவர்கள் பிரிந்து வாழ முடியுமா? தலைவி அழுதழுது ஆறகப் பெருக்குகிறள். நாளுக்கு நாள் உடல் மெலிந்துகொண்டே இருக்கிறது. தலைவியின் நிலையைக் கவனித்துக்கொண்டே வந்த தோழி ஒருநாள் தலைவியின் அனுமதியின்றியே தலைவனிடம் தூது சென்று தலைவியின் நிலையைக் கூறி வழிபடுகிறள்.

புது வெள்ளத்தை நோக்கி நிற்கும் துணல் போல ஊடல் முறிவடையும் நாள் வேண்டிநின்ற தலைவன் மகிழ்ச்சிக் கட்டில் மூழ்கி எழுகிறான். அச் செய்திகேட்ட தலைவியும் மகிழ்வுறுகிறாள்.

மீண்டும் அதே ஆற்றங்கரை. ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக் கொள்கிறார்கள். ஆகா! சொல்லற்கரிய—எழுதவொண்ணா—வருணிக்க முடியாத மகிழ்ச்சி, இன்ப வெள்ளம், கொள்ளை! கொள்ளை! ஊடலின் காரணமாக அடைந்த துன்பமெல்லாம் ஈடுசெய்ய அன்று முழுவதும் இன்ப வெள்ளத்திலேயே நீச்சலடிக்கிறார்கள்.

இதைத்தான் காமத்திற்கு அழகு செய்வது—இன்பம் தருவது காதலர்களின் ஊடல் அவ்வூடலுக்கு இன்பம் தருவது ஊடல் முடிந்தபின் கூடித்தழுவிக் கொள்ளல் என்று பொருள்பட நான்முகனார்—பெருந்தகையார் தம் குறளில் கடைசிப் பாவில்

"ஊடுதல் காமத்திற்கு இன்பம்
அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"
என்று கூறுகிறார்.

இதுவரை வள்ளுவர் கண்ட காமத்தை நுகர்ந்த நீங்கள் இத்தோடு நின்று விடாது மற்றைய இரண்டு பகுதிகளான அறம், பொருள் என்பனவற்றையும் எழிலோடுகற்று இனிமையாகவாழ்க்கை நடத்துங்கள்.

—முற்றும்—

# எழுத்தாளர்களுக்கு

கதைகள், கவிதைகள், கட்டுரைகள் அனுப்பும் எழுத்தாளர்கள் 'புல்ஸ்கேப்' (Foolscap) அளவுத்தாளில் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

எழுத்துப் பிழைகளை இருத்தல் கூடாது.

மூலக்கருத்துக்கள் சிதைவுறாமல் எழுதப்படும் மொழிபெயர்ப்புக் கதைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

அறிவுக்கு விருந்தூட்டும் உயர்தரமானகட்டுரைகள் எழுதி அனுப்பினால் முதலிடம் பெறும்.

எழுதுகின்ற விஷயங்களை நல்ல உயரிய நோக்கங்களுடனும் நம் பண்புக்கும், பண்பாட்டு மேன்மைக்கும்ஆக்கம் தருபவையாகவும், தமிழ் மொழிக்கும், கலைக்கும், அணி செய்பவையாகவும் எழுதி அனுப்புமாறு வேண்டப் படுகிறார்கள்.

**வெளியிடப் படாத கையெழுத்துப் பிரதிகளை அனுப்ப இயலாது**

நகல் எடுத்துக் கொண்டே கையெழுத்துப் பிரதிகளை எங்கட்கு அனுப்ப வேண்டும். இது சம்பந்தமாக எந்த விதமான கடிதத் தொடர்புக்கும் எழுத்தாளர்கள் பதில் பெற மாட்டார்கள்.

—ஆசிரியர்.

# ஏனோ நின்றேன்?

பி. வி. ஆர். பாண்டியன்

★

1. வருகின்றேன் மறுநாளில் ஊருக் கென்று
வரைந்திருந்தீர் ஒரு கடிதம் அதனைக் கண்டு
தெருவினையே பார்த்திருந்தேன் உம்மைக் கண்டும்
திடுக்கிட்டே உள்ளோடிப் போக வில்லை
திருஉருவம் முற்றும்நான் கண்ட பின்பே
திடுதிடுவென் றோடிப் போய் மறையச் சென்றேன்
ஒருபார்வை விட்டெறிந்தீர் என்னை நோக்கி
ஓடுதற்கு மனமின்றி ஏனோ நின்றேன்?

2. துடுக்காக என் கரத்தைப் பிடித்தீர் அன்று
துடித்திட்டேன் வெட்கத்தால் ஆனால் அத்தான்!
வெடுக்கென்று கையுதறிப் போவ தற்கே
விருப்பந்தான் இல்லாமற் போன தென்ன?
அடுக்காக அன்புச்சொல் மொழிந்தீர் மேனாள்
அச்சொல்லை அணங்கெந்தன் செவியி ரண்டும்
மடுக்காமல் மூடவில்லை மானைப் போன்று
மருண்டோடிப் போகாமல் ஏனோ நின்றேன்?

3. ஆற்றோரம் சென்றிட்டேன் நீரெடுக்க
அங்குநீர் வந்தென்மேல் நீர்தெ ளித்தீர்
ஊற்றாலென் உடையெல்லாம் சிதைந்த போதும்
சினங்கொள்ள உளமின்றிச் செய்வ தொன்றும்
தோன்றாமல் நின்றிருந்தேன் எந்தன் தோளைத்
தொட்டிழுத்தீர் அப்போதும் தூரச் சென்று
வேற்றாராய் உமை யெண்ணி வெட்டிப் பேசி
விலகிடுதற் கில்லாமல் ஏனோ நின்றேன்?

❀ **1953-ம் ஆண்டில் 660 வழக்குகள் '54-ம் ஆண்டில் 448 வ**
**விசாரிக்கப் பட்டன, நம் நாட்டின் நீதிமன்றங்களில்.**

❀ **கொலை, திருட்டு வழக்குகளா? அல்ல.**

❀ **பெண்மையைப்பொக்கிஷமெனப் போற்றிப் புகழும் 'புனித' நாட்டிலே இத்தனையும் விபச்சாரக் குற்ற வழக்குகள்.**

❀ **அத்தனைக்கும் காரணம் என்ன வென்பதை இங்கும்—அங்குமாக பேனா முனையை ஓட்டிச் செல்கிறார் எழுத்தாளர்.**



# எங்கே?



எஸ். பாலராசன்.



செல்வம் படைத்த சீமாட்டிகள் தவறான பாதையில் நடந்தால், அதற்குப் பெயர் "நாகரிக"மாம்—ஆனால் சோற்றைக் கண்டு பல நாளாகியதால் சோர்வுற்ற, பஞ்சை பராரிகள் அதே பாதையில் நடந்தால், அதற்குப் பெயர் "விபசார"மாம்! விபசாரம் எங்கே அதிகமாக நடைபெறுகிறது? மாட மாளிகையிலா-மண் குடிசையிலா? எங்கே?

காலை 8 மணி—

உஷா சோம்பல் முறித்துக் கொண்டு "டன்லப்" பஞ்சணையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள்! மேஜைமீது தயாராக இருந்த "பெட் காப்பி"யை எடுத்துக் குடித்து விட்டு அன்றைய செய்தித்தாளைப் படித்தாள். கொஞ்ச நேரம் கழிந்ததும், "இன்று எங்கே போகலாம்?" என்று மனதில் எண்ணியபடி பல் தேய்த்துக் குளித்து விட்டு, அலங்காரம் செய்துகொண்டாள்! "கார் ரெடிமா!" என்று சொல்லிக்கொண்டு எதிரே வந்து நின்றான் பாலு.

பாலுவை ஒரு மாதிரியாகப் பார்த்தாள் உஷா! கட்டுமஸ்தான உடல் கட்டு, களையான முகம், கம்பீரமான பார்வை, சுருண்டு படர்ந்திருக்கும் கிராப்பு!

"பாலு! நீ எதுவரை படித்திருக்கிறே?" என்று கேட்டாள் உஷா.

"கார்ப்பரேஷன் பள்ளிக்கூடத்திலே எட்டாவது வரை படித்தேன்!"

"ஏன் அதற்குமேல் படிக்கல்லே!"

...ளிக்கூடத்திற்குப் பணம் கட்ட எங்கம்மாவால் முடியல்லே!" என்று வருத்தமாகச் சொன்னுன் பாலு.

"போகட்டும். ஓய்வு நேரத்திலே எங்கிட்டே கொஞ்சம் இங்கிலீஷ் கத்துக்க!"

"சரிம்மா.........!"

"கார் ரெடியா இருக்கா?" என்று சொல்லிக்கொண்டே உஷா கீழே இறங்கி காரிலே ஏறினுள். பாலு காரை ஓட்டினுன் வேகமாக.

0 0

"சர்க்காரின் தார் ரோட்டு" பஞ்சணையிலிருந்து சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள் தங்கம்! அவள் இந்நாட்டின் "ராணி" என்பதற்கு அடையாளமாக, ஒட்டிய வயிறு-உலர்ந்த கன்னங்கள்—குழி விழுந்த கண்கள்—உடலே அரை குறையாக மறைத்துக் கொண்டிருக்கும் கிழிந்த புடவை இவற்றேடு காட்சியளித்தாள்.

நேற்றிரவு தன் முந்தானையில் முடித்திருந்த ஓரணுவைத் தேடிக் கொண்டிருந்தாள்—அதையும் யாரோ திருடிக்கொண்டு போய் விட்டதை அறிந்ததும் அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர்த் தாரையாக வழிந்தது! எழுந்து குழாயடிக்குப் போய், அதிலிருந்து துளி துளியாக ஒழுகிக் கொண்டிருக்கும் "கார்ப்பரேஷன் ப்ரீ காப்பி"யைக் குடித்தாள். பிறகு முகம் அலம்பிக் கொண்டு, "தலைவிதி என்று சொல்லுகின்றனரே சோற்று மாடுகள்", அந்தத் தலைவிதியை எண்ணிக்கொண்டு பாதையில் நடந்தாள் தங்கம்!

* * *

காலை 10 மணி—

"லேடீஸ் கிளப்" வந்ததும், காரை நிறுத்தினுன் பாலு. உஷா உள்ளே சென்றதும் அவளைப் போன்ற பெண்கள், அவளுக்கு வரவேற்புத் தந்தனர். பிறகு "ஆங்கிலப் பாட்டும், ஆபாச டான்சுமாக" பகல் கழிந்தது. உஷா வேகமாக நடந்து வந்து காரின் ஸீட்டிலே சாய்ந்தாள்.

"எங்கேம்மா......?"

"ரொம்ப டயாடா இருக்கு, வீட்டுக்கே போ!" என்று அவள் உத்தரவு இட்டதும் பாலு வீட்டை நோக்கிக் காரை ஓட்டினுன்.

0 0

தங்கம் தள்ளாடியபடி நடந்து வந்தாள். அங்கே ஐந்து வாலிபர்கள் நின்றுகொண்டு, அரை நிர்வாணமாகப் போகின்ற மங்கையரைக் கேலி செய்து கொண்டு நின்றிருந்தனர்.

"ஐயா தர்ம துரைகளே! ஒரு காலணு போடுங்கய்யா!" என்று கை நீட்டினுள். அந்த வாலிபர்கள் இவளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஆனுல் அவள் மீண்டும் மீண்டும் அதே பல்லவியைப் பாடினுள்—அந்தப் பஞ்ச பல்லவி யாருடைய காதிலும் விழவில்லை!

"ஐயா சாமி!" என்று கை நீட்டினுள். "போ...போ!" என்று அதட்டினுர் ஒருவர்.

கொஞ்ச தூரம் நடந்தாள். "ஐயா சாப்பிட்டு ரெண்டு நாளாச்சுங்க...!" என்று கை நீட்டினுள்.

"இங்கு ஒன்றுமில்லே வேறு எங்கேயாவது போம்மா!" என்று சொல்லிவிட்டு, பக்கத்திலே இருந்த நண்பரிடம், "பார்த்தீங்களா சார்! இதைப் போல் பிச்சைக்காரியை ரஷ்யாவில் ஒருத்தி




யைக்கூடப் பார்க்க முடியாது. இதைப்பற்றி நேற்று திரு. வி. க. மைதானத்தில் நடந்த கூட்டத்தில் 2½ மணி நேரம் பேசினேன் சார்!" என்று சொன்னார்.

கொஞ்ச தூரம் சென்றாள். ஒரு பருத்த மனிதன் ரிக்ஷாவில் உட்கார்ந்து கொண்டிருந்தான். "இந்நாட்டு மன்னன்" ஒருவன் ரிக்ஷாவை இழுக்க முடியாமல் இழுத்துக் கொண்டிருந்தான். "யார் யாரோ ஏதேதோ கத்றானுங்க... நம்ப நேருவே என்ன செய்ய முடியுங்க......நம்ப நேரு கடவுள் மாதிரிங்க—அவரெப்போல யாருங்க இவ்வளவு தெறமையா ஆச்சி செய்ய முடியும்?" என்று மேல் மூச்சு வாங்க், அந்தப் பருத்தமனிதரிடம் சொல்லிக் கொண்டு வண்டியை இழுத்துக் கொண்டிருந்தான்.

"நிம்பள் நெல்லா சொன்னானுங்கோயா......நேரு நம்பள் எல்லார்க்கும் சாமிங்கோயா!" என்றான் அந்தப் பருத்த மனிதன்.

"ஐயா தர்ம துரையே......பசிக்குது!" என்று அவரிடம் கை நீட்டினாள் தங்கம்.

"ஏய் இன்னாத்கிமே பிச்சே எடுக்குகிறான்......அச்சா மோட்டா இருக்குரான்......எங்கே யாச்சும் போய் வேலே கீலே செய்ம்மே!" என்றான் அந்தப் பெரிய மனிதன்.

இந்த யோசனை அவளுக்குச் சரியென்றே பட்டது. நடந்தாள் மிக வேகமாக. ஒரு வீட்டின் வாயிற்படியில் நின்றாள். உள்ளே இருந்து "யாரது?" என்ற குரல் வந்தது. "ஏதாச்சும் வேலையிருந்தா கொடுங்கம்மா. சம்பளம் ஒன்னும் வேண்டாம் சாப்பாடு போட்டால் போதும்!" என்று தங்கம் உருக்கமாகச் சொன்னாள். "இங்கே ஒன்னும் இல்லே போ போ!" என்று கடுமையாகப் பதில் வந்தது.

தங்கம் பல வீடுகளுக்குச் சென்று கேட்டாள். "போ போ" என்ற பதில்தான் வந்தது. ஒரு வீட்டின் முன் போய் நின்றதும், அந்த வீட்டு நாய் ஒன்று அவளுடைய காலைக் கடித்துவிட்டது. "ஐயோ அம்மா!" என்று அழுது கொண்டு மெள்ள நடந்தாள். அவளுடைய காலிலிருந்து ரத்தம் கசிந்தது—கண்களிலிருந்து கண்ணீர் கசிந்தது!

* * *

மாலை 6 மணி—

மெரினா கடற்கரை. காற்று ஜில்லென்று வீசிக்கொண்டிருந்தது. பாலு காருக்குப் பக்கத்திலேநின்று கொண்டிருந்தான். உஷாவும், நாகரிக வாலிபனான மூர்த்தியும் கார் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

"பாலு! மவுண்ட் ரோட்டிற்கு ஓட்டு!" என்று கட்டளையிட்டாள் உஷா.

கார் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது. பின் ஸீட்டில் உஷாவும், மூர்த்தியும்.....? மூர்த்தி அவளுடைய........?—அவள் பூசியிருந்த பவுடரும், ஸ்னோவும் மெருகு குறைந்து விட்டது. "ஆஹா மாங்கனிக் கன்னங்கள்!" என்றான். அவள் உதட்டிற்குத் தடவியிருந்த 'லிப்ஸ்டிக்' எச்சிலோடு கரைந்து கலந்தது. "உஷா! உன் அதரங்கள் ரோஜா இதழ்கள்—இல்லை, இல்லை. மதுக்கிண்ணங்கள்!" என்றான். அவளை இறுக அணைத்தான். "வாராழி கலசக்......என்று, உன்னைக்கண்டு தான் கம்பன் வர்ணித்திருப்பான்!" என்றான் மூர்த்தி.

கார் நின்றது! "ஏன்?" என்றாள் உஷா.

"மவுண்ட் ரோட்...!" என்றான் பாலு.

கீழே இறங்கினான் மூர்த்தி. உஷாவிடம் விடை பெற்றுக் கொண்டு நகர்ந்தான்.

அப்போது ஒரு கார் வந்து நின்றது. "உஷா!" என்றழைத்தான் அதனுள்ளிருந்த வாலிபன்.

"சேகர் நீயா?" என்று சொல்லிக்கொண்டே காரை விட்டு இறங்கிச் சென்று பேசினாள். கொஞ்ச நேரம் கழிந்தது.

"பாலு! வர்ரியா நியூ குளோபுக்குப் போகலாம்?" என்று கேட்டாள் உஷா.

"நான் வரவில்லையம்மா. எனக்கு இங்கிலீஷ் படம்னா பிடிக்காது!"

"சரி இந்தா. ஏதாவது தமிழ்ப் படத்திற்குப் போய், சினிமா விட்டதும் குளோபுக்கு வந்து விடு!" என்று ஐந்து ரூபாய் நோட்டை பாலுவிடம் கொடுத்தாள் உஷா.

இரவு படம் விட்டதும் பாலு நியூ குளோபுக்குப் போனான். சேகர், உஷாவிடம் விடை பெற்றுக்கொண்டு போய் விட்டான். உஷாவின் முகம் உணர்ச்சியால் வாடிக் கிடந்தது.

"எங்கேம்மா வீட்டிற்குத் தானே?" என்று கேட்டான் பாலு.

"இல்லை. செந்தோம் பீச்சுக்கு ஓட்டு!" என்றாள் உஷா.

கார் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது. வானத்தில் முழுமதி பவனி வந்து கொண்டிருந்தது. விண்மீன்கள் சிதறிக் கிடந்தன. தென்றல் ஜில்லென்றுவீசிக்கொண்டிருந்தது.

பாலுவின் தோள்களை மெதுவாகப் பிடித்தாள் உஷா.

"என்னம்மா?" என்றான்.

"உம். ஒன்றுமில்லை உடம்பெல்லாம் ஒருமாதிரியா......!" என்றாள் உஷா.

கார் நின்றது. "ஏன்?" என்றாள் உஷா.

"பீச் வந்து விட்டது!"

"பாலு! உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?"

"இல்லையம்மா!"

அவள் கடற்கரை மணற்பரப்பில் நடந்தாள். அவன் அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

"ஏன் நின்று விட்டாய்? இப்படி வாயேன்!" என்றழைத்தாள். அவன் பின் தொடர்ந்தான்.

அவர்களுக்கு இடையே புக முடியாமல் தென்றல் திண்டாடியது!

இரவு 12 மணி இருக்கும். கார் வீட்டை நோக்கி மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. அவனுடைய கரங்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. அவள், அவனுடைய மடியில் பூங்கொடி போல் துவண்டு தூங்கிக் கொண்டிருந்தாள்!

* * *

தங்கம் நடந்து நடந்து அவளுடைய கால்கள் சோர்ந்து விட்டன. அவளுடைய பங்களாவான, மரத்தடிக்கு வந்து சேர்ந்தாள். அழுதழுது அவளுடைய கண் பார்வை இருளடைந்தது—அவள்



## போலீஸில் குரங்குகள் மீது வழக்குப் பதிவு

தென் கல்கத்தாவில் டாக்டருடைய ஆராய்ச்சிக் கூடத்தில் களவாடிய குற்றத்திற்காக நேற்று 4 குரங்குகள் மீது போலீஸார் வழக்கு பதிவு செய்திருக்கின்றனர். இந்தக் குரங்குகள் தலைமறைவாக இருக்கின்றன. போலீஸாரால் இவற்றைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த டாக்டர் அவசர அழைப்பின் மேல் வெளியே சென்றிருந்தார் அவர் திரும்பி வந்து பார்த்த போது தமது ஆராய்ச்சிக் கூடத்தில் திருட்டு நடந்திருப்பதைக் கண்டார். பிறகு திருடர்கள் குரங்குகள் என்றும், அவை சில மருந்துகளையும் சர்பத்துகளையும், குடித்துவிட்டு ஓடிவிட்டதாகவும், தெரிய வந்ததாம். மருந்துகளும், ஸிரஞ்சுகளும் திராவக மருந்துகளுள்ள புட்டிகளும் இருந்த அலமாரி உடைக்கப் பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

முன் நாள் காலை மாசர்க்கஸில் உள்ள ஒரு மருந்துக்கடையை ஒரு குரங்குக் கூட்டம் தாக்கி அலமாரிக் கண்ணாடிகளை உடைத்து எறிந்து விட்டு ஓடிவிட்டன. கடைக்காரர் காலை 8 மணிக்குக் கடையைத்திறந்த போது ஒரு குரங்குதான் உட்கொண்ட மருந்தின் பயனாகக் கண் மூடிப் பாதி உறக்கத்திலிருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார். அந்த அதிர்ச்சியிலிருந்து அவர் தெளியு முன்பு குரங்கு உடைந்த ஜன்னல் வழியாக ஓடிவிட்டது. கடைக் காரர் போலீஸாரிடம் புகார் தாக்கல் செய்திருக்கிறார்.

ராணி"யாயிற்றே, தன பிரஜைகள் எல்லாரும் இன்பமாக இருப்பதால், அவள் அழாமல் என்ன செய்ய முடியும்?

மேற்குத் திசையில் சூரியன் மறைந்து கொண்டிருந்தான். எங்கும் இருள் கவ்விக் கொண்டது. அவளுடைய வயிற்றில் ஒரே புரட்சி! அவள் தன் வயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு குழாயடிக்குப் போனாள்! குழாயில் தண்ணீர் வரவில்லை. "ஐயோ! குடிக்கத் தண்ணீர் கூட இல்லையே!" என்று அவள் வாய் முணு முணுத்தது. தன் இருப்பிடத்தை அடைந்தாள். சுருண்டுப் படுத்தாள். கொஞ்ச நேரம் கழிந்தது.

"ஏய் குட்டி!" என்ற குரல் கேட்டதும் மெதுவாகப் பார்வையைத் திருப்பினாள். அவள் அருகே ஒரு முரட்டு வாலிபன் உட்கார்ந்திருந்தான். அவன் கையிலிருந்த எட்டணு "பளிச்" சென்று அவள் கண்ணுக்குத் தெரிந்தது.

அவன், அவளைக் கிட்ட இழுத்தான். அவனை எதிர்த்துப் போராடக்கூட, அவளது உடலில் சக்தியில்லை—அவளிடம் சம்மதம் கேட்கக்கூட, அவனுக்கு நேரமில்லை!! அவளுடைய கையிலே எட்டணுவைத் திணித்து விட்டு, அவன் சென்று விட்டான். அன்று தான் அவள் வழுக்கி விழுந்த நாள்! தனது சரிந்த ஆடைகளைச் சரிபடுத்தக்கூட அவளால் முடியவில்லை. கண்களில் கண்ணீர் வழிய அந்த எட்டணுவை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஏய் யார்மே அது?" என்ற பயங்கரமான குரலைக் கேட்டதும் அவள் பார்வையை உயர்த்தினாள். ஒரு முரட்டு போலீஸ்காரன் நின்றுக் கொண்டிருந்தான்.

அவள் கையிலிருந்த எட்டணு தவறி கீழே விழுந்தது. அந்த எட்டணு போலீஸ்காரனின் பையில் அடைக்கலம் புகுந்தது. அவனுடைய கண்கள், அவளுடைய சரிந்த ஆடைகளையே பார்த்துக்கொண்டிருந்தன.

"ஏய்! இப்படி வாயேன்!" என்று அவளைக் கிட்ட இழுத்தான். அவள் புரிந்துகொண்டாள். "வேண்டாம் சாமி! என்னுல் முடியாது" என்று அவள் அழுதாள். அந்த காருண்ய மூர்த்தி சும்மாவா இருப்பான்.

அவள் முதலில் திமிறினாள்—பிறகு துவண்டாள்! அவனுடைய நக அடையாளங்கள், அவள் கழுத்தில் பதிந்தன—அவளுடைய உடைந்த வளையல்களின் அடையாளங்கள் அவனது முகத்தில் பதிந்தன!

கொஞ்சநேரத்திற்கெல்லாம் அவன் காப்பியும், ரொட்டியும் கொண்டுவந்து தந்தான். அதை அவள் சாப்பிட்டதும் மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள்.

"சீக்கிரம் வாம்மே!" என்ருன்.

"எங்கே சாமி?" என்று கேட்டாள்.

"போலீசுக்கு!" என்று அவளை இழுத்தான்.

"வேண்டாம் சாமி!" என்று அவள் அழுதாள்.

அவனு கருணை காட்டுவான்?—அவளை இழுத்துக்கொண்டு நடந்தான்!

* * *

மறுநாள் காலை—உஷா உட்கார்ந்துகொண்டு இருந்தாள்.

"ஏம்மா நேற்று எங்கேமா போயிருந்தே?" என்று கேட்டார் அவளுடைய தந்தை.

"அப்பா, நேற்று வரும்போது கார் ரிப்பேர் ஆயிடுச்சுப்பா!" என்றாள்.

"அப்புறம்?"

"நம்ப பாலுதான் ரிப்பேர் பண்ணிஞரு! அப்பா அந்த ஓட்டைக் கார் எனக்கு வேண்டாம்பா!"

"ஏம்மா?"

"எனக்கு 54 மாடல் புது கார் தான் வேண்டும்!"

"சரி நாளைக்குப் பார்க்கலாம்!"

"ஊஹும்...எனக்கு இப்பவே வேண்டும்!"

"சரிம்மா எழுந்திரு!" என்ருர் அவளுடைய தந்தை.

அன்றையதினமே மாலை 54 மாடல் புதுகார் வந்து நின்றது. ஏறி அமர்ந்தாள் உஷா.

"எங்கேம்மா?" என்று கேட்டான் பாலு.

"நான் உனக்கு அம்மாவா? உஷா என்றுதான் அன்பாக அழையேன் பாலு!" என்று சிரித்தாள் உஷா.

"எங்கே......?" என்ருன் மீண்டும்.

"கன்னிமரா ஒட்டலுக்கு!" என்று சொல்லிவிட்டு அவன்மீது சாய்ந்தாள் உஷா.

கார் கன்னிமரா உணவு விடுதியை நோக்கி விரைந்தது!

* * *

கண்களில் கண்ணீர் கசிய சோர்வுடன் நின்றிருந்தாள் தங்கம். சரியாக 11 மணிக்கு நீதிபதி வந்தார்.

"தங்கம்! நேற்றிரவு காளிகோயில் முனையில், கோவிந்தன் என்பவரை விபச்சாரத்திற்கு அழைத்தாயா?" என்று கேட்டார் நீதிபதி.


## மாணவர்களுக்கான நூல்கள்

| | |
|---|---|
| ஸ்ரீமகள் இங்கிலீஷ்-தமிழ் கையகராதி | 2 8 0 |
| ஸ்ரீமகள் தமிழ்க் கையகராதி | 1 8 0 |
| நீதிநூல் தொகை I | 1 8 0 |
| " " II | 3 8 0 |
| திருக்குறள் சிறப்புரை | 1 4 0 |
| திருக்குறள் (தீப்பெட்டி அளவு) | 0 8 0 |
| ராமுலு ஆங்கில ஆசான் | 1 8 0 |
| நேரு இந்தி ஆசான் | 1 8 0 |
| வீர பாண்டியன் கட்ட பொம்மன் | 1 0 0 |

ஸ்ரீமகள் கம்பெனி,
சென்னை-1


அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை—அப்படிச் சொன்னால் மட்டும், நீதியின் காவலருக்கு அந்த வார்த்தை காதில் விழவா போகிறது?

"உன்னை மூன்ருண்டுகள் உஷார் விடுதிக்கு அனுப்புகிறேன்!" என்ருர் நீதியின் அதிபதி.

வெளியில்நின்றிருந்த 'போலீஸ் வானில்' தங்கம் ஏறிஉட்கார்ந்தாள். பீறிட்டுவரும் கண்ணீரை துடைத்துக்கொண்டிருந்தாள். போலீஸ் வான் உஷார் விடுதியைநோக்கி விரைந்தது! உஷாவின் கார் உஷார் விடுதியைக் கடந்து மைலை கபாலீஸ்வரரைத் தரிசிக்கப் போய்க் கொண்டிருந்தது, அன்று அறுபத்து மூவர் திருவிழாவை முன்னிட்டு.

X ஒவ்வொரு நாட்டினருக்கும் இலக்கியம் தனியாக அமைந்துள்ளது.
X அது போலவே நாடக இலக்கியமும் எந்நாட்டிலும் நிலவியிருக்கிறது.
X அந்நாடக இலக்கியங்களின் வரிசையிலே இதுவொரு விளக்கம்......



# இரஷ்ய நாடக இலக்கியம்



ஆ. மாதவன்

இரஷ்ய நாடகங்களுக்கு உலக இலக்கியத் துறையில் ஒரு நிலையான பங்கு உண்டெனினும் அவைகள் அவ்விலக்கியத்தின் முக்கிய பகுதியாகக் கணக்கிடப் படவில்லை. நாடகக் கழகங்களின் தேவைக்கென நாடகங்கள் புனையும் இலக்கியக் குழுவினரும் அங்கு இல்லாமலிருந்தனர். குறிப்பாக இரஷ்ய நாடகங்களை 'துர்கனீவ்' 'பிஸம்ஸ்கி' 'செக்காவ்' 'டால்ஸ்டாய்' போன்ற மேதைகளே உருவாக்கினர். இவர்களது உயரிய இலக்கியப் படையல்களிடையே நாடகங்கள் குறிப்பிடும்படியான மேன்மையைபெறவில்லை. சுருங்கக்கூறின் நாடகம் இலக்கியத்தில் முக்கியமற்ற பகுதியாகவே ஒதுக்கப்பட்டிருந்தது.

பண்டைய இரஷ்ய இலக்கியம் பிரஞ்சு 'இலக்கியங்'களின் அடிப்படைக்கு உட்பட்டதாக இருந்தது. 18-ம் நூற்றாண்டில் இரஷ்யாவின் உயர்ந்த வகுப்பினர் ஐரோப்பிய நாடுகளுடன் கொண்ட தொடர்பு காரணமாக; ஐரோப்பிய கலைகளிலும், இலக்கியத்திலும் அவர்களுக்கு அளவற்ற பற்றுதல் ஏற்பட்டது.

பிரஞ்சு சமுதாய பழக்கவழக்கங்கள் இரஷ்யாவில் ஆதிக்கம் பெற்றிருந்த நாட்கள் அவை. அதன் காரணமாக இரஷ்ய இலக்கியமும், பிரஞ்சு இலக்கிய அடிப்படையை மேற்கொண்டது,

நாடகம் பிரான்ஸின் முக்கிய இலக்கிய பகுதியாகையால் அதையும் இரஷ்ய இலக்கிய ஆக்க வேலையாளர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டனர். ஆனால் 'துன்பியல்' இலக்கியங்களுக்கு இரஷ்யாவில் 'மவுசு' இருக்கவில்லை. 'இன்பியல்' படைப்புகளே இரஷ்ய மக்களிடையே விலைபோயின. அதற்குத் தக்க காரணங்களும் இருந்தன. இன்பியல் இலக்கியங்கள் தெளிவும், பொலிவும் பெற்று விளங்கியதோடு; வெகு எளிதில் புரிந்துகொள்ளும் விதமாகவும் அமைந்திருந்தன. வாலிபன் ஒருவனும், இளநங்கை யொருத்தியும் கொண்டுள்ள காதலைப்பற்றியதாக இருக்கும் கதை. இதை சில அற்றுவிட்ட விளக்க வர்ணனையோடு உருவாக்கி விடுதல் எளிது! சமூகத்தின் 'கோணல் மாணல்'களையெல்லாம் கரடுமுரடான நடையில்

எழுதிச் சேர்க்கவேண்டிய அவசி யங்கூட இல்லை. இந்தமுறை எளி தில் எவருக்கும் புரிந்து விடுகிறது. இந்த ரகத்தில் உள்ள நாடகங்கள், 'போன் விஸின்' எழுதிய **Yong hopefull**, 'கிறிபோயெடேவ்' எழுதிய **Wit Works Woe** 'கோகேல்' எழுதிய **The Inspector** என்பவைகளாகும்.

18-ம் நூற்றாண்டின் பிரபல நாடக ஆசிரியர் 'போன்விஸின்'. (1744—92) இவர் தமது 22-வது வயதில் 'பிரிகேடியர்' என்ற நகைச் சுவை நாடகம் மூலமாக மக்கள் மத்தியில் அறிமுகமானார். அதற் கடுத்து வெளிவந்த **Yong hopefull** என்ற நூல் மூலமாக இவர் நாடக ஆசிரியருள் நடுநாயகமாக விளங்கினார். இவைகள் அனைத் துமே பிரஞ்சு இலக்கியத்தின் அடிப்படையில் தோன்றியவை களாக இருந்தன.

**The young hopefull** என்ற நாடகநூலில் மாமூல்படி ஒரு ஜோடி காதலரை புகுத்தியுள்ளார். ஆனால் அவர்களுக்கு எவ்வித புது மையும் அளிக்கப்படவில்லை. பின் தங்கிய கிராமச் சீமான்களை வரைந் து காட்டுவதில் ஆசிரியர் நன்கு தேர்ச்சிப் பெற்றிருந்தார். நூலின் அறிவுறையை, 'ஸ்டாரோடின்' என்ற ஒரு உறுப்பினனின் உரை யாடல் மூலமாக தருகிறார். சோர்வு தரும் தர்ம நியாய வாதங்களைவிட நகைச்சுவை செறிந்த உறுப்பின ரின் அமைப்பே இதில் ஆசிரிய ருக்கு வெற்றிவாங்கித் தந்தது!

19-ம் நூற்றாண்டின் துவக்கத் தோடு இரஷ்யாவில் பிரஞ்சு இலக்கியத்தின் மகிமை குன்ற ஆரம்பித்தது. அதோடு, ஜர்மனி யிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும் வந்த கற்பனை தத்துவம் தலை தூக் கியது. இன்று இரஷ்ய இலக்கியப் பெருந்தகைகளாக விளங்கும் 'லெர்மண்டோவும்' 'புஷ்கினும்' ஆங்கிலப் பெருங்கவிகளாகிய 'பைரன்' 'ஷேக்ஸ்பியர்' போன் றோரைப் பின்பற்றியவர்களாவர்!

மேற்குறிப்பிட்ட இரு இரஷ்ய ஆசிரியர்களுக்கும் நாடகம் வாயி லாக மக்களிடையே மதிப்புஇருந்த தில்லை. விமர்சகர்கள் இவர்களது நாடகங்களை ஒதுக்கித் தள்ளினர். 'புஷ்கின்' எழுதிய நாடகங்களில் **"Borisgodunov"** என்ற நாடகநூல் சில திருத்தங்களுக்குப் பின்னர்தான் மக்களிடையே இடம் பெற்றது.

இந்த நாட்களில் 'கிறிபோய் டோவ்' எழுதிய "அறிவு அனந் தம் விளைவிக்கிறது" என்ற நாடக நூல் மக்களிடையே பெருமதிப் போடு உலவிவந்தது. 'ரொமான் டிக்' அடிப்படைக்கு இதில் அணு வளவுகூட இடம் இருந்ததில்லை. படித்த இரஷ்ய ஆண்—பெண் இருபாலரின் கோழைத்தனத்தை இந்நாடக வாயிலாக ஆசிரியர் நகைச்சுவையொடு எடுத்துக் காட்டு கிறார்.

'ரொமான்டிஸத்தின்' உடன் பிறப்பாகிய 'கொள்கைத் தன்மை' இதில் காணப்படவேயில்லை. உயர் ரக இன்பியலை ஆசிரியர் அப்படியே பின்பற்றியிருக்கிறார் இந்நூலில். நடை அமைப்பு முறை இவை களில் 'மோலியரின்' சீடன் என்றே கொள்ளலாம். இதில் பரி தாபத்துக்குரிய நிலை என்ன வெனில் மேற் குறிப்பிட்ட நூலிற்கு. ஆசிரியர் உயிரோடிருக் கையில் மதிப்போ, புகழோ இருக்கவில்லை என்பது தான்!

பின்பு அறற்கு கிடைத்த மதிப்பு கணக்கற்றதாக இருந்தது. 'போல்ஸ்விக்' புரட்சிக்குப் பின்னரும் கூட அதன் நூல் புகழ் குன்றுமலிருந்தது!

இரஷ்யாவில் 'ரொமான்டிக்' தத்துவத்தின் காலம் மிகக் குறைவாகவே இருந்தது. அதன்பின் 'யதார்த்தவாதம்' தோன்றியது. இரஷ்ய இலக்கிய உலகம் உலகப் புகழ்பெற்ற அரியபெரிய நூற்களைப் பெற்றது இங்நாட்களில் தான். இரஷ்யாவில் **Realism**-த்திற்கு அடிப்படைகோலியவர் 'கோகோல்' ஆவார். [1800—1852]

கேவலம் இழிநிலையினரையும்—சமூகத்திலிருந்து ஒதுக்கித் தள்ளப் பட்டவர்கள் என்று கருதப் படுபவர்களுமான ஆண் பெண் பாலர் கருத்தை திருப்பிவிட்ட முதல் இரஷ்ய இலக்கிய மேதையென இவரைக் கொள்ளலாம். எனினும் கொள்கையளவில் இவரை ஒரு யதார்த்தவாதி என்று சொல்வதரிது! இவரது எல்லா நூற்களுமே **Romantison**-த்தின் சாயல் படிந்தவைகள்.

இரஷ்ய துன்பியல் படையல்களிடையே **'The Inspector'** என்ற இவரது நூலிற்கு முதலிடத்தைத் தரலாம். அன்றைய இரஷ்ய அதிகாரி வர்க்கத்திற்குத் தரும் சவுக்கடிகளாக மிளிர்கின்றது இந்நூல். ஒரு உள்நாட்டு அரசாங்க அதிகாரிகளின் குழுவினரை உருவாக்கி கதையின் வடிவை அவர்களிடையே நின்றும் கோர்த்துச் செல்கிறார். காதலுக்கு இவரது நூற்களில் முக்கியத்துவம் காணப்படவில்லை.

'கோகோலுக்கு'ப் பின் சுமார் அரை நூற்றாண்டு காலம் தனி


நமக்குமுன் உயர்ந்த தத்துவ ஞானிகளும், அரசியல் அறிஞர்களும் வாழ்ந்து போயிருக்கிறார்கள். அவர்கள் தனித் தனியாக எங்கெங்கு நாடுகளிலோ பிறந்திருந்தாலும் அவர்கள் உலகப் பொதுச் சொத்து. அவர்கள் நமக்கு விட்டுச் சென்ற அரிய உரைகளைத் தமிழிலே தருகிறோம் தமிழ் மக்களின் பார்வைக்கு. கீழ்க் காணும் நாடுகளில் வாழ்ந்த அறிஞர்களின் பொன்மொழிகள் பல இதில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. கைக்கு அடக்கமாகவும், கணிசமான விலையிலும் கிடைக்கும்.

அமெரிக்கநாட்டுப் பொன்மொழிகள்

தமிழ் நாட்டுப் பொன்மொழிகள்

ஆங்கில நாட்டுப் பொன்மொழிகள்

பிரஞ்சு நாட்டுப் பொன்மொழிகள்

டால்ஸ்டாய் பொன் மொழிகள்

கார்க்கியின் கருத்துரைகள்

ஒவ்வொன்றும் விலை 8 அணு

அழகிய மூவர்ண அட்டைப் பைண்ட்

ஸ்ரீமகள் கம்பெனி
த. பெ. எண். 275
சென்னை-1

யதார்த்தவாதிகளின் ஆட்சிபீட மாக இருந்தது இலக்கிய உலகம்.

பிரபல இலக்கிய மேதைகளாகிய 'டர்ஜநீவ்' 'டாஸ்டவஸ்கி' 'டால்ஸ் டாய்' 'கோண்கரோவ்' 'பிஸம்ஸ்கி' 'ஓஸ்ட்ரோவஸ்கி' போன்றவர்கள் அந்தப் பட்டியலில்சார்ந்தவர்களே.

**ஓஸ்ட்ரோவஸ்கி [1823—86]** இவர் இரஷ்ய (நாடக) இலக்கிய உலகில் தலையான பங்கு வகிப்பவர். நாட கம் எழுதியே வாழ்க்கை நடத்திய ஒரேஒரு மேதை. இரஷ்ய நகரத்து உயர் குடியினரையும், கீழ் நிலை யினரையும், வணிகரையும், சின் னஞ்சிறு அரசாங்க அலுவலரை யும் வைத்துக்கொண்டு நாடகங்கள் புனைவதில் இவர் மேம்பட்டு விளங் கினர். இவர் ஏறக்குறைய 41 நாட கங்கள் எழுதினர். இவரது இடியும்-மின்னலும் என்ற நூலில் ஏதுமறி யாத இளம் பெண் ஒருத்தி தன் விருப்பத்திற்கு மாருக மணம் செய்துகொள்வதும், கணவனின் கொடுமைச்செயல் காரணமாக முத லில் விபசாரத் துறையிலும், பின்பு தற்கொலை முயற்சியிலும் ஈடு படுவதற்கு காரணக்காரியாவதை யும் படிப்போர் மனம் உருகும் வண்ணம் திறம்படத் தீட்டியுள் ளார். இன்னாரது மற்றொரு பிர பல நாடகநூல் 'ஏழைப்பெண்' என்பது. இவரது நாடகங்கள் தனித் 'துன்பியல்' பண்பு கொண் டதோ, தனி 'இன்பியல்' பண்பு அமைந்ததோ அல்ல; ஆழ்ந்த அன் பும், கருணையும் இவரது நூற் களில் ஆங்காங்கு நிழலிடுவது கண்கூடு! தன்முன் விரிந்து கிடக் கும் கரடுமுரடான வாழ்க்கை முறையை விளக்குவதில் இவர் எல்லோரையும்விட ஒருபடி மேலோங்கியே விளங்கினர்.

இவர் தமது வாழ்நாளிலேயே புகழ்பெற்ற நாடக ஆசிரியராக விளங்கினர். தமது நாடகங்கள் அமைக்க ஏதுக்களாக இருந்த சமு தாய நியதிகளுக்கு மாறுதல் ஏற் பட்டு, வெறும் உண்மைகளுக்கு ரசிகர்கள்பால் விருப்பம் குன்றிய போது இவரது புகழுக்கும் மாசு தோன்றத் துவங்கியது. எனினும் இரஷ்ய நாடக அரங்கில் இவரது நாடகங்களுக்கு முதலிடமேயுள் ளது!

'டர்ஜனீவ்' 'பிஸம்ஸ்கி' 'லியோ டால்ஸ்டாய்' போன்ற மேதையரும் நடித்துக்காட்டப்பட வேண்டு மென்பதற்காகவே நாடகங்கள் புனைந்தனர்.

**'டர்ஜனீவ்' [1818-83]** அன்றைய பிரபல அறிஞர்களுள் இவரும் ஒருவராவார். ஒரு பேராசிரியராக திகழவேண்டுமென விரும்பினர் எனினும், இலக்கிய உலகம் அவரை தன் துறைக்கு இழுத்துக்கொண் டது. இவரது முதல் நாடகம் **"Steno"** என்ற **"Romantic"** நாடகமாகும்! **"Steno"** வெளி யானபின்பு பிரான்ஸிலும், ஜர்மனி யிலும் பிரபலமாகவுள்ள நாடகங் களைப்போன்ற நாடகங்களை இவர் எழுதத் துவங்கினர். "முன்ஜாக்கிர தையின்மை" "பணமில்லாமை" "பாதையில் ஓர் சம்பாஷணை" போன்ற நூற்கள் அந்த ரகத்தைச் சேர்ந்தவைகளாகும். எனினும் "மணமாகாதவன்" "கிராமத்தில் ஒரு மாதம்" போன்ற மனோதத் துவ நாடகங்களே நடிப் பதற்குச் சிறந்தவைகளாகக் கருதப்பட்டன. "கிராமத்தில் ஒரு மாதம்" என்ற நூலே இவரது சிறந்த நாடகமாகப் போற்றப்படு கிறது! இது பிரஞ்சு மேதை "பால்

ஸாக்கின்" "சிற்றன்னே" என்ற நாடகத்தின் தழுவலாகும். மண மான பெண் ஒருத்தியும், மற்ருெரு இளம் பெண்ணும் ஒரு வாலிப பனின் காதலுக்காகப் போட்டி யிடுவதுதான் கதையின் கருவூலம்!

'பால்ஸாக்' அந்த கதையை இரு தரப்பட்ட மனநிலைகளமைத்து இருகூருக இழுத்துச் செல்கிருர். ஆனல் 'டர்ஜனிவ்' அதைக்குடும்பச் சூழ்நிலேயில் குழைத்து, கடைசிப் பகுதியில் மணமானவளுக்கு சில நியாயவாதங்கள் கூறி காதல் பாதையினின்றும் திருப்பி விட்டுவிடுகிருர்.

'டர்ஜனீவ்' எழுதிய நாடகங் களே அவரது வாழ்நாளில் மக்கள் அதிகம் விரும்பவில்லே. அவருக்கே தமது நாடகங்களிடம் குறை மனப் பான்மை இருந்தது. நாவல்கள் புனேவதிலேயே தமது முழுக்கவ னத்தையும் ஈடுபடுத்தினுர். அம் முயற்சியில் அவர் மாபெரும் வெற்றி காணவும் செய்தார். ஆனல் 1900-க்கு பின்பு அவரது நாவல் களுக்கு மகிமை குன்றி நாடகங் கள் மக்கள் மத்தியில் ஒளி பெற்று திகழ்ந்தன. அவைகள் இரஷ்யா விற்கு வெளியிலும் புகழ்க்கொடி நாட்டின!

தன்னேச்சூழ்ந்துள்ள மக்களது மனப்பாங்கை அறிந்து நன்கு எடுத்துக் காட்டுவதிலும் கவர்ச்சி மிக்க அடிப்படை அமைப்பதிலும் இவர் ஏற்றம்பெற்று விளங்கினுர்.

**பிஸம்ஸ்கி** [1820—81] 'எமிலி சோலா' போன்ற பிரஞ்சு மேதை களோடு இவரையும் ஒப்பிட்டுக் காட்டலாம். இவரது நாடகங்களில் படிப்பேயறியாத இரஷ்ய பெருங் குடி மக்களின் அத்தனே பண்பு களேயும் அப்படியே காணமுடி கிறது. இவரது எல்லா நாடகங் களும் ஏறக்குறைய ஒரே ரகமா கவே திகழ்ந்தன. 18-ம் நூற்ருண்டு இரஷ்ய உள்நாட்டுச் சீமான்களின் கண்மூடித்தனமான காமவிளே யாடல்களேயும், அட்டகாசங்களே யும் இவரது "Usurpers of law" என்ற நூலில் காணலாம்.

இவருக்குப் புகழ் வாங்கித் தந் தது "A Bitter fate" என்ற நாடகமாகும். இதை தமது கிராம வாழ்க்கையின் அனுபவங்களேக் கரு வாகக்கொண்டு புனேந்தார். ஒரு இரஷ்ய நிலப்பிரபு தனது குடி



## கிளிகளிடம் கொண்ட மோகம்

கிளிகளிடம் கொண்ட மோகத் தினல் பூனுவில் இரு இளேஞர்கள் ஏப்ரல் 25ம் நாள் மாலே கூண்டில் அடைபடவேண்டிய தாயிற்று.

வேஷ்வா பார்க்கில் முனிஸிபல் மிருகக் காட்சிசாலேயை இரு யுவர்கள் பார்வையிட்டு வந்தனர். அங்கு கூண் டில் வைக்கப் பட்டிருந்த அழகிய கிளிகளேப் பார்த்து மோகித்து விட் டனர். சில கிளிகளே வெளியேற்ற அவர்கள் முயற்சித்தனர். கூண்டின் பூட்டைத் திறந்து கதவைத் திறக் கும் சமயம் மிருகக்காட்சிசாலேக் காவ லாளி கண்டு கொண்டான். அந்த யுவர்களே உடனே பிடித்துக் கொண் டான். இந்தக் குழப்பத்தில் இரண்டு கிளிகள் கூண்டைவிட்டுத் தப்பி ஓடி விட்டன. இரு யுவர்களும் போலீஸா ரிடம் ஒப்படைக் கப்பட்டனர்.

மகன் ஒருவனின் இளம் மனைவியை தகாதவழிக்கு ஆளாக்கினான். காலச்சுழற்சியில் அவளும் சீமானின் கைப்பதுமையாகிறாள். தனது மனைவியின் இந்த ஈனநிலை குடிமகனின் மனதைப் பெரிதும் வாட்டுகிறது. சமூகத்தில் பெருங்கையாக விளங்கும், சீமானுக்கெதிராக எதையும் செய்யச்சக்தியற்றவனை குடிமகன் தனது மனைவிக்கு சீமான் மூலமாக பிறந்த குழந்தை பால் தன் ஆத்திரத்தைக் கொட்டி இம்சிக்கிறான். பயன்? சட்டம் அவனை 'சைபீரிய' பனிப்பாலைக்குக் கொண்டுபோய்த் தள்ளிவிடுகிறது. இந்த சோக நிகழ்ச்சிகள் அத்தனைக்கும் சீமானே காரணக்காரன்; எனினும் அவனது குறை, பணத்தின் சக்தியால் வெளிவரவில்லை. இந்த நூலில் ஒவ்வொரு நிலையையும் திறம்படக் காட்டப்படுகிறதெனினும் உலகப் பிரசித்தி பெற்ற துன்பியல் நாடக ஆசிரியர்களைப்போல நிகழ்ச்சிகளுக்குக் கவர்ச்சியின் மெருகைத்தர 'பிஸம்ஸ்கியால்' இயலவில்லை.

**லியோடால்ஸடாய் [1828—1910]** இரஷ்ய இலக்கிய உலகில் முதல் இடத்தை பெறுபவர். இவருக்கு புகழ் வாங்கித்தந்த நூற்கள்; "அன்னா கரீனாவும்" "போரும் சமாதானமும்" என்ற நூற்கள் தான்! இவரும் மாபெரும் நாடக நூற்களை இலக்கியத்திற்குக் காணிக்கையாகத் தந்ததுண்டு. இளம் பருவத்திலேயே இவர் நாடகத் துறையை விரும்பினார். இவரது "கறைப்பட்ட குடும்பம்" என்ற நாடகநூலில் அன்றைய வாலிபர்களின் 'அறியாமை வாதத்தை' எள்ளிக் காட்டியுள்ளார். அது தான் காரணமோ என்னமோ! அந் நாடகம் நடித்துக் காட்டப்பட்டதில்லை! 1879-ல் இவருக்கு மத சம்பந்தமான ஒரு மாறுதல் ஏற்பட்டது. 'சமாதான முறையை' நம்பிக்கை பிரமாணமாக ஏற்றுக் கொண்டார். புதிய அடிப்படை மாறுதல் அவரது வாழ்க்கையையும் நூற்களையும் இலேசாக பாதித்தது. தமது புதிய கருத்துக்களை புகுத்தி அவர் முதன் முதலாக எழுதிய நாடகம் "இருளின் வலிமை" என்பது. கதையுறுப்பினரையும், பாவங்களையும் கூறிய சம்பாஷணைகள் மூலமாக உருவாக்குவதில் 'டான்ஸ்டாய்' மிக்க திறம் கொண்டவராய் இருந்தார்.

'இருளின் வலிமை' பயிர்த் தொழிலின் அடிப்படையில் நிகழும் காமம், கொலை போன்றவைகளின் கதை. சீமானும், நோயாளியுமாகிய 'பீட்டர்' என்ற பெருங்குடியினனின் வேலையாளனாகிய 'நிகித' என்பவன் பீட்டரின் இரண்டாம் மனைவியிடமும்—அவரது முதல் மனைவியின் மகன், 'அகுலின' என்பவளோடும் கள்ளக் காதலில் ஈடுபடுகின்றனர். 'அகுலின' கர்ப்பவதியாகிறாள். அவள் ஈன்ற குழந்தையை 'நிகித' தன் தாய் 'மெட்ரேனா'யின் தூண்டுதல் காரணமாக கொலை செய்கிறான். குழந்தையை புதைக்கும் கட்டம், இதில் மனமுருக்கும் விதத்தில் அமைந்துள்ளது. நிகழ்ச்சியின் பயங்கர தன்மையை 'மெட்ரிச்' என்ற நற்பண்புடைய வேலையாள் ஒருவனும், 'அன்நியூதா' என்ற சிறுமியும் பேசிக்கொள்வது மூலமாக வெளியிடுகிறார். கிழவி 'மெட்ரேனா' கொடுமையின் கருவூலம். அவளது கணவன் 'ஆக்கிம்' மதசம்பந்தமான வாழ்க்கையின் வக்கீலாக

இருந்தான். கடைசியில் 'ஆக்கிம்' வெற்றிபெறுகிறுன். 'நிகிதா'வின் மனச்சாட்சி அவனையே சுடுகிறது; அவன் வேதனைப்படுகினுன். கடைசியில் எல்லாவற்றையும் ஒப்புக் கொள்கிருன் 'ஆக்கிமின்' முன்னிலையில்! இந்த ஒப்புக்கொள்ளல் படலம் துன்பியல் உள்கருத்திற்கு ஆதரவாகவே வெளிவருகிறது. 'இருளின் வலிமை இரஷ்ய இலக்கியத்தின் மிகப்பெரிய துன்பியல் காவியமாக போற்றப்படுகிறது. இவரது ஏனைய முக்கிய நாடகங்கள்: "கலாசாரக் கனிகள்" "நடைபிணம்" "இருளில் ஒளி" போன்றவைகள்.

19-ம் நூற்ருண்டின் பிற்பகுதி 'யதார்த்தவாதி' காலம் என முன்பு சொல்லியிருந்தோமல்லவா? எனினும், அந்த நாட்களிலும் 'கற்பனை வாதம், அங்கெல்லாம் தேங்கிக் கிடக்கத்தான் செய்தது. 19-ம் நூற்ருண்டின் மத்திய காலத்தில் 'அலக்ஸீ டால்ஸ்டாய்' (1817-75) என்பவர் "கொடிய இவானின் சாவு" போன்ற நாடகங்களை எழுதி இரஷ்ய இலக்கியத்திற்கு காணிக்கையாக்கினுர்.

19-ம் நூற்ருண்டின் கடைசிக் காலகட்டத்தில் இரஷ்ய சமுதாய அமைப்பில் சில பல மாறுதல்கள் தலைதூக்கின. நில உடமைகளின் முக்கியத்துவம் நாசமாய் விவசாயங்களுக்கு வளர்ச்சி ஏற்பட்டது. பயிர்த் தொழிலாளர் பெரும்பாலோரும் யந்திரத் தொழிலில் ஈடுபட்டனர். அதன் பயனுக அவர்கள் நகரப் புறங்களில் வாழத்துவங்கினர். வேலைதேடி ஊர் சுற்றுபவர்கள் கிராமபுறத்தில் வந்து தேங்கினர். 'மாக்ஸியன்' அடிப்படையிலுள்ள 'சமஸ்டிவாத' பிரச்சாரத்திற்கு இந்த மாறுதல் மிகவும் பயன்பட்டது. 'செக்காவ்'-'கார்க்கி' போன்ற மேதைகள் புதிய தலைமுறையின் பிரதிநிதிகளாக திகழ்ந்தனர்.

**ஆண்டன் செக்காவ் [1860-1904]** இவர் எண்ணற்ற சிறுகதைகள் எழுதி மக்களிடையே புகழ்க் கொடி நாட்டினுர். இவரது சிறுகதைகள் நகைச்சுவை பொதிந்ததாக இருந்தன. இவரது பெருநூற்களில் துன்பத்தின் சாயலையும் ஆங்காங்கு காணமுடிகிறது. கதையுறுப்பினர், ஏறக்குறைய வாழ்க்கையில் வழுக்கிவிழுந்தவர்களோ இழிநிலையினரோ ஆகவே காணப்படுகின்றனர்.

இவர் சுவைமிகு சிறுகதைகள் படைத்ததோடு, நாடகத் துறையிலும் உள்புகுந்து ஈடுபட்டார். இவரது நாடகங்களில் நல்லவிதமான சம்பாஷணைகளும், சுவையான அடிப்படையமைப்பும் சிறப்பு பகுதிகள்!

"ஆலோசனை" "காடி" போன்ற இவரது நாடகங்கள் நடித்துக் காட்டப்படாத நாடக அரங்கங்கள் இரஷ்யாவில் இல்லையென்று அறுதியிட்டு சொல்லலாம். "கடல் காகம்" "மூன்று சகோதரிகள்" "வானயாமாமா" "செர்ரித் தோட்டம்" போன்றவைகள் பிரபலமிக்கவைகள்!

பல காரணங்களினுலும், 'செக்காவை' விட எவ்வளவோ மாறுபட்டவராக இருந்தார். 'கார்க்கி' இரஷ்ய இலக்கிய உலகில் முதன் முதலாக சிற்பிகள், தச்சுவேலையாளர்கள் போன்றவர்களை புகுத்தி இலக்கியப் புரட்சி நடத்தியவர் இவர்மட்டுந்தான்!

நாடக கர்த்தா என்ற முறையில் இவரது புகழ் "அடித்தட்டுகள்" என்ற ஒரே ஒரு நூலில்தான் அடங்கியிருக்கிறது.

சமூகத்திலிருந்து ஒதுக்கித் தள்ளப்பட்ட ஒரு குழுவினர் பாழடைந்த ஒரு மண்டபத்தில் இரவு தங்க நேருகிறது. வாழ்க்கையில் தோல்வியை மட்டுமே கண்டிருந்த அவர்களுக்கு அந்த ஈன நிலையிலும் சில ஆசைக் கனவுகள் மிச்சமிருக்கின்றன. அந்தக் குழுவிலுள்ள நடிகன் ஒருவனுக்கு, மது போதையிலிருந்து விடுபட்டு, மீண்டும் ஒரு முறை மேடையேறி பார்க்க வேண்டுமென ஆசை. வழுக்கிவிழுந்த வனிதையான 'நாஸ்தியா, என்பவளுக்கு மீண்டும் ஒருமுறை புனித காதலின் சுவையை அறிய வேண்டுமென்று ஆசை. கதை முன்னேறுகையில் பரிதாபத்துக்குரிய அந்த ஈன நிலையினரின் ஆசைகளும் ஒழிந்துபோகின்றன. கடைசியில் ஏமாற்றம் நிறைந்த சோகப்புகையோடு நாடகத் திரை ஓடுகிறது.

"சின்ன முதலாளி" "கோடை காலத்து மக்கள்" போன்ற நூற்கள் நடுத்தர இனத்தவரின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது.

யதார்த்தவாதத்திற்கு இரஷ்ய இலக்கியஉலகில் இருந்தமுதன்மை ஸ்தானம் 1890-க்குப்பின் இல்லாமலாயிற்று.

1917-ல் ஏற்பட்ட இரஷ்ய புரட்சி புதிய புதிய கருத்துக்களையும் சேர்த்துவைத்தது. புரட்சிக்குப்பின் தோன்றிய ஆட்சியாளர்கள் சமூகத்தையும்—மதக் கோட்பாடுகளையும் திருத்தி புத்தம் புதிய கருத்துக்களை விதைத்தனர். அதற்கென புதிய பிரச்சார நாடகங்களை தோற்றுவித்தனர். பிரச்சார நாடகங்களின் அவிர்பாவத்தோடு பழைய நாடகங்கள் வெளியே தலை நீட்டாத நிலை முளைத்தது. எனினும் இரஷ்யாவின் இலக்கிய வரலாற்றிலே "இன்ஸ்பெக்டர்" "இருளின் வலிமை" "காய்கனித் தோட்டம்" போன்ற நாடக நூற்கள் என்றுமே மதிப்பு குன்றாதவைகளாகும்!


**என்றுமே மறக்கமுடியாத**

**இணையற்ற நாவல்கள்**

**வடுவூரார் வழங்கியவை**

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| கலியாணசுந்தரம் | ... | 2 | 0 |
| சோமசுந்தரம் | ... | 2 | 0 |
| தங்கம்மாள் | ... | 2 | 0 |
| பச்சைக்காளி | ... | 2 | 0 |
| மருங்காபுரி மாயக் கொலை | ... | 2 | 0 |
| வஸந்தகோகிலம் | ... | 2 | 0 |
| நீலலோசனி | ... | 2 | 0 |
| நங்கை மடவன்னம் | ... | 2 | 0 |
| சிங்கார சூர்யோதயம் | ... | 2 | 0 |
| சொக்கன் செட்டி | ... | 2 | 0 |
| சிவராமகிருஷ்ணன் | ... | 2 | 0 |
| பிச்சுமுத்துக் கோனூன் | ... | 2 | 0 |
| நவநீதம் | ... | 2 | 0 |
| துரை ராஜா | ... | 2 | 0 |
| இராசேந்திர மோகன | ... | 2 | 0 |
| சமய சஞ்சீவி | ... | 2 | 0 |
| பாவாடைச் சாமியார் | ... | 2 | 0 |
| மிஸ்டர் பூச்சாண்டி எம்மே | ... | 2 | 0 |
| முத்துலட்சுமி | ... | 2 | 0 |
| டாக்டர் சோணசலம் | ... | 2 | 0 |
| பூஞ்சோலையம்மாள் | ... | 2 | 0 |

**ஸ்ரீமகள் கம்பெனி,**

**சென்னை-1.**

- நல்லவர்கள் செய்த தவறுக்கு மிக மிக வருந்துவார்கள் என்பது எவ்வளவு உண்மை!
- செய்த தவறுக்கு மன்னிப்பு வேண்டுவதால் மட்டும், தவறின் விளைவுகளை மறந்துவிட முடியுமா?
- அழகின் அடிப்படையில்தானா காதல் எழுகிறது?



# மங்கியதோர் நிலவினிலே

ப.சீ.அ.வ்ணங்காமுடி

"மங்கியதோர் நிலவினிலே
கனவிலிது கண்டேன்,
வயது பதினா றிருக்கும்
இளவயது மங்கை;
பொங்கிவரும் பெருநிலவு
போன்ற வொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும்
போற்றவருந் தோற்றம்,
துங்கமணி மின்போலும்
வடிவத்தாள் வந்து,
தூங்காதே யெழுந் தென்னைப்
பாரென்று சொன்னாள்.
அங்கதனிற் கண்விழித்தேன்
அடாடாவோ! அடடா!
அழகென்னுந் தெய்வந்தான்
அதுவென்றே அறிந்
தேன்."

—தேவநாராயணன் குரலினிமையால் இப்பாட்டு இனிக்கிறதா? பாரதியின் சொல்லடுக்காலும், கருத்துச் செறிவாலும் இனிக்கிறதா?

இந்த ஆராய்ச்சியில் எவ்வளவு நேரம் மூழ்கியிருந்தேன் என்பது எனக்கே தெரியாது.

அந்த ஆராய்ச்சியில் நான் ஈடுபடுவதற்கு வழிவகுத்தது, தேவநாராயணனின் இனிய குரலோ, பாரதியின் சொல்லழகோ அல்ல!

இசையிலே இனிமை வழிந்து வழிந்து ஓடலாம். பாடல் கருத்தாழம் காணமுடியாததாக, எண்ணச் சுரங்கமாக இருக்கலாம். ஆனால் அதில் இந்த 'மனமெனும் குரங்கு' கவிய வேண்டுமே.

இந்தப் பாட்டில் ஏன் என் மனங்கவிந்தது? விஷயம் இருக்கு.

இதோ!

"தோழரே!

வணக்கம்.

என் வணக்கத்தை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில்தான் எழுதுகிறேன். கடந்து போன நிகழ்ச்சிகளின் வடுக்கள்..................."

இது ஓர் கடிதம். எனக்கு ஒரு பெண் எழுதியது. அந்தப் பெண்ணைப் பற்றி ஒரு வார்த்தை. **வார்த்தை** என்றவுடன் வர்ணித்துத் தள்ளி விடுவேன் என்று எதிர் பார்க்காதீர்கள். ஏனென்றால் வர்ணிப்பதென்றால் உவமைகள் வேண்டும். புதுமையை வேண்டும் இந்தத் தமிழகத்தில் புது உவமைகளுக்கு நான் எங்கே போவேன்?

மனிதன் பேச ஆரம்பித்து குரலுக்கு வரம்பமைத்து; வரி வடிவங் கொடுத்து; எழுதி; அந்த எழுத்தைப் படிப்படியாக இலக்கிய வடிவமாக்கி; அந்த இலக்கியங்களில் ரசனையை ஏற்ற மங்கையரை இணைத்து; அவர் கூந்தலை கருநாகமென்றும், கருமேகமென்றும்; நெற்றியைப் பிறையென்றும்; கண்ணைக் கமலமென்றும்; விழியை அம்பென்றும்; மூக்கை எள்ளுப் பூவென்றும்; உதட்டைச் செம்மலரிதழென்றும், பற்களை முத்தென்றும்; கழுத்தை மென்தண்டென்றும்; தோளை மூங்கிற் கொம்பென்றும்; கையைக் கொடியென்றும்; விரலைச் செங்காந்தள் மலரென்றும்; மார்பை மலையென்றும்; இடையை இழை என்றும்; இப்படி விதவிதமாக வர்ணித்து விட்டுப் போயிருக்க நான் எந்தப் புது உவமை கொண்டு வர்ணிப்பேன்?

அதுவும் என் மனங்கவர்ந்தாளை மக்கள் முன்னால் கொஞ்சமும் 'வெட்கமின்'றி எப்படி வர்ணிக்க முடியும்?

அதனால் அர்த்தமற்ற வர்ணனை வேலையை, வேலையற்ற சில "புதுமை எழுத்தாளர்களுக்கு" விட்டு விட்டு அவளைப் பற்றிய ஒரு சிறு விபரத்தை மட்டும் சொல்லி விட்டுக் கடிதத்தை உங்களிடம் காட்டுகிறேன்.

அவள் இருப்பது என் சொந்த ஊரான மதுரையில். நான் கோடை விடுமுறை எப்போது வரும், எப்போது அவளைக் காண் போமென "ஜுரிஸ் புரூடன்சையும்", "பிராப்பர்டியையும்" புரட்டிப் புரட்டித் தவிக்கும் சட்டக் கல்லூரி மாணவன்.

அவள் நல்ல அழகி.

நானும்......அழகன்தான். சுமாரான பணக்காரனுங்கூட. அதாவது, ரூப் கார்டன், மிட்லண்ட், மினர்வா, ஓடியன் இவைகளிலும், மாபலிபுர உலாவிலும் பணத்தைச் சுமாராக உருட்டிவிடக் கூடிய வல்லமையுள்ளவன்.

அவள் எங்கள் பக்கத்து வீட்டுக்காரி. எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வரும் வாய்ப்புள்ளவள். காரணம் நான் பெண்ணோடு பிறந்தவன். அவள் வீட்டுக்கு வரும் சமயங்களில் அவளோடு பேசும் வாய்ப்பு ஏற்படுவது இயற்கை தானே.

மிதிலையில் காலை வைத்ததுமே கண்ணை அம்பாக்கி விட்டானே காகுத்தன். அவனுக்கு மட்டமா நான். நான் விழியை வேலாகவோ அம்பாகவோ ஆக்கவில்லை. மாறாக மலர் மாலையாகவே ஆக்கினேன். ஆனால் ஏன் அம்பாக்காமல் போனேனென்று இப்போதுதான் வருந்துகிறேன். அம்பாக்கியிருந்தால் அனுமதியில்லாமலே எய்திருக்கலாமே. மாலையாக்கிய கார

# பிற நாட்டு நல்லறிஞர்களின் பொன்னேடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| நான் ஏன் நாத்திகன் (இங்கர்சால்) | ... | 1 | 0 |
| வால்டையர் ( ” ) | ... | 1 | 0 |
| சீர்திருத்தம் ( ” ) | ... | 1 | 0 |
| மதங்கள் ( ” ) | ... | 1 | 0 |
| அறியாமை ( ” ) | ... | 1 | 0 |
| கடவுள் ( ” ) | ... | 1 | 0 |
| மக்கள் உரிமை ( ” ) | ... | 1 | 0 |
| தொழிலாளர் | ... | 1 | 0 |
| நெப்போலியன் | ... | 1 | 0 |
| ஒளிவிளக்குகள் | ... | 1 | 0 |
| மாஜி கடவுள்கள் | ... | 1 | 0 |
| சீனத்துச் சிங்கம் | ... | 1 | 0 |
| ரஸ்புடீன் | ... | 0 | 8 |
| தாமஸ் மசாரிக் | ... | 1 | 0 |

**ஸ்ரீமகள் கம்பெனி,**
**சென்னை-1.**


ணத்தால் 'உத்தரவுக்கு' எதிர் பார்த்து ஏங்கவல்லவா வேண்டியிருக்கிறது. அதற்குள் மலர்மாலை வாடியுதிர்ந்து விடும்போல் இருக்கிறதே என எண்ணியபோது, என் மனம், "அடமுட்டாளே, இது வாடா மலர்களால் தொடுக்கப் பட்ட மாலை; பதறாதே", என்று ஆறுதல் சொல்லியது.

நானும் காத்திருக்கிறேன் இன்று வரை. காதலின் வெற்றி காத்திருப்பதில் தானோ என்னவோ?

சென்ற ஆண்டில் ஒருநாள் அப்படி அவளுக்காகக் காத்திருந்த போது.

மாலை நேரம். மங்கிய நிலவாக அந்த 'அல்லியின் காதலி' வான விளிம்பில் வந்து கொண்டிருந்தாள்.

அப்போது தேவநாராயணன்—"மங்கியதோர் நிலவினிலே"—என்று பாடினார். பாட்டின் பொருளோ நடு இரவைக் குறித்தது. ஆனால் வந்த நிலவோ மங்கிய மாலை நேர நிலவு. பாட்டிலே இந்தக் **காலக்குற்றம்** ஒன்றுதான் இருந்ததே தவிர மற்றக் குற்றங்கள் ஏதும் இல்லை. ஏனென்றால்!......

மங்கியதொரு நிலவு இருந்தது.

இன்னொரு பிழையும் வந்து விட்டதே! பாட்டு "கனிவிலிது கண்டேன்" என்கிறது. ஆனால் நான் நினைவுலகிலல்லவா இருந்தேன்! இல்லை. நான் கனவுலகில்தான் இருந்தேன். என் இதயங் கவர்ந்தவள் வருவாளா மாட்டாளா? வந்தால் என் மனந் திறந்து என் எண்ணத்தைக் கூறிவிட வேண்டும் என்ற கனவு உலகத்தில்தான் இருந்தேன். அப்படியானால் சரி.

மங்கியதொரு நிலவு இருந்தது!

கனவிலது கண்டேன்.

வயது பதினாறு அவளுக்கு இருக்கும்.

நல்ல இளவயது மங்கை.

பொங்கி வருகின்ற பெருநிலவு போன்ற ஒளிமுகம் அவளுடையது.

புன்னகைபூத்த புது நிலவு போற்ற அழகிய தோற்றத்தினோடு அவள் வந்து கொண்டிருந்தாள்.

எங்கே? என் அருகே. ஆம்.

என் அருகே.

மணிமலை போன்ற ஒளி பொருந்திய வடிவங் கொண்ட அழகுச் சிகரம் என் அருகே வந்தாள். ஆம்.

நிச்சயமாக என்னருகே வருகிருள். ஆனல். ஆனல்.........

**தூங்காதே கண்ணுளா! என்னைத் திரும்பிப்பார் என்று அவள் சொல்லவில்லை. நானும் அடடாவே! அடடா!** என்று துவங்கி, **அழகென்னும் திரு உருவமே! என் ஆசைக்கனியமுதே!** என்று அவளருகே போகவுமில்லை. ஆனல் நான் கண்டது கனவும் அல்ல. உண்மை என்று மட்டும் கண்டு கொண்டேன். ஏன் தெரியுமா? உண்மையிலேயே அவள் என் அருகே வந்தாள்.

வந்தவள்:

"ரேடியோவைச் சரியாகவையுங்கோ. மல்லிய எங்கே?"

கனவிலிருந்து விழித்தவனுன நான்; "ஓ! நீயா? என்ன கேட்டாய்?......மல்லியா?......உங்க வீட்டுக்கு வரவில்லை?......"

"இல்லையே! சரி. உங்களுக்கு லீவு எப்ப முடியுது?"

இப்படிக் கேட்டுக் கொண்டே நாற்காலியில் உட்கார்ந்தாள்.

இந்தக்காலத்துப் பெண்களுக்கு அந்த **"நாலும்"** சுத்தமாக இல்லை. நான் சுதாரித்துக் கொண்டு, "ஏன். நான் மதுரையில் இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையோ?" என்றேன்.

"ஒருவகையில் அப்படித்தான்."

"என்ன? ஏன்?"

"உங்கள் கண்கள் கட்டற்ற மனம் போல இருப்பதால்தான்."

"எந்தச் சுதந்திரத்தை வேண்டுமானலும் உடம்பின் உறுப்புக்களுக்கெல்லாம் மறுத்து விடலாம். ஆனல் இந்தப் புரட்சிக்காரக் கண்ணுக்குத் தடையே போட முடியாது தெரியுமா?"

"அந்தக் கண்ணுக்குத் திரையிட்டுவிட முடியுமே?"

"ஆமாமா!"

"நீங்கள் என்ன சட்டமா படிக்கிறீர்கள்?"

"ஏது? கிண்டல் பண்ணுகிருய்?"

"இல்லை. இல்லை. லா காலேஜிலா படிக்கிறீர்கள் என்று கேட்டேன்."

"ஓகோ! ஆமா. ஏன்?"

"சும்மா கேட்டேன்."

"கனகம்.........."

"என்னங்க?"

"எனக்கு ரொம்ப நாளா ஒரு ஆசை."

"என்ன ஆசைங்க?"

"அதாவது.........."

"நீங்க ஏன் தயங்குறீங்கன்னு எனக்குத் தெரியும். நான் சொல்லட்டுமா?"

"என் மனதின் ஆழத்தை நீ இவ்வளவு இலகுவில் கண்டு விட்டாயா?"

## அசோகமரம்

இந்தியாவின் மேற்கு மலைத்தொடரிலும், கஞ்சம், விசாகப்பட்டணம் முதலிய இடங்களிலும் **அசோகமரம்** பயிரிடப் படுகிறது. இதன் பூ ஒரு பூங்கொத்தைப் போல் இருப்பதுடன் மனத்தைக் கவரும்படியான பட்டுப் பூச்சி நிறம்போல் செம்மை நிறமுள்ளதாய் இருக்கும். இது மாசி, பங்குனி மாதங்களில் மலர்ந்து மகிழ்ச்சி தரும்.

இந்த அசோக மலரை பொடி செய்து, கால்பலம் எடுத்து ஆழாக்கு நீருடன் கலந்து கொடுத்தால் ரத்த பேதி, ரத்தமும், சீதமும் கலந்த பேதி இவைகள் நீங்கும்.

"கைப் புண்ணுக்குக் கண்ணுடியா வேணும். இதுதானே உங்க எண்ணம்! கனகம் நான் உன்னைக் காதலிக்கிறேன்!"

"ஆமா."

"சரி. ஏன் என்னைக் காதலிக்கிறீர்கள்?"

திடீரென்று இப்படி ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டாள். நான் என்ன பதில் சொல்வது? சொல்லா விட்டால்...........

"ஏன் என்னைக் காதலிக்கிறீர்கள்?"

பதில் சொல்ல முடியாமல் திண்டாடினேன். ஆனல் அவளோ திரும்பத் திரும்ப அதே கேள்வியைக் கேட்டாள்.

**"ஏன் என்னைக் காதலிக்கிறீர்கள்?"**

படீரென்று என் மனதில் ஒரு பதில் உதித்தது.

**"நீ அழகாக இருக்கிருய் அதனல் தான்."**

மனதின் பாரம் இறங்கி விட்டது. ஆனல் அடுத்து ஒரு பெரும்பாறையைத் தூக்கி அவள் என் மனதில் வைத்தாள்.

"நான் அழகாக இராதிருந்தால்?"

இதற்கென்ன பதில் சொல்வது? எனக்கு ஒன்றும் ஓடவில்லை. அவளே தொடர்ந்தாள்!

"காதலுக்கு அழகுதான் முதல். ஆண் ராசாவாக இருந்தாலும் அழகான பிச்சைக்காரியை மணந்து கொள்கிருன். ஆனல் சீமாட்டி ஒருத்தி அழகற்றவளாக இருந்தால், பிச்சைக்காரன்கூட அவளை விரும்புவதில்லை. அதனல் தான் காதலுக்கு முதல் அழகு என்றேன். இதைவிட விசித்திரமான வழக்கம் நம் தமிழகத்தில் ஒன்று இருக்கிறது. அது எது தெரியுமா? கட்டாயத்தின் பேரில் ஓர் இளைஞன் ஓர் அவலட்சணத்தை மனமில்லாதிருந்தாலும் கட்டிக்கொள்கிருன். ஆனல் அழகு ததும்ப, எழில் ததும்ப, இளமை ததும்ப, 'துங்கமணி மின்போல்' இருக்கும் ஒரு பெண்ணை........ ஒரு பெண்ணை.........."

உணர்ச்சி வசப்பட்டவனுய், "சொல் கனகா......சொல்......", என்றேன்.

"சொன்னல் நீர் என் கண்ணை விட்டே மறைந்து விடுவீர்."

"இல்லை. சொல். நான் ஏன் ஓடப் போகிறேன்?"

"ஒரு பெண்ணைக் கைம்பெண்........"

அவள் முடிக்கவில்லை. நான் முடிக்கவிட வில்லை.

"நீ கைம்பெண்ணு? கனகம் நீ கைம்பெண்ணு?"

"ஆம். எங்கே இப்போதும் பேசும் உம் காதலை. உம். எங்கே, இளந்தமிழா. பேசு. இளந்தமிழா! பேசு."

"ஏன் பேச மாட்டேன். 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்த' உறுதிபூண்டவன் நான். ஏன் பேசமாட்டேன்? நீ என்னுடையவள்தான். நிச்சயமாக."

"பொறுத்திருங்கள். காலம் வரும்."

இதைச் சொல்லி விட்டு மின்னல்போல, கனவுக் கன்னி போல மறைந்து விட்டாள். ஆம் போய் விட்டாள்.

இவள்தான் அந்தப் பெண். கொஞ்ச நேரத்துக்குமுன் ஒரு கடிதங் காட்டினேனே, அதை எழுதியவள். இனி நீங்கள் கடிதத்தைப் படிக்கலாம்.

"...கடந்துபோன நிகழ்ச்சிகளின் வடுக்கள் உங்கள் மனதிலிருந்து மறைந்திருக்கலாம்.

கடைசியாக அன்று, 'பொறுத்திருங்கள் காலம் மாறும்' என்று சொன்னேனே அந்தக் காலம் வந்து விட்டது.

"ஏன் தங்களைப் பொறுத்திருக்கச் சொன்னேன் தெரியுமா? என் அழகு ஒன்றையே ஸ்ரீதனமாகவைத்து என்னைக் காதலிப்பவரைநான் விரும்பவில்லை. அழகிருந்த காரணத்தால் எத்தனையோ விதவைகள் மறுமணம் செய்து கொள்ளப்பட்ட கதையும் எனக்குத் தெரியும். காலப்போக்கிலே 'பழகிய அந்தப் பால்', பரம்பரைப் பரம்பரையாக இந்தச் சமூகத்தில் ஊறியிருக்கும் 'உடன் கட்டைப் புத்தியால்' புளித்துப்போய், அவர்கள் நாதியற்றவர்களாக, நிராதரவாக, துயரச் சுமையைத் தாங்குகிறவர்களாக ஆக்கப்பட்ட—கதையும் எனக்குத் தெரியும்.

"விளக்கிலே வீழ்ந்தால் மடிவோம் என்பது விட்டிலுக்குத் தெரியாமலா இருக்கும். தனக்கு முன் மடிந்த விட்டில்களை அது காணாமலா இருந்திருக்கும். இருந்தாலும் அவை ஏன் விளக்கை நாடுகின்றன?

விளக்கின் வெம்மையைத் தழுவுவதில்—அந்த **மரண அணைப்பில்தான்** விட்டிலின் வாழ்க்கை **மலர்கிறது.**

'வெல்ல முடியாத ஒன்றை வெல்லும் வழி—அதற்குப் பணிந்து விடுவதுதான்.

தங்கள் எண்ணத்தைத் தாங்கள் என்னிடம் சொல்லு முன்பு, நானே சொல்லக் காத்திருந்தேன். ஆனால்...........'வழக்கம் போல்' தாங்களே கேட்டீர்கள் நன்றி.

அந்தக் கேள்விக்காக எவ்வளவு நாள் காத்திருந்தேன் தெரியுமா?

நான் மணந்து கொண்டதும், என் கணவருடன் வாழ்ந்து வந்ததும் என் மனதில் இருந்து இன்னும் அழிந்து விடவில்லை.

அந்த நினைவை நான் மறக்க விரும்பா விட்டாலும் வாழ விரும்பியதில் தவறு இருக்க முடியாது!

ஏதோ ஓர் உணர்ச்சி வேகத்தில் எழுதப்பட்ட கடிதம் இது.


## கருத்துக் கருவூலங்கள்

| | |
|---|---|
| அமெரிக்கநாட்டுப் பொன் மொழிகள்... | 0 8 |
| ஆங்கில நாட்டுப் பொன் மொழிகள்... | 0 8 |
| தமிழ்நாட்டுப் பொன் மொழிகள்... | 0 8 |
| கார்க்கியின் கருத்துரைகள்... | 0 8 |
| டால்ஸ்டாய் அறிவுரைகள்... | 0 8 |
| திருக்குறள் மூலம் ... | 0 8 |
| அண்ணாவின் உவமைகள் ... | 0 8 |
| கருணாநிதியின் கருத்துரைகள் | 0 8 |
| தாகூர் முத்துக் குவியல் ... | 0 8 |
| லெனின் பொன் மொழிகள் | 0 8 |
| இங்கர்சால் அறிவுரைகள்... | 0 8 |
| விவேகானந்தர் வீரவுரைகள் | 0 8 |
| இராமகிருஷ்ணர் அருள் மொழிகள் ... | 0 8 |
| ஏசுநாதர் அருள் வாக்குகள்... | 0 8 |
| ஸ்டாலின் புரட்சி மொழிகள் | 0 8 |
| மாஜினி மணி மொழிகள் ... | 0 8 |

**ஸ்ரீமகள் கம்பெனி,**
**சென்னை-1**

என் மனதில் மோதி மோதிப் போன கருத்துக்களைக் கை கூடிய மட்டிலும் எழுத்தாக்க முயன்றது. ஆனால் ஒட்டப் பந்தயத்தில் கை தோல்வி காண்பது இயற்கைதானே.

ஏன் காக்கச் சொன்னேன் என்பதற்குக் காரணம் ஒருவகையாக ஊகித்திருப்பீர்கள்.

நான் காக்கச் சொன்னதற்கு இன்னொரு காரணமும் உண்டு. திடீரெனத் தங்கள் வாழ்வில் நான் குறுக்கிட்டால்; முதலில் என் எதிர்கால வாழ்வையெண்ணி நான் கற்கும் கல்வியும், இரண்டாது நீங்கள் என்ன நினைத்துப் படிக்கிறீர்களோ அந்தப் படிப்பும் பாழாகி விடக்கூடும். அதனால்தான் காக்கச் சொன்னேன்.

மல்லியின் கடிதங்களிலே தாங்கள் என்னைப் பற்றிக் கேட்டவற்றிலிருந்து தாங்கள் என்னை மறக்கவில்லை என்பதறிந்து, 'பொறுத்தது போதும், கூடுவோம் வாரீர்', என்றழைக்கவே இக் கடிதம் எழுதுகிறேன்.

வருவீர்களா?

உங்கள்,

கனகம்."

இந்தக் கடிதத்தை உங்களிடம் காட்ட வேண்டிய அவசியம் இல்லைதான். இருந்தாலும் நம் நாட்டின் ஜீவாதாரமான பிரச்சினை ஒன்று இதில் சிக்கியிருப்பதால்தான் இதை உங்களிடமெல்லாம் காட்ட நேரிட்டது. சிரமமானால் மன்னித்து விடுங்கள்.

* * *

கடைசியாக ஒருநாள் அவன் இறந்து போனான். நல்ல இளைஞன். பைத்தியம் பிடித்தவர்கள் திடீரென்று இறந்து விடுவதில்லை. ஆனால் இந்தப் பைத்தியக்காரன் பைத்தியம் பிடித்த மூன்றாவது மாதத்திலேயே இறந்து போனான்.

இவன் ஒரு விநோதமான பைத்தியம். பேசமாட்டான். சிரிப்பான். எழுதுவான். என்ன எழுதுவான்? ஏதேதோ எழுதுவான்.

அவன் எழுதியதை யெல்லாம் டாக்டர் இருதயசாமி ஒன்று விடாமல் படிப்பார். அந்த எழுத்துக் கூட்டங்களிலே இளைஞனின் மனநோயின் காரணம் புதைந்து கிடக்கிறதா என்றறிய அவர் எண்ணிப் பார்ப்பார். ஒரு சிறு தடங்கூட அவருக்குப் பிடிபட்டதேயில்லை.

ஆனால் இறந்து கிடந்த அந்த இளைஞனின் அருகிருந்த அந்த 15 தாள்களும் கடைசியாக டாக்டருக்குக் காரணஞ் சொல்லி விட்டன. எப்போது வேண்டுமோ அப்போது கிடைக்காதது இப்போது கிடைத்து என்ன பயன், என்று டாக்டர் எண்ணினார்.

ஆனால் டாக்டரின் நண்பரான எழுத்தாளர் விடவில்லை.

மேமேலே நட்சத்திரக் குறிக் கப்பால் இருப்பதை எழுதியது அந்தப் பைத்தியக்கார இளைஞன் தான்.

அவன் கடைசியாக எழுதிய வார்த்தைகள் அதில் சேர்க்கப்படவில்லை.

அவை இவை:

**விளக்கின் வெம்மையைத் தழுவி—அந்த மரண அணைப்பில்—அந்த விட்டில் தன் வாழ்க்கையை மலர்வித்துக் கொண்டது.**

PUBLIC LIBRARY
7 - AUG 1956




## வரிசை எண்: 2

செவ்வாய்க்கிரகம் செல்லும் மார்க்கம், விஞ்ஞானத்துறையிலே மிக மிகப் பின் தங்கிய தமிழகத்து மக்களாலேயே கண்டுபிடிக்கப் பட்டதென்றும், முதன் முதலாக வான வெளியைத் தாண்டிச் செவ்வாய் உலகம் சென்றவர்கள் தமிழர்கள்தான் என்றும் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

தமிழ் மக்கள் தங்களின் பிரதிநிதிகளாக விஞ்ஞானி, சிற்பி, நடிகன், முற்போக்குஅரசியல்வாதி, எழுத்தாளன் ஆகிய ஐந்து அறிவுலக மேதைகளை அனுப்பி வைக்கிறார்கள், செவ்வாய்க் கிரகத்திற்கு.

அவர்களும் அங்கு போய்ச் சேருகிறார்கள். முதன் முதலில் அவர்கள் அங்கே கண்டது செவ்வாய் உலகத்தில் வாழும் பெண்ணொருத்தியை.

அவள் தமிழ்மொழியைக் கற்றுணர்ந்தவளாக யிருக்கிறாள். அவளிடம் நமது பிரதிநிதிகள் தங்கள் கருத்தை வெளியிடுகிறார்கள். முதன் முதலில் அவளிடம் என்னென்ன பேசவேண்டும், யார் யாரைப்பற்றி பேசவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? ஏன்? இதற்கு விடை எழுதி (புல்ஸ்கேப் அளவு தாளில் ஒரு பக்கத்திற்கு மேற்போகாமல்) அனுப்புங்கள்.

## தகுதியான விடை அனுப்புவோருக்கு பரிசு ரூ 10

**பரிசு பெறாத விடைகள் சிறப்பாக யிருப்பின் பிரசுரிக்கப்படும். முடிவு தேதி 25—6—55. விடைகளைப் பின் பக்கத்திலுள்ள நுழைவுச் சீட்டுடன் அனுப்புதல் வேண்டும். "ஏன்? பகுதி, கலைமன்றம், சென்னை-1." என்ற முகவரிக்கே விடைகளை அனுப்புங்கள்.**

போட்டி எண் 2. ஏன்? முடிவு தேதி 25-6-55

(நுழைவுச் சீட்டு)

பெயர்...........................................................

வயது...........................................................

கல்விப் பயிற்சி...........................................................

முகவரி...........................................................

...........................................

நாள்..............1955 கையெழுத்து


தயாராகி விட்டது! அரிய படைப்பு!!

மகா கவி

# பாரதியார் கவிதைகள்

தமிழுக்கு மறுமலர்ச்சியைத் தந்த

சுப்பிரமணிய பாரதியின் கவிதைத் தொகுப்பு

தேசீய கீதங்கள், தெய்வப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள்,

முப்பெரும் பாடல்கள்

ஆகிய நான்கு பாகங்களும் அடங்கிய

ஒரே புத்தகம்

விலை ரூபாய் ஆறு

தபாற் செலவு தனி

அழகிய மூவர்ண முகப்பு; கலிகோ பைண்ட்

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு.

விபரங்களுக்கு:

ஸ்ரீமகள் கம்பெனி

சென்னை - 1 கோயம்புத்தூர் மதுரை.




கடவுளுக்கு இந்த உலகம் விளையாட்டுச் சாமானாக இருக்கும் போது, நமக்கு ஏன் கடவுளும் விளையாட்டுச் சாமானாக இருக்கக் கூடாது?

## 19

## சந்திரா...

**ந**ல்ல வேளையாக...!

அன்று தந்தியில் குறிப்பிட்டிருந்தபடி ஜேம்ஸ் பம்பாயிவிருந்து புறப்படவில்லை. ஏதோ திடீரென அவர் உடல் நலமற்றதாம். டாக்டரிடம் சிகிச்சை பெற்றாராம். ஆகவே மறுநாள்தான் புறப்பட முடிந்தது. குறிப்பிட்டிருந்த நேரத்தில் அவர் புறப்பட்டிருக்காரானால்... இடைவழியில் மலையில் மோதி சிதறி விழுந்த விமான விபத்தில் இவரும் பலியாகியிருப்பார்.

ஐயோ! அந்த விபத்தை நினைக்கும் போதும் எனக்கு இன்னும் கவலையாகவே இருக்கிறது. என்னைப் போல எத்தனை சந்திராக்களுக்கு உதவி மகிழவிருந்த எத்தனை ஜேம்ஸ்களை அந்த விபத்து, தனக்கு விருந்தாக்கிக் கொண்டதோ?

கம்பன் பாடிய மற்ற பாடல்களையாவது ஒப்புக்கொண்டுவிடலாம்; முதலில் எழுதிய கடவுள் வாழ்த்தில் வரும் “அகிலா விளையாட்டுடையார் அவர்” என்ற வரிகளை என்னால் ஒப்புக்கொள்ளவே முடியாது. அட பாவமே, இந்த உலகத்தை கடவுள் விளையாட்டாகவே நடத்துகிறாராமே; அவரை நாமும் வணங்க வேண்டுமாமே! சரி அது எப்படியும் தொலையட்டும். **கடவுளுக்கு இந்த உலகம் விளையாட்டுச் சாமானாக இருக்கும்போது, நமக்கு ஏன் கடவுளும் விளையாட்டுச் சாமானாக இருக்கக்கூடாது?**

பாலுவை விடுதலையாக்கி ஜேம்ஸ் வெளியே கொண்டுவந்த அன்று—பாலுவுக்கு கல்லூரியில் ஒரு பாராட்டுக்கூட்டமே நடந்தது—நானும் பேச நேர்ந்தது. அப்போதுதான் மேற்கூறிய என் கடவுள் பற்றிய கருத்துக்களையும் கூறினேன். மாணவர்கள் இந்தக் கருத்துக்களை மனமகிழ்ந்து வரவேற்கிறார்கள் — ஆசிரியர்கள்தான் அடிக்கடி கைக்குட்டையைக் கொண்டு முகத்தைத் துடைத்துக்

கொண்டிருந்த வண்ணமாகவே காணப்பட்டார்கள்!

என் அத்தான் பேச்சும் அன்று ரொமப நன்முக இருந்தது—ஜேம்ஸ் பேசிய ஆங்கிலப் பிரசங்கத்தையும் என் அத்தான்தான், தமிழில் அழகாக மொழிபெயர்த்தார். என் அத்தானை மாணவர்கள் புகழ்ச்சியாகப் பேசியதைக் கேட்டு என் மெய் சிலிர்த்தது.

எத்தனையோ பாராட்டுகள் எனக்கும் என் அத்தானுக்கும் ஜேம்ஸுக்கும் நடந்தன!

அத்தானின் தூய்மையான வாழ்வும், இலக்கியமும் இணைந்து இப்போதுதான் பூரணமான வெற்றி கண்டது. அத்தானுக்காக நடக்கும் பாராட்டுகளில், சில தீவிரவாதிகள் கலாநிதியின் இலக்கியங்களை கொண்டு வந்து போட்டுக் கொளுத்திக் குதூகலித்தனர். அதை அத்தான் ஆட்சேபித்தார். "நீங்கள் செய்வது அவ்வளவு சரியல்ல! குடியிருக்க உதவாதே என்று குழந்தைகள் கட்டிக் கொண்டிருக்கும் மணல் வீடுகளை நாமா போய் அழிப்பது? அதுகள் மகிழ்வுக்குத்தான் அதுகள் கட்டிக்கொண்டன; அப்புறம் அதுகளே அழித்துக்கொள்ளப் போகின்றன" என்று பொதுக் கூட்டத்திலேயே பேசிவிட்டார். அந்த நேரத்தில் மேடையிலே அத்தானின் காலில் வந்து விழுந்து ஒரு உருவம் வணங்கியது!

குனிந்து அத்தான் அந்த உருவத்தை நிமிர்த்தப் பிரயாசைப் பட்டார். ஆனல் முடியவில்லை; காரணம் வணங்கிய அந்த உருவத்திற்கு இரண்டு கைகளும் இல்லை; தன் தலையை என் அத்தானின் கால்களில் முட்டி மோதித்தான், தனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டிருந்தது.

அது யார் என்று கூர்ந்து கவனித்தோம் — வியந்தோம்! காரணம், அதுதான், கலாநிதி!

உடனே, அவருக்கும் தமது பக்கத்தில் மேடையிலேயே ஒரு நாற்காலி போட செய்து, அதில் கலாநிதியை உட்காரவைத்து குற்றங்கள் களையப்பெற்ற புதுமைக் கலாநிதியை வரவேற்கிறேம்—ஆயினும் அவர் தம் கைகளை இழந்ததற்காக வருந்துகிறேம் என்று பேசினர். கூட்டத்தினர் கை தட்டி மகிழ்ந்தனர்.

மேடையிலிருந்த என் அத்தான் மலர்மாலை சூட்டப்பெற்றர்—அதைக் கழற்றி எனக்கு அணிவித்தார். அப்புறம், ஜேம்ஸுக்கும் வரவேற்புக் கமிட்டி மலர் மாலை சூட்டியது. அத்தான் அந்த நேரத்தில் கலாநிதிக்கும் மாலை போடச் சொன்னர். ஆகவே கலாநிதிக்கும் மாலை போடப்பட்டது.

நாங்கள் எல்லாரும் மாலையை கழுத்தில் பெற்றதும்; அப்படியே எங்கள் கைகளால் கழற்றி, மேஜையில் வைத்துக்கொண்டோம். ஆனல், கலாநிதிக்குச் சூட்டப்பட்ட மாலையோ அப்படியே அவர் கழுத்திலேயே கிடந்தது—அவரும் கழற்றி மேஜையில்தான் வைத்திருப்பார், பாவம் எப்படிக் கழற்றுவார், அவருக்குத்தான் கைகள் இல்லையே! அவர் செய்த அட்டகாசங்களை எல்லாம் மறந்துவிட்டு, இதற்காக வருந்தினேம்!

என் அத்தன், மனிதர் என்றல் இவர்தான் மனிதர். கூட்டம் முடிந்ததும்......? அப்படியே



கலாநிதியைத் தன் இரு கைகளாலும் அணைத்த வண்ணமே காரில் கொண்டு வந்து ஏற்றினர். கலாநிதி தமக்குக் கைகள் இல்லையே என்று வருத்தப்பட கூடாத அளவுக்கு, என் அத்தான் கலாநிதியிடம் அன்பு காட்டினர்.

அன்றிரவு கேட்டேன், "என்ன அத்தான் கலாநிதியிடம் இப்படி எல்லாரும் வியக்கும் வண்ணமாக நடந்து கொண்டீர்கள்" என்று! உடனே கட்டிலில் இருந்த அவர் தடபுடலாக எழுந்து பீரோவைத் திறந்து திருக்குறள் புத்தகத்தை எடுத்து வந்து ஒரு பக்கத்தைத் திருப்பி ஒரு குறளை என் கண்களில் சுட்டிக் காட்டினர்—பார்த்தேன்—அது...?

"இன்ன செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்!"

அப்படியே என் அத்தானை......
..."மார்பில் அணிவதற்கே — உன்னைப்போல்
வைரமணிகள் உண்டோ"

என்ற பாரதியின் கண்ணம்மாப் பாடலைப் பாடியவாறே...சேச்சே ...இனிமேல் சொல்லமாட்டேன்; சொன்னல், அவர் நடந்து கொண்ட விதத்தையும் சொல்ல ஆரம்பித்து விடுவார்!

புதிதாக "அன்பன்" என்ருேர் பத்திரிகை ஆரம்பித்து கலாநிதியை அதன் ஆசிரியராக நியமித்து சகல வசதிகளும் செய்வித்தார். ஜேம்ஸைக் கொண்டே, "அன்பன்" பத்திரிகாலயத்திற்கும் திறப்பு விழா கொண்டாடினர்!

ஒரு ரசமான சேதி. "அன்பன்" பத்திரிகையில் "ஒழுக்கமே உயர்வு" என்ற ஒரு பகுதியை ஆரம்பித்து, அதில் தொடர்ச்சியாக எழுதவேண்டுமென்று கலாநிதிக்கு வசதிகள் செய்து கொடுத்தார். ஆனல், அதிகமாக, தம்மோடு பொதுக் கூட்டங்களுக்கு அழைத்துப் போவதில்லை, என் அத்தான்!

"ஏன்" என்று கேட்டேன்'

"கையிழந்த பிறகு வெளியே வரவே வெட்கப்படுகிறார் பாவம்" என்று சற்று வருத்தத்துடனேயே சொன்னார்.

"சந்திரா! கேட்டாயா சங்கதி! நமது பத்திரிகையில் வரும் ஒழுக்கமே உயர்வு என்ற தொடர் கட்டுரை ரொம்ப நல்லாயிருக்குதாம்—அநேகமாக, காந்தியாரின் சத்திய சோதனை மாதிரியாகவே இருக்குதாம்—பெரிய பெரிய ஆள்களே பாராட்டி எழுதியிருக்கிறார்கள்" என்றார், மகிழ்வுடன்.

நானும் மகிழ்ந்தேன்.

நான் என் அத்தானுக்கு நிழலா, அல்லது என் அத்தான்தான், எனக்கு நிழலா என்று புரியவில்லை —அவர் மகிழ்ந்தால் நான் மகிழ்வேன்—நான் மகிழ்ந்தால் அவர் மகிழ்வார் — அவர் கவலை, என் கவலை, என் கவலை; அவர் கவலை!

இந்த பரஸ்பர நிலை உலகில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் என்றைக்கு நிலவுமோ, அன்றைக்கே கடவுள்களின் அட்டகாசமும் தொலையும் என்பது என் கருத்து!...இப்படி எப்போதாவது, ஏதாவது ஒன்றை எப்படியாவது சொல்லி வைக்கிறேன்—என் அத்தான் இதைப் போய் பாராட்டுகிறார், அத்தானாவது பரவாயில்லை போலிருக்கிறது, பயல் மோகன் எங்கம்மா டைரியிலே அப்படி எழுதியிருக்கிறாள், இப்படி எழுதியிருக்கிறாள் என்று வரும் விருந்தாளிகளிடம் கூட சொல்லிக் கொண்டேயிருக்கிறான். மோகன் அவனது அப்பாவையும் மிஞ்சி விடுவான் போலிருக்கிறது. முற்போக்கு எண்ணங்களில்!

சதா அந்த ஜேம்ஸுடனேயே விளையாடிக்கொண்டிருப்பான் — அவரும் அன்று தமது நாட்டுக்குப் புறப்பட்டார்.

நாங்கள் அனைவரும் வழியனுப்பச் சென்றோம்! கலாநிதியும் ஆசையுடன் எங்களோடு அவரை வழியனுப்பக் காரில் வந்தார்.

விமானம் புறப்பட சில நிமிஷங்களே இருந்தன.

பெரியவரைப் பிரிய விருந்தோம்.

"அந்த மோகனிடமிருந்து துவக்கி, இந்தப் பயல் மோகன் வரை, உங்கள் சரிதையை நான் எழுதி வெளியிடப் போகிறேன்" என்றார், ஜேம்ஸ்.

"அவசியமா" என்று கேட்டார், அத்தான்!

"அவசியம்தான்! உலகில் இப்போது வரவர பைபிளை ஒருவரும் ஒப்புக் கொள்வதில்லையல்லவா" என்றார், புன்னகை புரிந்துகொண்டே, ஜேம்ஸ் பெரியார்!

"ஒரு வேண்டுகோள். கலாநிதியின் குணாதிசயங்களை மாத்திரம் நீங்கள் சற்று அகிம்சா மார்க்கத்திலேயே சிந்தித்து எழுதவேண்டும்" என்றார், அத்தான்!

ஜேம்ஸ் முதல் எங்களது சின்னப் பயல் மோகன்வரை......

அனைவரும்

**"இன்பக் கண்ணீர்"** சிந்தினோம்!

விமானத்தின் காற்றாடி விரைவாகச் சுழல ஆரம்பித்தது!

நலம்

(முற்றியது)

* படித்தவள்—பக்குவம் பெற்றவள். ஆனல், தானே உழைத்து உண்டு உடுத்தி வாழவேண்டிய தனிமை வாழ்வு அவளுக்கு.
* உத்தியோகம் பார்க்கத் துணிந்தாள். பெண்ணல்லவா! அதுவும் கட்டிளங் குமரி.
* கேட்க வேண்டுமா? பெரும் பதவிக்கு உயர்த்தப்பட்டாள். ஆனல் ஊறு அடையாமல் ஒதுங்கிக் கொண்டாள்.
* அதன் பலனே அவளுக்கு கிடைத்தான் ஒரு..........




தன் மனம்—சொந்த நலம் சிறக்க வேண்டும் என்பதில் மனி தன் கையாளும் மார்க்கம்— "மறுப்பு."

இதில் ஏற்பட்ட போராட்டம், பாமரர் வாழ்வில் எதற்குமே தெரி யாது என்ற பேச்சு—படித்தோர் பழகும் கோர்ட்களில் குறுக்குக் கேள்விகளின் சதிராட்டம்—அறி வாளர் மன்றத்தில் கருத்துரை களின் களியாட்டம்—என்ற முறையில் மூன்று கலர் பிளாக் வர்ணக் குவியலை அள்ளிப் பூசுவது மாதிரியன்றோ காவியத்தை அமைத்து விட்டனர்.

உள்ளொன்று வைத்துப் புறம் நன்று பேசுவதற்கு ஆத்திசூடி...?

உண்மையை உருக் குலைத்துப் பொய்மையை மெய்மை வேடத் தில் மினுக்கிவிடப் பாடுபடும் பாதை.....?

சந்தேகத்தின் பயனைக் குற்றம் சாட்டப்பட்டவனுக்கு உதவும் சட் டத்தின் பால பாடம்......?

பசுத்தோல் போர்த்திய புலி களாய் வாழ்வில் நடமாடி வரும் இருப்பிடம்......?

ரொம்ப ரொம்ப கஷ்டமான இந்த ஆறறிவு பிராணிகளின் வாழ்வுப் படலம்.

இக் கூட்டத்திலே பழத்தை மட்டுமா கொட்டையையும் கூடச் சேர்த்தே மெல்லாமல் விழுங்கி விட்ட விசுவநாதர் யாருக்கோ வேடிக்கை காட்டவா வேடம் புனைந்திருக்கிறார்! இல்லை. இல்லவே இல்லை. அறியாப் பருவமாம் அஞ்சு வயதிலேயே புருடன் பெண்டாட்டி விளையாட்டு என்று மண் வீடு கட்டும் பரம்பரையினரின் உறுப்பினரன்றோ இவர்...!

விரியன் குட்டி எங்காவது—பிள்ளைப்பூச்சி ஆவது உண்டா என்ன?

வயது சென்றாலும்—உறம் இழந்தாலும்—பல் விழுந்தாலும்—கூண்டில் கிடந்தாலும்—சர்க்கஸ் சிங்கம் உறுமிக் கர்ஜிக்க மறந்தா விடுகிறது......!

..................................................

"சமத்துவம் வேண்டும் சகலத்திலும்—சம உரிமை வேண்டும் சர்வத்திலும்—சம சந்தர்ப்பம் வேண்டும் எத்துறையிலும் என்று அடுப்படியிலிருந்து கொண்டு ஜெகண்டி அடித்துப்பயனில்லை, உரிமைமுழக்கம் வேண்டும். உத்தியோகங்களில் நுழைய வேண்டும்"—இப்படி **மாதர் நலவுரிமைச் சங்கத்தின்** திறப்பு விழாவில் பேசினர் ஒரு நாள்.

அவள் பத்திரிகைகளில் மூன்று கலங்களில் தலைப்பிட்டு வந்த செய்தியைப் பார்க்காதவள்தான். பேச்சின்படியே சொல்புரியும் சிலர் தானா எனச் சோதிக்கக் கிளம்பாதவள்தான்.

ஒரு தம்பி—இரு தங்கையர்—தன்னோடு **நால்வர்.** வாழ்வு ஓட வழி வேண்டும், இருந்த பூர்வீகம் யாவையும் விற்று இண்டரை முடித்துச் சுருக்கெழுத்தும் டைப்பும் படித்து மாகாணத்திலேயே முதல் தரமாய்த் தேறிவிட்ட காரணத்தால், வீட்டுத் துணைக்கு—வேலையின் உதவிக்குச் சுற்று வழியில்—தொலைவான முறையில் உறவு கொண்ட **பெரியம்மா**வுடன் இருந்தாள்.

இருப்பது காணும் ஒரு வாரம். இனி வரும் வாரத்திற்கு என்ன செய்வது என்ற நிலைதான் குடும்பத்தில்.

வேலை காலி இருப்பதோ ஒன்று. போட்ட விண்ணப்பங்களோ பல நூறு. பேட்டிக்கு வந்திருப்பவர்களோ அறுபது. பெண்களோ பன்னிருவர். இக் காட்சியைக் கண்ட பின்னரும்......?

இருப்பினும் இந்த வேலை கிடைத்தால் எவ்வளவு நன்மை என்ற ஆவல் நப்பாசையை மலர விட்டிருந்தது. இதோ மணக்காமலில்லை. ஆனால் இனிக்கும் பழம் இதில் கிடைக்குமா என்பதைக் காய் உருவம் கண்டல்லவா கூற முடியும்!

பேட்டியில் கேள்விகள் கேட்ட போதும்—தான் பதில் கூறிய சமயமும்—தன்னை நோக்கிய ஏஜண்டின் முகம் மகிழ்ச்சியால் குளிர்ச்சி கொண்டதைக் கண்டு கொண்டாள்.

அகத்தின் அழகை முகத்தில் அறியும் திறன் யாவருக்கும் பொதுவன்றோ! நம்பினள் **காந்தா.** தவறவில்லை அதுவும்.

தின்னப்பழம் கையில். தித்திப்பு மாங்கூடையே எதிரில். ஆக திசை மாற்றம் ஏற்பட்டது வாழ்வில்.

அனுபவம் பெற்ற பிறகே வழக்கறிஞர் யாரும் செல்வாக்கில் திளைக்கிறார்கள்.

ஆயிரம் மாணக் கேசுகளை—ஆவி மருட்டும் தோல்விகளைக் கண்ட பிறகே அரை வைத்தியராக முடிகிறது மருத்துவத் துறையில்.

வயதிற்கும்— அனுபவத்திற்கும் மதிப்பு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் பெண் விவகாரத்தில் மட்டும் வயோதிகம் என்றால் துரும்பாக எண்ணப்படுகிறது—வேம்பாக வெறுக்கப்படுகிறது—வேண்டவே வேண்டாம் என்றும் விரட்டப்படுகிறது.

**"வானவில்லைப்போல வரும் வாலிபம்தானே!"**—இப்படியொரு பாடல் வரி. ஆனால் வயோதிகமோ வளர்கிறது. வளர்ந்தபடியே இருக்கிறது. நரை கண்ட நாளிலிருந்து—தோல் சுருக்கம் கண்ட தினத்திலிருந்து. **"வளரும் நெற்பயிர் வயோதிகம்"** எவ்வளவு நன்றாக இருக்கிறது!

அறுபதில் மணவறை கண்டு அருமந்த மக்கட்பேறு கொண்டோர் அவனியில் எத்தனை எத்தனை ...?

இவ்வாறு 'லாஜிக் பாயிண்ட்ஸ்'களைப் போட்டுத் தன் வயோதிகத்திற்குத் திடம் உண்டு என்று சாதிப்பார் விசுவநாதர்.

தையலர் தம் தாகம் தீர்க்க மாட்டாமல் தத்தளிப்பவர் எண்ணிக்கை வாலிபர் உலகில்தான் அதிகம் என்பார்.

"இரகசிய ஆலோசனைகளும் வைத்தியர்களது டைரிகளைக் கண்ணோக்கினால் அங்குள்ள புள்ளி விவரம் கண்டு தலை குனிவது இளைஞர் பார்ட்டியே!

தாது புஷ்டி மருந்துகள் தயாரிப்பது முக்காலே மூணு வீசம் வாலிபர்களுக்கே!

பூரான்கடி—பூச்சிக்கடி மாதிரி மேக வியாதிக்கு ஆளாகும் அருமை நண்பர்கள் யுவர்கள்தான்!

இவ்வுண்மைகளால் அறியக் கிடைப்பவை எவை எனக் கேட்பார் விசுவநாதர்.

"வலிமையின் திறமையை எடை பார்த்தா காதல் உலகில் காலடி வைக்கிறார்கள் பெண்கள்!

உடையணி ஒய்யாரம்—தலைமுடி சிங்காரம்—தைலவகை பவுடர் ஸ்னோ தேவை என்ற நிலை தானே தலை சிறந்த ஆட்சி நடத்துகிறது காதல் உலகில்.

மென்மைச் சிவப்பு மோகத்தை மூட்டக் கூடியது—மஞ்சள் நிறம் காதல் லயத்தை மீட்டக் கூடியது—என்று நிறங்களுக்குக்கூட இலக்கணம் கண்டுள்ளது எதற்காக?

குறிப்பிட்ட ஜாக்கெட் டிசைன் உரிமையைப் பதினாயிரம் பவுன்கள் கொடுத்து விலைக்கு வாங்கிக்


**திருமணப் பரிசுக்குரிய அரிய நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| தம்பதிகள் சுகமாய் வாழ்வதெப்படி? | 3 | 12 | 0 |
| திருக்குறள்—பரிமேலழகர் உரை | 5 | 0 | 0 |
| திருக்குறள் சிறப்புரை | 1 | 4 | 0 |
| முல்லைக்காடு | 0 | 8 | 0 |
| நல்ல பெண்மணி | 2 | 4 | 0 |
| இன்ப நிலா | 1 | 0 | 0 |
| புது வாழ்வு | 1 | 0 | 0 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | 0 | 12 | 0 |

**ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1**

கொண்ட பாரீசு ஜேம்ஸ் ரெடிமேட் விற்பனையாளர்கள் ஒரு லட்சம் பவுன்களாவது கிடைக்கும் என்ற உறுதியில்லாமலா ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்?

அவரது உரிமை முழக்கத்தின் விரிவுரையில் இது ஒரு சிறு பகுதி.

"வலிமை...வலிமை என்று பீத்திக் கொள்கிறார்களே அதற்கென்ன வழியில்லையா...? வகை கிடையாதா......? வாருங்கள்......! கேளுங்கள்" என்று ஒரு பிரசங்கமே செய்துவிடுவார்.

"சித்தர் வழியில் ரசமணி... ஆயுர் வேதத்தில் எத்தனையோ கிருதங்கள்...மாத்திரைகள்... யூனனியில் கெந்தகக் கிணணங்கள்... பெங்களூரில் மேலை நாட்டு வகையான ஊசி மருந்து...! வேண்டுமானால் விவரமே எழுதித் தருகிறேன்" என்பார்.

"நரம்புகளை முறுக்கி விட்ட பின் தானே வீணையைக் கரம் எடுக்கிறார் வித்துவான்...! அது மாதிரி...! நரம்புத் தளர்ச்சியைப் போக்கிட மருந்தா இல்லை?

கடிகாரத்திற்குச் சாவி கொடுக்க நான்கு வயது பாப்பாவிற்கும் நன்றாகத் தெரியும். எல்லாம் தெரிந்தும் ஏன் வழியில்லை?

எல்லாம்வல்ல மனிதன் இதில் மட்டும் கையாலாகாதவனாக இருக்கிறான் என்பது காரண காரியமில்லாத முடிவு என முடிவுரையும் கூறுவார்.

பட்டாக் கத்திக்குக் கூர்மையில்லை என்றால் பாதையிலுள்ள பாராங்கல்லில் தீட்டிக் கொள்ளக் கூடவா மனிதனுக்குத் தெரியாமல் போகிறது.......

ரங்கசாமி "எப்படியும் கனகத்தைச் சரிக்கட்டி" விடுவதாக உறுதி அளித்திருந்தான்.

'சரிக்கட்டி விடுவது'—'சரிக்கட்டிப்போவது'—வாழ்க்கையின் எல்லாத் திருப்பங்களிலும் அவசியம் என்பதை அறிவு மனிதனுக்குத் தெரிவித்து அதிக காலமாகி விட்டதே.

இதற்காகத் தனது செலவு அயிட்டத்தில் தொகை உயர்வு ஏற்படுவதை எதிர்க்கவில்லை ஏஜண்டு.

இருட்டியதும் இரை தேடக் குகை நீங்கிய வேங்கை உறக்கம் வருகிறதென்று எங்காவது படுக்குமா என்ன?

விரட்டி விரட்டி சோர்ந்து விட்டது என்று வேடன் வெறும் புள்ளிமானை விட்டு விடுகிறதில்லையே!

தோல் இருக்கச் சுவை பருக மாங்கனியை உள்ளே அரித்து விட்ட வண்டிற்குத் தாழ்ந்துவிட மனிதன் சம்மதிப்பானா?

லிஸ்ட்டைக் காட்டுவான். பணம் கை மாறும்; பை கெட்டுடன் பஜாரிலிருந்து போவான். இது வரையில்தான் பார்த்திருக்கிறார் விசுவம். அதன் பிறகு அவனது பாதை எப்பக்கம் என்பதை இவர் அறிந்து கொண்டதே இல்லை.

நம்பிக்கையோ நாள் பட்ட குட்டமாகி விட்டது!

பங்களா வாசிகள் தங்களது பையன்களைப் பள்ளித் தேர்வில் தூக்கிப்போட பாடசாலை ரைட்டரிலிருந்து எக்ஸாமினர்...யுனிவர் சிட்டி ஆணையர்...செனட் மெம்பர்—சான்சலர்வரை முற்றுகையிட்டு விடுகிறமாதிரி பதவி உயர்விற்கு......ஏற்பாடு செய்தால்

கனகம் கிடைக்காமலா போய் விடுவாள் என்று திட்டமிட்டார்.

அசிஸ்டெண்ட் அக்கவுண்டெண்ட். ஒரே தாவு. உத்தரவைப் பார்த்ததும் இதென்ன கனவா இல்லை நிஜ உலக நிகழ்ச்சிதானா எனக் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டாள்.

மறுநாள் ஏஜண்டே பாராட்டு விருந்தொன்றும் நடத்தினார் என்றால் அதற்குப் பிறகும் நம்பாமல் இருக்க முடியுமா?...............................

"பார்த்த அன்றிலிருந்து எனக்கு ஆசைதான். காந்தா...! வேலை தந்தேன். வாழ்வு தந்தேன். ரெங்கசாமி மூலம் வேண்டியதெல்லாம் தந்தேன். இன்று பதவியில் உயர்வு தந்தேன். இனி......!"

"என்ன என்ன ரெங்கசாமியா...? தந்தீர்களா...? எனக்கொன்றும் விளங்கவில்லையே...?

"அவன் வந்து இதையெல்லாம் தெளிவாகச் சொல்வானா என்ன? எல்லாவற்றையும் உன் நன்மைக்காகவே செய்து வருகிறான். பதவி உயர்வுமூலம் உன் நிலையை உயர்த்தினால் உன்னை வாழ்க்கைத் துணைவி ஆக்கிக் கொள்வதில் யாரும் குறை கூற மாட்டார்கள் என்றான். உண்மைதானே. நீயும் என்னை அடுத்து உத்தியோகத்திற்கு வந்துவிட்டாய். காதலித்தோம்......கடிமணம் கொண்டோம் என்றால் உலகமே நம்மை ஏற்றிப்போற்றும். ஏற்றத் தாழ்வை மீறி நிற்பதுதானே காதல். ஆக வயது வித்தியாசத்தைப் பற்றி எல்லாம்......!"

"கவலைப்படவுமில்லை. கவலைப்படுவதாகவுமில்லை. உங்களுக்கு நான் மகள் மாதிரி. ரெங்கசாமி கெட்டிக்காரன்தான். எனக்கு நன்மையே செய்திருக்கிறான். ஆனால் உங்களைப் பார்க்கத்தான் பாவமாயிருக்கிறது!"

அதிகாலை நேரத்தில் வரும் கனவு உண்மையாகும் என்பார்களே அப்போது ரெங்கசாமி கபட நாடகம்தான் நடிக்கிறானா...? அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அதற்குமேல் பேசவும் முடியவில்லை. அங்கிருந்து புறப்பட்டார்.

பொழுது புலர்ந்தது. பொய்யா? உண்மையா? புயலா? தென்றலா? காயா? பழமா? ஆபீசிற்கு வந்து ஆசனத்தமர்ந்ததிலிருந்து மாறி மாறி ரெங்கசாமியைத்தான் துருவிப் பார்த்தாள். 'வாட்டமில்லாமல் கல கல்ப்பாக அல்லவா இருக்கிறான்...! காரியம் வெற்றி என்றால் காதைக் கடிக்க ஓடோடி வருவானே...! அதுவுமில்லை.'

காந்தாவின ஆசனத்தை மெதுவாக ஓரக் கண்ணால்......ஆ......!

## மூன்று மாதங்களில்

### 861 ரயில் விபத்துகள்

1954 நவ. 1-ந் தேதி முதல் 1955 ஜன. 31-ந் தேதி முடிய உள்ள காலத்தில் 861 ரயில் விபத்துக்கள் நேரிட்டதில் 13 பேர் கொல்லப்பட்டனர், 17 பேர்பலத்த காயத்திற்குள்ளாயினர் என்று மக்கள் சபையில் ஒரு கேள்விக்கு உதவி ரயில்வே மந்திரி திரு ஓ. வி. அளகேசன் பதிலளித்தார்.

1954ல் முதல் 11 மாதங்களில் இந்தியாவிலிருந்து 21972 டன் மீன் ஏற்றுமதி செய்யப்பட்டதாக உணவு மந்திரி திரு ஏ. பி. ஜெயின் ஒரு கேள்விக்கு விடை அளித்தார்.

என்ன நேரமாகியும் அவளைக் காணோம் அங்கே...? வியர்த்துக் ககாட்டி விட்டது மனிதருக்கு.

தபால்களை மேஜையில் வைத்து விட்டு குழைவோடு நின்றான் ரெங்கசாமி.

பேச வாயெடுத்தவர் திடுக் கென்று மேலே இருந்த அக் கடிதத்தின் முத்து முத்தான கையெழுத்துக்களைக் கண்டதும்......

"சரி நீ போ...!" என்றார். அக் கடிதத்தைப் பிரித்தார்.

**"ஆசை அத்தானுக்கு,**

காந்தா பணிவான வணக்கம்.

அவசரம்தான். மிக மிக அவசரம்தான். இன்னும் இரு தினங்களில் எனக்கு உடம்பு சரியில்லை ஆபத்து என்று தந்தி கொடுக்கிறேன். ஒரு வாரம் லீவு எடுத்துக் கொண்டு புறப்பட்டு வாருங்கள்.

ஆண்கள் கெடுமதியாளர்களாக விளங்கிற நம் சமூகத்தில் பெண்கள் உத்தியோகங்களில் இருப்பது ஆபத்து என்று நீங்கள் பல தடவை கூறினீர்கள். அது இப்போது உண்மையாகி விட்டது.

நீங்கள் பி. ஏ. படித்திருந்தும் உத்தியோகம் கிடைக்காததினால் என்னை மணந்த பின் என்ஜினியரிங் தேர்வு பெற பெங்களூர் சென்றீர்கள். பொருளாதாரத் தொல்லை நீங்க நான் உத்தியோகத்தில் நுழைந்தேன்.

எங்க பாங்கியின் ஏஜண்டு ஒரு கிழட்டுப் பிணம். என்னை வேலைக்கு எடுத்த நாளிலிருந்தே பியூன் ரெங்கசாமி உதவியுடன் கீழ்த்தரமாக நடந்து கடைசியில் கேட்டே விட்டேன். எனக்கு இன்னும் கல்யாணமாக வில்லை என்று நம்பிக்கொண்டு வாழ்க்கைத் துணைவியாகவா இல்லை என்றால் இஷ்டத்திற்கு நட என்கிறான்.

இன்று இதைப் பாங்கியிலுள்ள குமாஸ்தாக்களிடம் எல்லாம் கூறி விட்டேன். 15 தினங்கள் லீவிற்குக் கடிதமும் ஏஜண்டிற்கு எழுதி விட்டேன்.

நீங்கள் வந்ததும் டைரக்டர்களிடம் நேரில் கூறி இவனுக்குப் புத்தி புகட்ட வேண்டும். தந்தி கிடைத்ததும் லீவு வாங்கிக் கொண்டு வரவும். அவசரம்...! அவசரம்...!!

அன்பு
காந்தா."

ரெங்கசாமி வலிய வந்த தன்னிடம் எதுவும் பேசாமல் இருகக இருக்க மனிதர்பாடு மண்டை


**சிறுவர்களுக்கான சிறந்த கதைப் புத்தகங்கள்**

| | | |
|---|---|---|
| பச்சைப் பாவாடை | ... | 0 8 |
| பொம்மை வண்டி | ... | 0 8 |
| சேரநாட்டு வீரன் | ... | 0 8 |
| பாபு சர்க்கஸ் | ... | 0 8 |
| திருக்குறள் கதைகள் I | ... | 0 8 |
| திருக்குறள் கதைகள் II | ... | 0 8 |
| திருக்குறள் கதைகள் III | ... | 0 8 |
| திருக்குறள் கதைகள் IV | ... | 0 8 |
| வேடிக்கைக் கதைகள் I | ... | 0 8 |
| வேடிக்கைக் கதைகள் II | ... | 0 8 |

**ஸ்ரீமகள் கம்பெனி,**
**சென்னை-1**

கிறு கிறுத்துவிட்டது. ஐயோ எல்லாருக்கும் தெரியுமாமே...!

'சிக் லீவ்' போட்டுவிட்டு நிருவாக டைரக்டரை அன்றிரவே சந்தித்தார். பிறகு ஆபீசிற்கே வரவில்லை. அடுத்த மூன்ரும் நாள் கோவை கிளைக்கு மாற்றமாகிவிட்டார்.

கோவையிலிருந்த ஏஜண்டு திருவேங்கடம் சென்னை வந்து விட்டார். லீவு முடிந்து காந்தாவும் அன்று வேலைக்கு வந்து விட்டாள.

வணக்கம் கூறிய ரெங்கசாமி புன்முறுவல் சிந்தியபடி கூறினன் "அம்மா உங்க ஐடியா அபாரம்!" என்று.

..................................................

எண்ணி நாற்பது தினங்கள் தான். அன்றையத் தபால்களில் புக் போஸ்டில் வந்த அழைப்பிதழைப் பார்த்தபோது விசுவாநாதரின் சிந்தனை அவமானத்தில் சிக்கியது.

ஆமாம்...வந்த அழை பிதழ் வேறு எதுவுமில்லை. காந்தாவின் திருமணம். மணமகனே பியூன் ரெங்கசாமியின் புத்திரன் செல்வமணி பி. காம்.

ரெங்கசாமி ஆதியிலிருந்தே சதி செய்தே விட்டான் என்பதை அறிந்தார். வாழ்த்து தந்தி ஒன்றும் கொடுத்தார்.

பெண்மையின் திண்மையை அறிந்த இக் கட்டத்தில் காந்தாவைப் போன்ற உறுதிமிக்கவர்களே தமிழகத்திற்குத் தேவை என்பதை உணர்ந்தார்.

காந்தா சோதனையில் கலங்கவில்லை. தொல்லை வருகிறதே என்று கவலைப்படவில்லை. கற்பனை வெள்ளம் கரைபுரண்டது. களம் கண்டாள். கல்யாணம் நடந்துவிட்ட மாதிரியும் கணவனுக்கு உண்மையை எழுதி வரும்படி வேண்டுவதாகவும் கடிதம். லீவு வேண்டும் என்ற கடிதத்தைக் கைத் தவறுதலாகக் கணவனுக்கு அனுப்பி விட்டது போலவும் கணவனுக்கு எழுதிய கடிதம் ஏஜண்டு கவரில் அடைக்கப்பட்டு விட்டது போலவும் தோன்றும்படி செய்தாள். மானத்திற்கு அஞ்சிய மனிதன் ஓடோடி போனன் கோவைக்கு. அதற்குப் பிறகுதான் பியூன் ரெங்கசாமி மகனை **ஆசை அத்தானக** அடைந்தாள்.

---


# சிலந்திக் கூடு

**ஏ. வி. பி. ஆசைத்தம்பியின்**

அரிய கற்பனைக் களஞ்சியம்

சூழ்நிலையும் சந்தர்ப்பமும் மனித வாழ்வை ஓர் சிலந்திக் கூடாக மாறுவதைச் சித்தரிக்கும் சிறந்ததோர் கதை விருந்து! விறுவிறுப்பான தமிழ் நடை! படிக்கப் படிக்கப் பரவசமூட்டும் சொற் சித்திரம்.

**விலை ரூ. 1—0—0**

**கலைமன்றம் — சென்னை-1.**






## காட்சி—10

கத்தேரின-தீஸ்ப்-ஆன்ழெல்லோ

தீஸ்ப்: அரசே ராணி நஞ்சு அருந்த உடன்பட்டு விட்டார்கள்,

ஆன்: (கத்தேரினவைப்பார்த்து) ஊம்—உடனே ஆகட்டும்.

கத்: (நஞ்சு சீசாவை எடுத்துக் கொண்டு—தீஸ்பைப் பார்த்து) நீங்கள் என் கணவரின் ஆசை நாயகி என்பது எனக்குத்தெரியும். உங்கள் உள் எண்ணம் என்ன? மறைவான நோக்கமென்ன? என்பதெல்லாம் விளங்காமலா இருக்கிறது. என்னைக் கொன்றுவிட்டு, என் கணவனை, சர்வாதிகாரியை—மன்னனை உன் கைவசப்படுத்திக் கொண்டு ராணியாகப் பார்க்கிறாய் சி! நீயும் ஒரு பெண்ணா? பலருக்கு உடலைவிற்ற பேய்க்கு நல்லெண்ணம் உண்டாகுமா? இப்படி இருபத்திரண்டு வயதில் இறக்கின்ற கொடுமையான நிலை ஏற்பட்டுங் கூட வேறொரு உயிரைக் காப்பாற்றுகிறேன். உன்போலல்ல நான். பெண்ணினத்தின் பெயரையே கெடுத்துவிட்டாயே. கொலைகாரப் பேயே.

(நஞ்சைக் குடிக்கிறாள்)

தீஸ்: (தனக்குள்ளே) வீணான பேச்சு—பாவம்.

ஆன்: (வாளை வைத்துக் கொண்டிருக்கிற வேலைக்காரர்களைப் பார்த்து) சரி நீங்கள் போகலாம்.

கத்: ஐய்யோ! நஞ்சு தலைக்கேறி விட்டதே. உடல் நடுங்கு

கிறதே—(தீஸ்ப்பை முறைத்துப் பார்த்து) நயவஞ்சகப் பேய்! கொலைகாரப் பிசாசு!

(ஆன்மெல்லோவைப் பார்த்து) இப்பொழுது மகிழ்ச்சிதானே உங்களுக்கு? நான இனி இறக்கப் போகிறேன். இனி நான் உங்களுக்குப் பயப்படவேண்டியதில்லை நான் சொல்வதை இப்பொழுதாகிலும் கேளுங்கள்—ராட்சசக் கணவனே! நான் ஒரு மனிதனைக் காதலித்தது உண்மைதான். ஆனால் நான் மாசற்றவள். தூய்மை நிறைந்தவள். கட்டிய கணவனை இது வரையில் ஏமாற்றாதவள். கற்பினின்றும் சிறிதும் வழுவாதவள்.

ஆன்: எனக்கு நம்பிக்கையில்லை

தீஸ்: (தனக்குள்) நான் நம்புகிறேன்—அவள் தூய்மையானவள். அதில் சிறிதுகூட ஐயமில்லை

கத்: தலை சுற்றுகிறது...நிற்க முடியவில்லை... விழுந்துவிடுவேன் போல் தோன்றுகிறது. வேண்டாம் இந்த இருக்கை வேண்டாம்—என்னைத் தொடாதீர்கள் நான் முன்னமே சொன்னேன்—நீங்கள் கணவரல்ல. கணவனென்ற அந்தத் தூய சொல்லுக்கே ஏற்றவரல்ல. நீங்கள் ஆண்மையற்றவர். மனிதப் பண்பற்றவர். ஆம், கயவாளி! (தடுமாறிக்கொண்டே பூசை அறைக்குள் நுழைகிறாள்) நான் அங்கே சாகப்போகிறேன். ஆம் கடவுளின் முன்பு, அமைதியாக, தனியாக உங்கள் கண்ணிலே படாமல் சாகப் போகிறேன். (பூசை அறையின் வாயிற்படியைத் தட்டுத்தடுமாறிப் பிடித்துக்கொண்டு) நான் கடவு



ளைத் தொழுதுகொண்டே சாகப் போகிறேன். (பூசை அறைக்குள் நுழைகிருள்)

ஆன்: ஏய்! யாரங்கே!

(வேலைக்காரன் வருகிருன்)

இந்தா என் இரகசிய அறையின் சாவி. அங்கே இரண்டு மனிதர்கள் இருக்கிருர்கள். ஒன்றும் பேசாமல் அவர்களை இங்கே அழைத்துவா.

(வேலைக்காரன் போகிருன்)

(தீஸ்ப்பைப் பார்த்து) அறையில் இருக்கிற இரண்டு இராக் காவற்காரர்களிடம் சில சொல்லப் போகிறேன். அது முடிந்தபிறகு இனி இங்கு நடக்கவேண்டிய வேலைகள் உன் பொறுப்பு. மிக மறைவாக நடக்கவேண்டும்—வெளிக்கு ஒன்றுமே தெரியக் கூடாது. நினைவிருக்கட்டும். யாருக்குந் தெரியக்கூடாது.

(இராக் காவலர்கள் வருகின்றனர்.)

## காட்சி—11

ஆன்மெல்லோ, தீஸ்ப்—இராக் காவலர்கள் இருவர்.

ஆன்: (இராக் காவலர்களைப் பார்த்து) இரவுக் காவலர்கள் நீங்கள் தானே! சரி—நம் அரண்மனையில் கல்லறை எங்கே இருக்கிறதென்று உங்களுக்குத் தெரியுமா?

இருவரில் ஒருவன்: தெரியும் அரசே!

ஆன்: கோட்டையில் இன்று போர்வீரர்கள் மிகுதியாக இருக்கின்றுர்கள்—ஒருவருக்கும் தெரியாமல் நீங்கள் அங்கே போகமுடியுமா? திரும்பி வரமுடியுமா?

ஒருவன்: ஒருவர் கண்ணிலும் படாமல் போய்வர ரகசிய வழியிருக்கிறது அரசே!

ஆன்: சரி. (பூசை அறையைக் காட்டி) அங்கே ஒருபெண் இறந்து கிடக்கிருள்—கல்லறையில் ஒரு குழி தோண்டப்பட்டிருக்கிறது, அவளை எடுத்துப்போய் அங்கே அடக்கம் செய்துவிடவேண்டும்—தெரிகிறதா?

ஒருவன்: அப்படியே அரசே!

ஆன்: (தீஸ்ப்பைப் பார்த்து) யாவும் மறைவாக நடக்கவேண்டும் கவனித்துக்கொள். (போகிருன்)

தீஸ்ப்: (ஒரு பணமுடிப்பை அவர்களிடம் கொடுத்து) இருநூறு பொன் நாணயங்கள் இதிலிருக்கிறது. நான் சொல்வதைப் போல் நடந்தால், நாளைக் காலையில் இதைப்போல் இருமடங்கு உங்களுக்கு. என்ன சொல்கிறீர்கள்

இருவரும்: (பணமுடிப்பை வாங்கிக்கொண்டு) அப்படியே செய்கிறோம்.

முதலில் கல்லறைக்கு.

## காட்சி—12

தீஸ்ப்-இராக் காவலர்கள்இருவர் ஒரு வேலைக்காரன்.

(கத்தேரினு பிணத்தின்) மேல் கரும் துணியால் மூடப்பட்டுக் கட்டிலில் கிடத்தப்பட்டிருக்கிருள். அவள் மார்பின் மீது பித்தளைச் சிலுவை வைக்கப்பட்டிருக்கிறது)

தீஸ்ப்: கத்தேரினுவின் முகத்தை நன்ருகப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிருள். முகம் வெளுத்திருக்கிறது. (வேலைக்காரனைப் பார்த்து) இப்படி விளக்கை எடுத்துவா! மீண்டும் கத்தேரினுவைப் புரட்டிப் பார்க்கிருள்—கண்களை—உதடுகளைச் சோதிக்கிருள். கட்டிலின் திரையை இழுத்துவிட்டு கட்டிலை மூடுகிருள். (காவலர்களைப் பார்த்து) நீங்கள் கல்லறைக்குச் சென்றுவந்ததை யாரும் பார்க்க

வில்லையே! நிச்சயமாகச் சொல்லு கிறீர்களா?

காவலர்களில் ஒருவன்: ஒரே இருட்டு. சத்தடங்கிவிட்டது. நாங்கள் போகும்போதும், வரும்போதும் ஒருவர்கூட எதிர்ப்படவில்லை, நீங்கள்தான் பார்த்தீர்களே! குழியில் பிணப் பெட்டியை வைத்துக் குழியை மூடிவிட்டோம்—மேலே கருங்கற் பலகையை வைத்து அடைத்துப் பூசிவிட்டோம்-யாரும் ஐயப்படமுடியாது. கல்லைத் தோண்டிப் பார்த்தால்கூடப் பெட்டி இருக்கும். ஆனால் பெட்டியினுள் பிணம் இருக்கிறதா? இல்லையா? என்பது தெரியாது. ஆனால் மக்களுக்கெல்லாம் இன்று இறந்தவர் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள தென்பதில் சிறிதும் ஐயம் உண்டாகாது. நீங்கள் ஏன் வீணாகக் கவலைப்படுகிறீர்கள். வேலையைச் செவ்வனே முடித்துவிட்டோம்.

தீஸ்: சரி, நல்லது செய்தீர்கள் (வேலைக்காரனைப்பார்த்து) எங்கே ஆண் உடைகள்? உடனடியர்கத் தேவை என்றேனே. எங்கே அவைகள்?

வேலைக்: (இருட்டில் இருந்த சிறு மூட்டையைக் காட்டி) இதோ இருக்கிறதம்மா!

தீஸ்: உன்னிடம் சொன்ன குதிரைகள்? தயாராக இருக்கின்றனவா?

வேலைக்: சேணத்தோடு தயாராக இருக்கின்றன.

தீஸ்: நல்ல குதிரைகளா?

வேலைக்: அருமையான குதிரைகள்.

தீஸ்: சரி, (காவலர்களைப் பார்த்து) நல்ல குதிரைகளாக இருந்தால், இந்த வேனீஸ் எல்லையைத் தாண்டிப்போக எவ்வளவு நேரம்செல்லும்.

காவலர்: குறுக்கு வழியாகச் செலவதாக இருந்தால் மூன்றே மூன்று மணிநேரம் போதும்—வழி நல்லவழி.

தீஸ்: சரி, நீங்கள் போகலாம்—நாளைக்கு வந்து உங்கள் பரிசுத் தொகையைப பெற்றுக்கொள்ளுங்கள்—இங்கு நடந்ததைப் பற்றி வாயைத் திறக்கக்கூடாது. நினைவிருக்கட்டும்—தெரிகிறதா? சரி போங்கள்.

(காவலர்கள் போகின்றனர்.)

(வேலைக்காரனைப் பார்த்து) நீ இந்த அறைக் கதவை மூடு. எந்த அவசர வேலையாயிருந்தாலும் யாரையும் உள்ளே விடாதே.

வேலைக்: ரொதோல்போ வருகிற வழியைக்கூடவா மூடவேண்டும். அவர் அடிக்கடி அந்தவழியாகத்தான் வருகிறார். அதைக்கூடவா அம்மா மூடிவிடவேண்டும்.


## திராவிடரியக்க நூல்கள்

| | | ரூ. | அ |
|---|---|---|---|
| தூத்துக்குடி துப்பாக்கிப் பிரயோகம் | ... | 0 | 8 |
| இரத்த காவியம் | ... | 0 | 8 |
| சிறையில் கருணாநிதி | ... | 0 | 8 |
| டால்மியாபுரப் போராட்டம் | | 0 | 8 |
| சித்தூர் போராட்டம் | ... | 0 | 8 |
| கல்வித்திட்டப் போராட்டம் | | 0 | 8 |
| சிறையில் திராவிடத்தலைவர்கள் | | 0 | 8 |
| திரும்பிப் போ | ... | 0 | 8 |
| ஆகஸ்டு ஆறு | ... | 0 | 8 |

ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை-1.

தீஸ்: வேண்டாம். அதை மூடாதே. அவர் வருவதாக இருந்தால் வரட்டும். மற்றவர்களை விடாதே தெரிகிறதா? அவர்மட்டும்தான் வரலாம். வேறு யாரும் எந்த அவசரமாக இருந்தாலும் விடாதே. நீகூட நான் கூப்பிட்டால்தான் வரவேண்டும்—போ! கதவை மூடிவிட்டுப் போ!

(வேலைக்காரன் போகிறான்.)

காட்சி—13

தீஸ்ப்-கத்தேரினு கட்டிலில் பிணம் போலக் கிடக்கிருள்.

தீஸ்: இனி நீண்டநேரம் காத்திருக்கவேண்டியதில்லை என்று நினைக்கிறேன். அவளுக்குச் சாகத் துணிவில்லை. காதலிக்கப்பட்ட பிறகு யாருக்குத்தான் சாக மனம் வரும். காதல் இல்லையென்ருல் யாருக்குத்தான் வாழ மனம் வரும். (கட்டில் பக்கம் திரும்பி) நீ மகிழ்ச்சியாகச் சாவாய் அல்லவா? என் தலை வெடித்துவிடும்போல் இருக்கிறது. இந்த மூன்று இரவாக நான் தூங்கவே இல்லை: முந்திய நாள் இரவு விழா! நேற்றைய இரவு உங்கள் திருட்டுச் சந்திப்பைக் கண்டுபிடித்தேன்!! இன்றைய இரவு...... நாளைககாவது தூங்குவேனு என்னவோ— (நாடக அரங்கை நான்கு பக்கமும் பார்க்கிருள்) எல்லோரும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிருர்கள். கை தட்டுகிருர்கள்—இந்த நடனம் நன்ருக இருக்கிறது. அந்த இசை இனிமையானது என்கிருர்கள்—அறிவற்றவர்கள்! அடடா என்ன அழகு! என்ன நடிப்பு! என்ன நொடிப்பு! என்றெல்லாம் புகழ்கிருர்கள். பூமாரி சொரிகிருர்கள்! ஆனல் உள்ளம் உடைந்து உதிரம் சொட்டுவதை அவர்கள் உணர்வதில்லை. ரொ தோல் போ! ரொதோல்போ!! நீ இன்றேல் எனக்கு வாழ்வில்லை. விளக்குக்கு எண்ணெய், விழிக்கு ஒளி, விளைநிலத்திற்கு மழை எப்படியோ அப்படியே நீ எனக்கு. நான் இறந்தால் உன் அருகிலேயே இறக்க வேண்டும். உன் எண்ணத்திலிருந்து என் நினைவைப்பிரிக்க முடியாத வகையிலே இறக்கவேண்டும். மற்ற பெண்களோடு இன்பமாக இருக்கும்போதுகூட என் நிழல் உன்னைப்பிரியாதிருக்கின்ற நிலையிலே இறக்கவேண்டும். ஆம்! அந்த நாட்களில் நான் அடிக்கடி இப்படித்தான் நினைத்தேன். சாவு—சாவைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நீ என்றும் என்னை மறக்கக்கூடாது, ஆம்! அந்த முடிவில்தான் இருக்கிறேன். நீ இன்பமாக இருந்தால் போதும். என்னைப் பற்றிக் கவலையில்லை. காதல் எனக்குக் கானல் நீராகி விட்டது.

(கட்டிலினருகில் போகிருள்; கத்தேரினுவைப் பார்க்கிருள்; அந்தப் பித்தளைச் சிலுவையை எடுக்கிருள்) இந்தச் சிலுவை உலகத்தில் ஒருவருக்கு நன்மையைத்தான் செய்திருககிறது. ஆனல் அம்மா! உன் மகளுக்கல்ல! உன் உரிமை மகளுக்கல்ல! உன் அன்பு மகளுக்கல்ல! (சிலுவையை மேஜைமீது வைக்கிருள். கதவு திறக்கிறது—ரொதோல்போ வருகிருன்.)

—அடுத்த இதழில் முடியும்.

# புகைப்படக் கலைப்பகுதி

★

அழகு தவழும் இயற்கைக் காட்சிகள், சிந்தனையைத் தூண்டி விடும் சிறந்த காட்சிகள், குழந்தைச் செல்வங்களின் விதவிதமான காட்சிகள், பண்டை வரலாற்றுக் காட்சிகள், காமிருக்காரர்களின் திறமையை உணர்த்தும் உன்னதக் காட்சிகள்—இவைகள் காமிரு வைத்திருக்கும் வாசகர்களின் காமிருவுக்குள் விழுந்திருந்தால் அந்தப் புகைப்படங்களை எங்களுக்கு அனுப்பலாம்.

**முதல் தரமான புகைப் படத்திற்கு பரிசு ரூ. 10.**

**இரண்டாம் பரிசு ரூ. 5.**

பரிசு பெறும் படங்களும், பிரசுரத் தகுதிபெறும் படங்களும் கலை மன்றம் அட்டையின் 2-வது 3-வது பக்கங்களில் பிரசுரிக்கப்படும்.

புகைப்படங்கள் அனுப்புவோர் கீழ்க் கண்ட நுழைவுச் சீட்டுடன் அனுப்புதல் வேண்டும். மூன்று படங்களுக்கு ஒரு நுழைவுச் சீட்டு வீதம் படங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும். அனுப்பும் படம் ஒவ்வொன்றும் புல்சைஸ் (Full Size) அளவில் பிரிண்ட் போட்டு அனுப்புதல் வேண்டும்.

**புகைப்படக் கலைப் பகுதி**

**கலைமன்றம் சென்னை—1.**

## புகைப்படக் கலைப்பகுதி
## நுழைவுச் சீட்டு

பெயர் ............................................................

வயது: ............................................................

காமிராவின்பெயர்: ............................................................

அனுபவம்: ............................................................

இணைத்துள்ள படங்களின் எண்ணிக்கை } ............................................................

............................................................

நாள்: .......................1955 கையெழுத்து

# மே தினச் சிறுகதைப் போட்டி

எதிர்பாராத அளவுக்கு ஏராளமான கதைகள் குவிந்து விட்டமையால் இன்னும் பரிசிலனை முடிவடைய வில்லை. துரிதமாக்ச செயலாற்றுகிறோம். கீழ்க் கண்டவர் கள் கதைகளைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார் கள்.

திரு. ரா. தணலன்,
,, மி. மதுரம்.
,, பால்வண்ணன்,
,, விருதை-ந. இராமசாமி,
,, பூவண்ணன்.

கூடிய விரைவில் முடிவை அறிவிக்கிறோம்.

—ஆசிரியர்.

# உலகைச் சுற்றி

## அணுசக்திப் பயிற்சி அமெரிக்காவில்

புதுடில்லி, மார்ச்:—28

இன்னும் சில நாட்களில் நம் நாட்டு விஞ்ஞானிகள் மூவர் அணு சக்தி பற்றிய பயிற்சிபெற அமெரிக்காவிற்குப் புறப்படுகிறார்கள்.

மிஸ் சாந்தா வி. ஐயங்கார், டாக்டர் இ. கே. ஜானகி அம்மாள். டாக்டர் கே. டி. ஜேக்கப் ஆகிய இம் மூவரும் அமெரிக்காவில் படிக்கப்போவது அணுக்கதிரியக்கமுள்ள ஐஸடோப்புகளைப் பயன்படுத்துவது பற்றிய அடிப்படைகளாகும்.

பயிற்சி அமெரிக்காவில் ஓக்ரிட்ஜ் அணுசக்தி தொழிற்சாலையில் மே-2-ந் தேதி தொடங்கி, நான்கு வாரம் நடக்கும்.

ரேடியோ ஐஸடோப்புகளின் உபயோகம் மட்டுமன்றி, அணுகதிரியக்கத்தைக்கண்டு பிடிக்கும் கருவிகளுக்கு அவை காட்டும் அளவுகளைக் குறிக்கும் குறிகளை அவற்றில் பொறிக்கும் வழிகளையும், இரசாயனத் துறையிலும் உயிர்நூல் துறையிலும் ரேடியோ ஐஸடோப்புகளைப் பயன்படுத்தும் முறைகளையும் அவர்கள் படித்தறிவார்கள்.

இத்தகைய பயிற்சி இதற்குமுன் 41 முறை நடைபெற்றுள்ளது. ஆயினும் இதுவே அயல்நாட்டு விஞ்ஞானிகளுக்கென்றே ஏற்பாடாகிய முதல் பயிற்சித் திட்டமாகும். சகல நாடுகளும் ஒன்று சேர்ந்து அணுசக்தியை ஆக்கமான வேலைகளுக்குப் பயன்படுத்தும் துறையில் ஊக்கமாகக் கலந்து கொள்ளும்பொருட்டு அமெரிக்க அணுசக்திக் கமிஷன் இதுபோல் பல திட்டங்கள் வகுத்துள்ளது. வர வர இன்னும் அதிக அந்நிய விஞ்ஞானிகளுக்கு அமெரிக்கா பயிற்சியளிக்கும் என்று தெரிகிறது.

இப்பொழுது நடக்கப்போகும் பயிற்சிக்கு விஞ்ஞானிகளும் தொழில் நுட்ப வல்லுநர்களுமாக 32 பேர் செல்வர். இவர்கள் யாவரும் ஒன்று இப்பொழுதே ரேடியோ ஐஸடோப்புகளைப் பயன்படுத்துபவர்கள் அல்லது கூடியசீக்கிரம் அவற்றைப் பயன்படுத்தப் போகிறவர்கள். அவர்கள் பெரும்பாலும் பல்கலைக்கழக ஆசிரியர்களாகவும் ஆராய்ச்சிக் குழுத் தலைவர்களாகவும் மற்ற விஞ்ஞானிகளுக்குத் தாம் கற்றதைக் கற்பிப்போராகவும இருப்பார்கள். இவர்கள் குறைந்தது பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகவும், நல்ல ஆராய்ச்சி அநுபவமும், ஆங்கில அறிவும் உள்ளவர்களாகவும் இருப்பார்கள். முக்கியமாக அவர்கள் பட்டம் விஞ்ஞானத்துறைய பட்டமாக இருக்கும். அமெரிக்காவின் ரேடியோ ஐஸடோப்புகளைப் பெறும் தகுதியுள்ள நாடுகளில்

உள்ளவர்களே தெரிந்தெடுக்கப் படுகிறார்கள்.

பயிற்சி மாணவர்கள் பெரும்பாலும் ஆராய்ச்சிக் கூடங்களில்தான் இருப்பார்கள். என்றாலும் சொற்பொழிவு கேட்டலும் ஆராய்ச்சிக் கூட்டங்களில் கலந்து கொள்ளலும் இருக்கும். ரேடியோ ஐஸடோப்பைத் தக்கபடி ஆபத்தில்லாமல் பயன்படுத்த வசதியான ஆராய்ச்சிக் கூடங்கள் அமைப்பதுபற்றி விசேஷமாகக் கவனிக்கப்படும்.

வைத்தியம், உழவு, தொழில் இவற்றின் சிககல்களைத் தீர்க்க ரேடியோ ஐஸடோப்புகளைப் பயன் படுத்துவதுபற்றிப் பயிற்சியளிக்கப் படும். சில ஆண்டுகளாக இவ்விதம் 2,000 விஞ்ஞானிகள் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்கள் அணுவை அகில உலகுக்கும் நன்மையாகக்கூடிய முக்கியமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

## இந்தியக் கலைஞர்களுக்கு அமெரிக்க விமர்சகரின் பாராட்டு

வாஷிங்டன், மே—6

இந்தியாவின் பிரபல சாரோட் வித்வான் அலி அக்பர்கானும் தபேலா வித்வான் சதுர் லாலும் சமீபத்தில் அமெரிக்காவில் நடத்திய ஓர் இன்னிசைக் கச்சேரியை பிரபல அமெரிக்க சங்கீத விமர்சகர் பால் ஹியூம் வெகுவாகப் பாராட்டி வாஷிங்டன் போஸ்டு டைம்ஸ் ஹெறால்டு பத்திரிகையில் எழுதியுள்ளார்.

சுமார் 30 நிமிஷங்கள் வரையிலும் ஒரே ராகத்தை வாசித்ததைத் தாம் நன்கு ரசித்ததாகவும் மேற்கத்திய நாடுகளின் சங்கீதத்தைவிட இந்திய சங்கீதம் பழையதாகுமென்றும் அதன் பொருள் பூராவும் மேனாட்டவருக்குத் தெரியாவிட்டாலும் அதனை அவர்கள் ரசிக்க முடியுமென்று ஹியூம் தெரிவித்தார்.

அதே நிகழ்ச்சியில் நாட்டிய மாடிய சாந்தாராவையும் அவர் மிகவும் பாராட்டி எழுதியுள்ளார்.

## ஆக்க வேலைக்கு அணுசக்தி இந்திய விஞ்ஞானிக்கு அமெரிக்காவில் பயிற்சி

ஒக்ரிஜ், மே—2

இந்தியா, பாகிஸ்தான், எகிப்து முதலிய 21 நாடுகளைச் சேர்ந்த 30 விஞ்ஞானிகள் ஒக்ரிட்ஜ் சமூகத்தினரால் வரவேற்கப்பட்டனர். அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தும் முறைகளைப் படிப்பதற்காகஇங்கு வந்துள்ளனர்.

தேசிய ஆராய்ச்சி சாலையிலுள்ள அணுஉலை, அணுசக்தி கண்காட்சி முதலியவைகளுக்கு இவர்கள் விஜயம் செய்தனர்.

ஒக்ரிட்ஜ் அணு ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் 1948 முதல் இத்துறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரையிலும் அங்கு தேர்ச்சி பெற்றுள்ள சுமார் 1300 பேர் வைத்தியம், பௌதிகம், ரசாயனம், என்ஜினியரிங், விவசாயம், தொழில், மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல் முதலிய துறைகளில் வேலைசெய்கின்றனர்.

நான்கு வாரங்கள் நடைபெறும் இப்பயிற்சித் திட்டத்தின் தலைவர் டாக்டர் ரால்ப் டி. ஓவர்மான் ஆவர்.

இப்பொழுது நடைபெற்று வரும் அணுசக்திப் பயிற்சியில் பங்குகொள்ளும் இந்திய விஞ்ஞானிகள் ஈ. கே. ஜானகி அம்மாள், போஷிசென் என்னும் இருவர் ஆவார்கள்.

எல்லோரும் பாராட்டும், எழில் மிகுந்த கலை ஏடு!

ஜூன் மாதக்

# கலை அரங்கம்

## இதழில்...

- 'கார் சொல்லும் கதை'—ஏ. எம். ராஜவின் கார், தன் வாழ்க்கையைப் பற்றி எழுதுகிறது! ஆச்சரியப்படாதீர்கள்; படித்தால் புரியும்!
- "என் வாழ்வில் புதுப் பாடம்"— பிரபல பின்னணிப் பாடகி பி. லீலா எழுதுகிறார்.
- "லீலா ராணி"—கோவி. மணிசேகரன் தரும் அற்புதமான சிறு கதை. இக்கதை மேலை நாட்டுப் பிரபல நடிகர், காலஞ்சென்ற வெலண்டினே வாழ்க்கையைத் தழுவியது. ஆசிரியரின் ஓரங்க நாடகங்கள் ஒவ்வொரு அரங்கத்திலும் இடம் பெறும்,
- 'நேரில் கண்டவை'—ஸ்டுடியோவில் நடந்த சுவையான நிகழ்ச்சிகள்.
- "லஸ் ஃகார்னர்"—சிங்காரச் சென்னையின் சந்தடிமிக்க ஒரு மூலை பற்றிய புது விதமான கண்ணோட்டம், ப. சி. அ. வணங்காமுடி எழுதுகிறார்.
- 'டிஸ்னியின் புது உலகம்'—படிக்க வேண்டிய கட்டுரை. பிரபல கார்ட்டூன் நிபுணர் வால்ட் டிஸ்னியைப் பற்றி ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியது.
- விமர்சனம்—போர்ட்டர் கந்தன், கிரகலட்சுமி, கணவனே கண்கண்ட தெய்வம்
- 'காற்றினிலே வரும் கீதம்'—டி. வி. ரத்னம், பி. லீலா மற்றும் திரைப்படப் பாடகர்கள் பாடிய வானொலி விமர்சனம் இடம் பெறும்.

இன்னும் வழக்கமாக வெளி வரும் பகுதிகளினூடே அரிய சிறு சிறு செய்திகள் உங்களை மகிழ்விக்கும்.

**உங்கள் இதழுக்கு முன் கூட்டியே அறிவித்து விடுங்கள்.**

**கலைஅரங்கம்**

த. பெ. எண்: 275 சென்னை—1




**செல்லப்பிள்ளை**

நீண்ட காலமாக ஏ. வி. எம் முக்குள் இருந்து செல்வமாக வளர்ந்த செல்லப்பிள்ளை இம்மாத இறுதிக்குள் திரைக்கு வந்துவிடப் போகிறது. ஜாவர் சீத்தாராமன் "செல்லப்பிள்ளை"யை மிகமிகச் சிரத்தையெடுத்து வளர்த்திருக்கிறுராம். வளர்த்தது மட்டுமல்ல. அவர் பேனு பெற்றெடுத்ததும் கூட இந்தச் செல்லப்பிள்ளையைத் தான்.

**கண்ணீர்**

கல்லும் மண்ணும் கதை சொல்லும் நாட்டிலே கண்ணீர் ஏன் கதை சொல்லக்கூடாது?—கண்ணீரிலே பலவகை உண்டு—நீலிக் கண்ணீர், ஆனந்தக் கண்ணீர், துயரக் கண்ணீர்—இன்னும் எத்தனை எத்தனையோ கண்ணீர்! அவற்றில் இக்கண்ணீர் எதுவோ நாமறியோம். ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. கே. கே. புரடக்ஷன்சாரின் படமான "கண்ணீர்" இதுவென்று தெரிகிறது. இது மைசூர் பிரிமியர் ஸ்டுடியோவில் தயாராகிறது. "சொர்ணம்" பி. எஸ். சரோஜா பிரதான பாகத்தில் நடிக்கிறுர்.



கோடீஸ்வரனில் ஸ்ரீராமும் ராகினியும்

**புதையல்**

**விருதை. ந. ராமசாமியும், கவிஞர் கண்ணதாசனும்** தோண்டியெடுத்த புதையலை சிவாஜி பிக்சர்சார் தமிழகத்திற்கு விரைவில் பகிர்ந்தளிக்கப் போகிறுர்கள். வித்தியாவதி, ஏ. பி. நாகராஜன், ஏ. கருணாநிதி, முத்துலட்சுமி ஆகியோர் அப்புதையலின் மாணிக்கங்கள். டைரக்டர் சந்தோஷ் அந்த மாணிக்கங்களுக்குப் பட்டை தீட்டுகிறுர்.

## ஸ்ரீ 420

ராஜ்கபூர் — நர்கீஸ் நடிக்கும் மேற்படி படம் தமிழிலும் தயாரிக்கப்படலாமென்று தெரிய வருகிறது. தமிழ்ப்படம் இந்திவேலோடு வடக்கேயும், இந்திப் படங்கள் தமிழ் வாளோடு தெற்கேயும் போராடும் விந்தையே விந்தை!

**புண்யபூமி:**

"இரண்டு ஏக்கர் பூமி"யில் நடித்த பிரசித்திபெற்ற வடக்கத்தி நடிகை நிருபாராய் ஜெமினியின் "புண்யபூமி" யில் நடிக்க ஒப்பந்த மாகியுள்ளாராம்.

**எஸ்டேட் கூலி**

இது தமிழ்ப் படம்தான்! பாரதி தாசன் சொன்னரே "தமிழ் நாட்டில் தமிழ் தான் இல்லை," என்று அதை நினைவு கூர்ந்து கொண்டால் கூடப் போதும், இது தமிழ்ப் படம் என்று விளங்கி விடும்! மேற்படிப் பெயரில் வாஹினியில் ஓர் படம் தயாரா கிறது. கே. வேம்பு டைரக்ட் செய்கிறார்.



கோடீஸ்வரனில் புது விதமான பாத்திர மேற்று நடிக்கிறார் எஸ். பாலச்சந்தர்


# இலக்கிய நூல்கள்

| | ரூ. அ |
|---|---|
| திருக்குறள் பரிமேலழகர் உரை | 5 0 |
| திருக்குறள் விளக்கவுரை ... | 3 8 |
| திருக்குறள் சிறப்புரை ... | 1 4 |
| திருக்குறள் மூலம் ... | 0 8 |
| விவேக சிந்தாமணி மூலமும் உரையும் ... | 0 8 |

**ஸ்ரீமகள் கம்பெனி**

சென்னை—1


**டவுண் பஸ்**

இதுவும் தமிழ்ப் படம்தான்! "பெண்ணரசி"யைத் தமிழ் நாட்டுக்குப் பெருமையோடு அளித்த எம். ஏ.வி.பிக்சர்சார் தானஇந்தடவுண் பஸ்ஸையும் அளிக்கிறார்கள். இது ஓர் நகைக்சுவைக் களஞ்சியமாக இருக்குமாம். நகைச்சுவைக் கலைஞர் கருணாநிதி, ராஜ சுலோசன, ஏழுமலை, எம். எஸ். எஸ். பாக்கியம் இந்த...பிரயாணிகள். இது விரைவில் வெளிவருமாம்.

## பொறுத்தருள்க

'அழகு எரிந்தது' என்னும் தொடர் கதை இவ்வார இதழில் இடமின்மையால் பிரசுரிக்க இயலவில்லை.

—ஆசிரியர்.

# கேள்விகள் கொடுக்கப்படும்

கே: ரோஜாவை மொழிபெயர்த்துச் சொல்லுங்கள்?

அ. கலைமணி,
கோவை.

ப: மெல்லியலாரின் சிவந்த அதரங்கள்.

கே: மரணத்தை நினைத்து மனிதன் எப்போது பயப்படுகிறான்?

ஆர். ஏ. சாமுவேல்,
சென்னை.

ப: பூலோக சொர்க்கத்தையும், பரலோக நரகத்தையும் நினைத்து ஏங்குகையிலும், அஞ்சுகையிலும், பயப்படுகிறான்.

கே: மனிதனுக்கும் மிருகத்திற்கும் என்ன வித்தியாசம்?

ஏ. ஞானசம்பந்தம்,
திருச்சி.

ப: வித்தியாசம் எப்படி இருக்க முடியும்?

கே: கலை பிறந்த கதை எப்படி?

ஆர். கோபாலகிருஷ்ணன்,
ஆமத்தூர்.

ப: அவன் **பேசினான்**. அவள் சிவந்த இதழ் **விரித்துச் சிரித்தாள்!**

கே: மனித வாழ்வை எதற்கு ஒப்பிடலாம்?

தா. ஏ. கோவிந்தன்,
குடந்தை.

ப: எவரெஸ்டில் ஏறுதல்.

கே: மனித வாழ்வின் சிக்கல்கள் எப்போது ஒழியும்?

அ. மாரிமுத்து,
விருதுநகர்.

ப: மனிதன் **உண்மையான** மிருகமாக மாறும்போது.

கே: கலை கலைக்காகவா, மக்களுக்காகவா?

மு. கந்தசாமி,
மாத்தளை.

ப: சூழ்நிலைக்கேற்றவாறு வளைந்து கொடுக்கும் அந்தக் கலை எல்லோருக்கும், எதற்கும், எப்போதும் சொந்தமானது.

கே: பிச்சைக்காரர் பிரச்சினைகள் எப்போது தீரும்?

வி. சோழ வேந்தன்,
தஞ்சை.

ப: ஒன்று: அவர்களுக்கு வயிறு இருக்கக் கூடாது. இரண்டு: அவர்களுக்கு உயிர் இருக்கக் கூடாது. மூன்று: கெடுமதியாளரின் அரசு இருக்கக் கூடாது.

கே: ஆண் கருவுற்றால்......?

கு. குருசாமி,
மதுரை.

ப: "மால்தூஷியன்" சித்தாந்தம் நிச்சயமாகப் பொய்யாகிவிடும்!

Edited, Printed and Published by S. Francis at Srimagal Press,
122. Varadamuthiappan St., Madras-1.

# எழில் மிகு இயற்கையின் இனிமை



*எளியவர் சிந்தும் வியர்வைத் துளிகளோ எழிலே! நீ ஏந்தும் பனித்துளிகள்?*

பிரசுரம் ஆர். எஸ். சுப்பையா, சென்னை.

# காலம் அழிக்க முடியாத

## கதைப் பெட்டகங்கள்

★

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| கசந்த கரும்பு | ... | 1 | 8 |
| சிலந்திக்கூடு | ... | 1 | 0 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | ... | 0 | 12 |
| இருண்ட வாழ்வு | ... | 0 | 12 |
| கொலேகாரி | ... | 0 | 12 |
| அவள் வாழ்வு | ... | 0 | 8 |
| முள் | ... | 1 | 0 |
| குமஸ்தாவின் பெண் | ... | 1 | 0 |
| தளபதி | ... | 1 | 0 |
| இன்பநிலா | ... | 1 | 0 |
| அரண்மனே அழகிகள் | ... | 1 | 8 |
| நல்ல பெண்மணி | ... | 2 | 4 |
| ஒரு துளி இரத்தம் | ... | 2 | 0 |
| மின்னல் | ... | 1 | 0 |
| சிலம்பு | ... | 0 | 12 |
| அந்தப்புரம் | ... | 0 | 12 |
| வாழமுடியாதவர்கள் | ... | 0 | 12 |
| பெரிய இடத்துப் பெண் | ... | 0 | 8 |
| தப்பிவிட்டார்கள் | ... | 0 | 6 |
| வாழ்க்கைப் போர் | ... | 1 | 0 |

**ஸ்ரீமகள் கம்பெனி**

சென்னே. — கோயமுத்தூர். — மதுரை.